Q.22:38.21195
M87
114713

No. 114713

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீரங்கமகத்துவம்.

இஃது

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,


ஆ. அண்ணாமலை முதலியார்

அவர்களின்தமது


அருட்பிரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௮௧௵. ஏப்பிரல்மீ



ஸ்ரீ ரங்க விமானம்.



ஸ்ரீரங்க நாதாய நமஹா.

# ஸ்ரீ ரங்க மகத்துவம்.

## காப்பு.

### வெண்பா.

திருவரங்க மென்று தியானிக்கி னேய்போம்
கருவரங்க மெய்தாக் கருதும்—பெருவரங்கள்
எல்லாருஞ் சித்திக்கு மெனநான் மறையுணரும்
நல்லார் வகுப்பர் நயந்து.

## நூல்வரலாறு.

()(*)()

### விருத்தம்.

அந்திநிறத் தெம்பிரான் முன்னாளி னாரதனுக் கனுக்கிரகித்த
விந்தைபெறும் ஸ்ரீரங்க மகத்துவமா மிக்கதையை விளம்பினோரும்
சிந்தையுறப் படித்தோருங் கேட்டோரும் வரைந்தோருந் திருமணாளன்
கந்தமலர்ப் பதநிழற்கீழ் வைகுந்தத் தெந்நாளுங் களித்துவாழ்வர்

### துதிகவி.

அருமறையைக் கவர்ந்துவிரி மகரவாரிதியினிற் சென்றன்றொளித்த
பெருவலிகொள் சோமகா சுரனுமத் தவுணனைமுன் றிறங்குமீனத்
திருவுருக்கொண் டமரர்த்தம் மறையையுல கிடைவிரித்துச் சீவர்தம்மை
பொருவிலருள் புரிந்திவ் வரங்கத்தி லறிதுயில்செய் புனிதபோற்றி

## நூல்.

# முதலாம் அத்தியாயம்.

சகலபுவன சம்ரக்ஷகராகியும் சர்வசீவ தயாபரராகியும் காளகண்ட மூர்த்தியாகியும், காமதகனராகியும், திரிபுராந்தகராகியும், திரிநேத்திர தாரியாகியும், மானமழுவைத் தரித்தவராகியும், மனோன்மணிசமேதராகியும், சிருஷ்டி, திதி, சம்மார, திரோபவ, அனுக்கிரகமென்னும், பஞ்சகிர்த்திய கர்த்தாவாகியும் பரப்பிரம சொரூபியாகியும் விளங்கப்பட்ட ஸ்ரீ சதாசிவமூர்த்தியானவர் ஸ்ரீ கயிலாசபர்வதத்தில் முப்பத்துமுக்கோடி தேவகணங்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகணங்களும் நந்திமுதலாகிய அளவில்லாத சிவகணங்களும் பதினெண்சித்தகணங்களும் புடைசூழத் தக்கதாக ரத்னசிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கின்ற சமயத்தில்.

பராசர், புண்டரீகர், அம்பரீஷர், பீஷ்மர், தாலப்பியர், ருக்குமாங்கதர், பிரகலாதர், அர்ச்சுனர், வசிஷ்டர், மாபெலி, விபீஷணர், என்று சொல்லப்பட்ட பாகவதசிகாமணிகளுக்குள், சிரோமணியாயிருக்கப்பட்ட நாரதமகாமுனியானவர் ஒருநாள் அதிதீவிரமாகநடந்து கயிலாயத்திற்குப்போய் சாம்பசிவமூர்த்தியைக்கண்டு, பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து அஞ்சலியஸ்தராய் நின்றுகொண்டு ஓய்சுவாமி, தேவரீர் முன்னால் அநுக்கிரகஞ்செய்தருளிய புண்ணிய சரித்திரங்களினால் சொர்க்கமத்திய பாதாளமென்னுந் திரிலோக விர்த்தாந்தங்களுந்தெரிந்து பூலோகத்திலுள்ள புண்ணியஸ்தல மகத்துவங்களும் மூர்த்திமகத்துவங்களும் கங்கைமுதலான தீர்த்தமகத்துவங்களும் முனீஸ்வரர்களுடைய புண்ணிய சரித்திரங்களும் அடியேனறிந்து இருக்கிறுத்தியடைகிறேன்.

ஆயினும் தேவரீர் சோழதேசத்தின் காவேரி மகத்துவத்தைத் திருவாய்மலர்ந்தருளிய காலத்தில் பூலோகத்திலுள்ள விஷ்ணுஸ்தலங்களுக்குள் ஸ்ரீரங்கஸ்தலமென்று ஒரு திவ்வியஸ்தலமிருக்கின்றது. அந்த ஸ்தலமகத்துவம் சகஸ்திர பணாமுடிகளையும் இரண்டாயிரம் நாவையுமுடைய ஆதிசேஷனாலும், நம்மாலுஞ்சொல்லிமுடியாதென்று தேவரீர் திருவுளம்பற்றியருளிய வசனமிர்த்தத்தைச் செவிமடுத்தாகவுண்டு. இத்திவ்வியமகாவேண்டுமென்று அன்றுமுதல் விண்ணப்பஞ்செய்ய அதிதாகமாயிருக்கின்றது. ஆதலால், அடியேனுக்கு இனனொருதரம் அந்தஸ்தல மகத்துவமும் மூர்த்திமகத்துவமும் தீர்த்தமகத்துவமும் விசதமாய்த் தெரியும்படி அநுக்கிரகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதைக்கேட்டுப் பரமேஸ்வரரும் சந்தோஷித்தவராய் அந்த நாரதமுனிவரைப்பார்த்து ஓய் நாரதமுனிவரே, அந்த திவ்வியஸ்தலமகத்துவத்தை நம்மால் சொல்லிமுடியாதென்று முன்னமேசொல்லியிருந்தோமே ஆயினும் சம்பவைதிக்கமாத்திரஞ் சொல்லுகின்றோம். விசேஷமாய்ச் சொல்லவேண்டுமாகில் பதினாயிரந் தேவவருஷங்கள்செல்லும் உம்மாலுங்கேட்கமுடியாது. எம்மாலுஞ்சொல்லிமுடியாது. ஆதலால், சங்கிரகமாகச் சுருக்கிச்சொல்லுகின்றோம். நீர் கேட்பீராகவென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார். ஓய் நாரதமுனிவரே, சோழதேசத்தில் காவேரிமத்தியில் சந்திரபுஷ்கரணிதீர்த்தத்தில் மகாலக்ஷ்மிகராயிருக்கப்பட்ட ஸ்ரீரங்கஸ்தலமென்கிற ஒரு புண்ணியஸ்தலமுண்டு. அந்த ஸ்தலத்திற்குப்போனபேர் நரகத்தைப்பார்க்கவேண்டுவதில்லை, யமலோகத்திற்குப் போகவேண்டுவதில்லை. அவர்களை மரணவேதனை யிருத்தமாட்டாது. மறுபடியும் அவர்கட்கு பலவகைப்பட்ட பிறவித்துன்பங்கள் கேரிடாது.

ஆனையினால் பூமண்டலத்தில் புத்திசாலிகளாயிருக்கின்றவர்கள் ஸ்ரீரங்கத்துக்குப்போகாமலும், காவேரிதீர்த்தஸ்நானஞ்செய்யாமலும், ஸ்ரீரங்கவிமானத்தைத் தரிசிக்காமலும், ஸ்ரீரங்கநாயகனைச் சேவிக்காமலும், தங்களாலியன்றமாத்திரம் அதிதிகளாகிய பெரியோர்களுக்குத் தானதருமங்கள் செய்யாமலுமிருக்கமாட்டார்கள். அதுவுமல்லாமல் தும்முகிறபோதும் நடக்கும்போதும் இருமுகிறபோதும் கொட்டாவிவிடுகிறபோதும் எச்சில் உமிழ்கிறபோதும் சரீரத்தில் ஒருவியாதி நேரிட்டபோதும் பாவிகளோடு சாவகாசஞ்செய்யும்போதும் ஒரு பொய்வார்த்தை சொல்லுகிறபோதும் பாவிகளைவனுசரித்துப் பேசும்போதும் மனோவாக்குகாயமென்னுந் திரிகரணசுத்தியாய் ஒருதரம் ரங்காவென்று தியானித்து வசனித்தால் அவர்களுக்கு ஒரு அபாயமுண்டாகாது. அல்லாமல் இரண்டுதரம் ரங்கா ரங்காவென்று தியானித்தால் அவர்கள் முற்பிறவிகளிற் செய்துள்ள பாவவினைகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிப் புண்ணியசாலிகளாவார்கள். அல்லாமலும், அவர்களைச் சத்தசாகரஞ்சூழ்ந்த உலகமெல்லாங்கொண்டாடும்.

பின்னரும் ஆயிரம்யோசனை தூரத்திலிருக்கிறவனானாலும் அந்தஸ்தலத்தை நினைப்பானாகில் அந்த மகாபுருஷனும் அவன் வமிசத்தில் இருபத்தொரு தலைமுறையிலுள்ள பிதிர்களும் பூர்வசன்மத்தில் செய்துள்ள சகல பாவசமூகங்களுநீங்கிப் புண்ணியவான்களாவார்கள். எந்தத் தேசாந்தரத்திலிருக்கின்றவனானாலும் எந்தத் தீவாந்தரத்திலிருக்கின்றவனானாலும் அந்த மகத்துவமாகிய ரங்கஸ்தலமிருக்கின்ற திசையை நோக்கி இரண்டு கைகளையுஞ் சிரசின்மேல் அஞ்சலியாகவைத்துக் கும்பிட்டு, இரங்காவென்று தியானஞ்செய்வானாகில் அவன் ஒருகாலத்திலும் பாவத்தையடையமாட்டான். அதுவுமல்லாமல் சந்திரபுஷ்கரணிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து செபதபவனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வடக்கே பார்த்து இரண்டுகைகளையுங்கூப்பி இரங்காவென்று சொல்லிக் கும்பிடுவானானால் அவன் ஒருபோதும் பாபத்தையடையமாட்டான்.

இதுவல்லாமல் ஏகாதசி விரதம் நிச்சலமாயிருந்து துவாதசிதீர்த்தஞ் சாப்பிட்டு அனவரதத்திரிமுழுதும் அந்தப் பகவானுடைய கீர்த்தனைகளைப் பாராயணஞ்செய்கின்ற பரமபாகவதர்களின் பெருமையை இவ்வளவென்றளவிட்டு எவர்களாலுஞ் சொல்லிமுடியாது. அவர்களையே ஸ்ரீமந்நாராயணமூர்த்தியென்றறிந்து, அவர்களுக்குச் சிசுருஷைசெய்து எக்காலமும் வணங்கவேண்டும்.

பிதிர்த்தேவதைகளில் ஒவ்வொருவரும் தங்களுக்குப் புண்ணியலோகப்பிராப்தியுண்டாக்குவிக்கும்படி, தங்கள் வம்சத்தில் ஒருசற்புத்திரன் பிறக்கமாட்டானா அவனித்தை புத்தியறிந்தவனாகி இரங்கஸ்தலத்திற்குப்போய் காவேரி ஸ்நானஞ்செய்து இரங்கநாயகியார் சமேதராய் ஆழ்வார்கள்முதலிய தாசகூட்டங்கள் புடைசூழ்ந்து சேவிக்கத்தக்கதாக ஆதிசேஷசயனத்தில் திருக்கண்வளராநின்ற இரங்கநாயகரைச்சேவித்து பிறகு ஒரு பிராமணனுக்காகிலும் அன்னம் கொடுக்கமாட்டானா, அதற்குச் சக்தியில்லாவிட்டாலும் ஒருகாசாகிலுங் கொடுக்கமாட்டானா, அதுவுநேரிடாவிட்டாலும் திலதர்ப்பணமாகிலும் பண்ணமாட்டானா, அதுவுங் கிடையாவிட்டாலும் ஒருபிடி புல்லாகிலும் பிடுங்கி ஒரு பசுவின் வாயிற்கொடுக்கமாட்டானாவென்று நினைத்துத் தபஞ்செய்வார்கள்.

ஓய் நாரதரே, இதுவுமல்லாமல் எமபுரத்தில் வாசஞ்செய்கின்ற எமதர்மராஜனானவன் தன்னுடைய தொழில் குறைவுபட்டு தன்னதிகாரம் அடங்கிப்போய் நரகம்பாழாய்க் கிடக்கின்றபடியினால் ஒருநாள் அவன் ஏகாந்தமாயிருந்துகொண்டு ஆலோசித்ததாவது என்னவென்றால்,

பூலோகத்திற் பிறந்திருக்கப்பட்ட சகல மனிதர்களும் இரங்கத்துக்குப்போகவேண்டுமென்று நினைத்தமாத்திரத்திலேயே அவர்கள்செய்த பாவங்களெல்லாம் பஞ்சாய்ப்பறந்துபோய் நம்முடைய லோகத்திற்குவாராமல் புண்ணியலோகத்தை யடைகின்றபடியால் இனிமேல் நம்முடைய ஆக்கினை எங்கே செல்லப்போகின்றது. நம்முடைய அதிகாரத்தை யாரிடத்தில் செலுத்தப்போகின்றோம் தேவர்களேயென்றால் பூலோகத்திற்குப்போய் இரங்கத்தலத்தில மனிதராகப்பிறக்கவேண்டுமென்று சார்வதாபிரார்த்திக்கின்றார்கள்.

புரட்டாசிமாதம் கிருஷ்ணபட்சத் திரியோதசியில் அந்தத் ஸ்தலத்திற்குப்போய் பிதிர்தர்ப்பணம் பண்ணினபலத்தினால் அவனும் அவன் வம்சத்திலுள்ளவர்களும் பாபவிமோசனர்களாய் பரமபதத்தையடைகின்றார்கள்.

மார்கழிமாசமுழுதும் அந்தக் காவேரியிலும் சந்திரபுட்கரணியிலும் ஸ்நானஞ்செய்து ஏகமனதாய்நின்று இரங்கநாயகரையும் பரமபாகவதர்களாகிய தாசகூட்டங்களையும் சேவித்தால் அவனும் அவன் குலத்திற்பிறந்தவர்களும் கிருதகிருத்தியர்களாய் பிறவிக்கடலைநீந்தி மோட்சகரையிற் சேருகின்றார்கள்.



ஆடிமாதம், ஆவணிமாதம், புரட்டாசிமாதம், ஐப்பசிமாதம், ஆகிய இந்நான்குமாதங்களும் அந்தத் ஸ்தலத்திலேயே வாசமாயிருந்து அந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணுவார்களாகில் அவர்கள் மகத்துவத்தை இன்னபடியென்று எவர்களாலும் அளவுபடுத்திச் சொல்லிமுடியாது. இதற்கு வேறாகிய அநேக திவ்வியஸ்தலங்களில் சகஸ்ரவருஷம் சரியாய் வாசம்பண்ணி தவஞ்செய்தவனுக்கு எந்தப் புண்ணிய பலமுண்டாகுமோ அந்தப் புண்ணியபலமெல்லாம் இந்தத் திருவரங்கமென்னுந் திவ்வியஸ்தலத்தில் ஒரு ராத்திரிவாசம்பண்ணினவனுக்கு அந்தக்ஷணமே பலிக்கும் அதுவுமல்லாமல் அந்தஸ்தலத்திலிருந்து ஆயிரங்கோடி மகாபாதகங்களைச் செய்தபோதிலும் அவர்கள் எமது எமபுரத்து வாசற்படியை மிதிக்கிறதில்லையென்று வெகுவாய் விசாரமடைந்தான்.

கேட்டீரோ நாரதமுனிவரே, இன்னமொரு அதிசயமுண்டு அதுவுஞ் சொல்லுகின்றோம். அஃதெப்படியென்றால், எவனாகிலும் இரங்கயாத்திரைக்குப் போகிறேனென்று சொல்வானாகில் அவனைக் கண்டுபிடித்து அவனுக்கு உபசாரமாய் ஒருவேளை அன்னங்கொடுத்தால் அப்படிக்கொடுத்த புண்ணியபுருஷன் பூலோகத்திலுள்ள வரையில் தனகனக வஸ்துவாகன சம்பத்திற் குறைவில்லாதவனாய் புத்திரபௌத்திர களத்திராதிகளோடு சகலபோகங்களையு மநுபவித்து வெகுத்து முடிவில் பரமபாகவதருடைய திவ்விய சரித்திரத்தைப்பெற்று சூரியமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு போய் விரசாநதிக்கு அக்கரையாகிய ஸ்ரீவைகுந்தத்தில் நித்தியசூரிகளோடு சதாகாலமும் மறுபிறவியில்லாத சுகத்தையடைந்திருப்பான் இன்னமும் அந்தத்தலத்தைச் சேவித்தபேர்களுக்கு ஒருகாள் தப்பாமல் நாளொன்றுக்கு மூன்றுதரம் பெரியோர்களுக்குப் பாதசிரதானம் பண்ணினவனுக்கு எந்தப் புண்ணியபலன் சித்திக்குமோ அந்தப் புண்ணிய பலன் சித்திக்கும்.

அந்த ஸ்தலத்திற் சொர்ணதானங்கொடுப்பதே விசேஷம் இல்லாவிட்டால் அதைப்பார்க்கிலும் பூதானம் கோதானம் வஸ்திரதானமுதலான மகா தானங்களைப் பிராமணர்களுக்குக்கொடுக்கின்றது மிகவும் உத்தமம். அதுவுமல்லாமல் அந்த மகா தலத்தில் வாசமாயிருக்கும் பெருமாளுக்குப் பத்தராயிருக்கின்றவர்கள் கையில் ஒரு சொம்புஜலம் காவேரிதீர்த்தத்தில் மொண்டு கொடுப்பார்களாகில் மேற்சொல்லிய தானங்களைப்பார்க்கிலும் மகாவிசேஷம் எந்தத்தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து முழுகினபோதிலும் காவேரியையும் சந்திரபுட்கரணியையும் மனதில் தியானித்து முழுகவேண்டும். மற்ற நதிகளைத் தியானஞ்செய்தாலும் தியானஞ்செய்யாவிட்டாலும் குற்றமில்லை. இந்தக் காவேரியையும் சந்திரபுட்கரணியையுந் தியானிக்கின்ற புருடன் எந்தக்குலத்திற் பிறந்தவனாயிருந்தபோதிலும் அவனிடத்தில் பெருமாள் பரமப்பிரீதியாகவிருப்பார்.

இதுவுமல்லாமல் பெருமாள் ஒருகாலத்தில் இந்த மாயாப்பிரபஞ்ச சம்சாரவாழ்க்கையில் வலையிலகப்பட்ட மான்போல் அகப்பட்டுகின்ற மோகத்தினால் தடுமாறுகின்ற சீவராசிகளைப்பார்த்து சிலவசனங்கள் சொல்லியிருக்கின்றார். அஃதெதனையெனில், நீங்கள் இந்த மாயாசம்பந்தமான சம்சாரபந்தத்தை விட்டுப்பிறவிக்கடலைநீக்கி மோட்சத்தைச் சேரவேண்டுமானால் நமது துவாதசநாமங்களையுந் தியானித்து அஷ்டாக்ஷரமந்திரத்தைச்செபித்து இரங்கத்தலத்திற் காவேரிஸ்நானம்பண்ணுங்கோள். இல்லாவிட்டால் வெறுஞ்ஜலத்தையாகிலு மொண்டு பிராமணர்களுக்குக் கொடுங்கோள். அதனாற் புண்ணியசாலிகளாவீர்கள். அதுவுமல்லாமல் எவனாகிலும் இரங்கஸ்தலவாசியாகிய நம்மையும் சந்திரபுட்கரணியையும், காவேரிதீர்த்தத்தையும், பெற்றதாயையும், தகப்பனையும், குருவையும், நிந்திப்பானாகில் அவன் பிராமணனாயிருந்தபோதிலும் நீசனாய்ப்பிறந்து ரவுரவாதி நரகத்தையடைவான். நீசனாயிருந்தபோதிலும் அவன் நம்மிடத்தில் பக்திவிசுவாசமுள்ளவனாயிருந்து அஷ்டாட்சரத்தைத் தியானஞ் செய்வானாகில் அவனே நமக்கு அதிபக்தனாய் விளங்குவான்.

மகாராஜனாகப்பிறந்து தருமநீதிகள்தவறி பக்திவிசுவாசமில்லாமல் எந்நேரமும் இடைவிடாமல் அஷ்டாட்க்ஷர தியானம்செய்தபோதிலும் அவன் நமக்குத் தாசனாகமாட்டான் அவனுக்குப் பரமபதங்கிட்டாது, அவனுக்கு நரகமே பிராப்தியாகுமென்று திருவுளம்பற்றியருளினார். கேட்டீரோ நாரதமுனிவரே, பின்னையும் நதிகளுக்குள் மேன்மையுடையது காவேரிநதியும், விஷ்ணுபக்தருக்குள் சிரேஷ்டமானவர் நீரும் தேவர்க்களுக்குள்மேலானவர் விஷ்ணுவும், வேதங்களுக்குள் விசிஷ்டமானது பிரணவமும் எப்படியோ அப்படிபோல பூலோகத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் மகிமைபொருந்தியது இரங்கஸ்தலம் ஆதலால் அந்தத்ஸ்தலத்தில் விவேகிகளாயிருந்து வாசஞ்செய்த பேர்களுக்குக் கோகத்தி, சிசுவத்தி, பிர்மஹத்தி, ஸ்திரீஅத்தி, முதலான சகலதோஷங்களும் நிவாரணமாகும் அல்லாமலும் கள்ளுண்டல், திருடுதல், அசத்தியம்கூறுதல், கொலைசெய்தல், பரதாரகமனம்பண்ணுதல் என்று சொல்லப்பட்ட குருமாகிய பஞ்சமகாபாதகங்களும் பறந்துபோகும். அவர்கள் வமிசத்தில் ஏழேழுதலைமுறையிலுள்ள பிதிர்களும் நரகத்தைவிட்டு நீங்கிப் புண்ணியலோகத்தைப் பெறுவார்கள்.

ஆகையால் சர்வதா பாவகிருத்தியங்களையேசெய்து அருந்தல் பொருந்தலே பரமாகநினைந்துத் திரிகின்ற பாமரசனங்களைப்பார்த்து ஓய் பாபிஷ்டர்களே நீங்கள் ரங்கா ரங்காவென்று சொல்லுங்கோள், இரங்கயாத்திரை செய்யுங்கோள், காவேரியில் ஸ்நானம்போய் முழுகுங்கோள் உங்கள் பாபகர்மங்களெல்லாம் விடுதலையாகுமென்று புத்திசாலியானவன் காருண்ணியமாகச் சொல்லவேண்டும் அப்படி சொல்லுகின்ற வார்த்தையைச் செவிகொடுத்து திருமந்திரம்போல நினைத்துப் பயபக்தி விசுவாசத்துடனே கேட்டபேர்களுக்கு அவர்கள் ஞானமறிந்து செய்த பாவங்களும் அறியாமற்செய்த பாவங்களும் அந்தக்ஷணமே நீங்கி பாமபாக்கியத்தாவார்கள்.



அல்லாமலும் நான் இப்போது உமக்குச்சொன்ன புண்ணிய கதையாகிய இரங்க மகத்துவத்தை கிரமமாக எழுதி விஷ்ணுபத்தர்களுக்குக் கொடுத்தவன் ஐஸ்வரியவானாவதுமன்றி தேகாந்தத்தில் புண்ணியலோகத்தையும் பெறுவான். பிறகு அவன் அந்த தலத்தில் புண்ணியவானுடைய வயிற்றில் பிள்ளையாகப்பிறந்து புத்திசாலியாய் இரங்கநாயகனைச் சேவித்துக்கொண்டு புண்ணிய புருஷனாயிருப்பான்.

இந்தச் சரித்திரத்தைப் பயபக்தி விசுவாசத்துடன் படித்தபேருக்கும் கேட்டபேருக்கும் வித்தையும் பத்தியும் கீர்த்தியும் ஐஸ்வரியமும் சந்தான சம்பத்தும் தீர்க்காயுசும் உண்டாகும் இதுவுமல்லாமல் அமாவாசை நவமிதிதி பவுர்ணமிதிதி துவாதசி அஷ்டமி ஏகாதசி இப்படிப்பட்ட புண்ணிய தினங்களில் இந்தப் புண்ணிய கதையைப் படித்தபேர்களும் விசுவாசமாகக் கேட்டபேர்களும் பூலோகத்திலுள்ள சகல போகங்களையும் சுகசீவிகளாயனுபவித்துப் பிறகு தேவர்களாகப்பிறந்து தேவபோகங்களையனுபவித்து வெறுத்து முடிவில் ஸ்ரீவைகுந்தத்தில் நித்தியாய் ஐசுவரியர்களாய் பிரகாசிப்பார்களென்று பரமசிவன் திருவுளம்பற்றியருள அதுகேட்டு நாரதபகவானும் அப்படியாவென்று ஆச்சரியமடைந்து மௌனமாயிருந்தார்.

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

முதலாவது அத்தியாய நமஹா.

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

## இரண்டாம் அத்தியாயம்

காப்பு.

விருத்தம்.

அலைபெரியும் பாற்கடலின் மந்தரப் பொன்மலையை மத்தாக்கினார், கலைமதியைத் தாங்கிவர சுகிர்த மத்தாவைக் கயிறாப்பூட்டி, புலவர் குழாங் கடைபொழுதம் மலைகடலி லழுந்தாமற் புகழ்க்கூர்மம், நிலவுருக் கொண்டருள்புரிந்தில் வரங்கத்திற் கணைவருநெடியோய் போற்றி.

பிறகு பிரமதேவன் எழுந்து ஸ்ரீகயிலாசபதியாகிய பரமேஸ்வரருக்குச் சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பித்து இரண்டு கைகளையுஞ் சிரசின் மேல்வைத்துக் கும்பிட்டுநின்று ஐய்சுவாமீ, திரிபுராந்தகா நீலகண்டா பார்வதிசமேதா பரமதயாளரேவென்று பலவாகத் தோத்திரஞ்செய்து தேவரீர் இப்போது அனுக்கிரகஞ் செய்தருளிய புண்ணிய சரித்திரத்தைக் கேட்டுச் சந்தோஷித்தனேனேன். அதிற் சம்சயமில்லை. ஆனாலும், இன்னமும் அந்தச் சரித்திரத்தையே கேட்கும்படி ஆசையாயிருக்கின்றது ஆகையால் அந்தத் தலத்தில் ஸ்ரீரங்கவிமானமும் ஸ்ரீரங்கவிக்கிரகமும் சந்திரபுஷ்கரணியும் எப்படியுண்டாச்சுதோ அந்த விர்த்தாந்தத்தை அடியேனுக்கு விசதமாகத் திருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

எப்படியென்றால் கேட்டீரோ நாரதரே, அந்தத் தலத்தினுடைய பெருமை பிரதாபமும் அளவிட்டுச் சொல்லுவோமாகில் பதினாயிரந்தேவருஷத்துக்குச் செல்லுமென்று முன்னமே சொல்லியிருந்தோமே ஆனபோதிலும் நீர் கேட்கவேண்டுமென்கிற ஆசையாயிருக்கிறதென்று சொல்லுகின்ற முறைமையினால் இன்னமும் எடுத்துக்கூறுகின்றோம். நீர் சாவதானமாய் முன்னொரு பூர்வத்தில் நால்வகைபோனி எழுவகைத்தோற்றம் எண்பத்து நாலுலட்சம் ஜீவபேதங்களாயுள்ள சகலசராசரங்களும் பிரகிருதியிலேதானடங்கி மறுபடியும் அந்தப் பிரகிருதியிற்றானே லயமாகி ஒருருவுந் தோற்றாமல் காடாந்தகாரமாயிருந்தது. அப்போது, மகாவிஷ்ணுவாகிய பெருமான் ஒருவர்மாத்திரம் பிரளயகால சமுத்திரத்தில் ஒரு விருக்ஷத்தைப்போல் வடபத்திர சயனத்திலிருந்து நெடுங்காலம் பரமயோகநித்திரைசெய்து அதற்குமேல் திருக்கண்விழித்துப் பார்த்தருளினார்.

அப்போது எந்தவிடத்திலும் காடாந்தகாரமாய் ஒன்றுந்தோன்றாமலிருந்தது. அதைக்கண்டு, இதை இப்படி ஒரு சிலாசிலையுங்காணோம் ஒரு தேவதைகளையுங் காணோமென்று சற்றுநேரம் திருவுளஞ்செய்து பிறகு சகலபுவன சராசரங்களும் சகலலோகங்களும் தம்முடைய வயிற்றில்தான் அடங்கியிருக்கின்றதென்று யோகதிருஷ்டியினாலறிந்து சந்தோஷமாயிருந்தார். அந்தச் சமயத்தில், தேவதேவனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய நாபியில் தானேயிருந்து ஒரு தாமரைப்புஷ்பம் பிரகாசித்து நின்றது. அந்தத் தாமரைப் புஷ்பத்தின் இதழ் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கம்போலும் அதன்கொடி நவரத்தின கம்பம்போலும் அதன் முள்ளுகள் பளிங்குத்தண்டம்போலும் விசித்திரமாயிருந்தது. அந்தக் கமலத்திலிருந்து சகல லோகங்களையும் சிருஷ்டிக்கப்பட்ட பிரமதேவனுண்டாகி வெளியில் வந்தான். அப்படிவந்த பிரமாவானவன் நாலுதிக்கும் வெறுமையாய்ப் பார்த்தவிடத்தில் வேறொரு பிராணிகளுமில்லாமல் தான்மாத்திரம் ஒண்டியாயிருப்பதால் பயப்பிராந்தியடைந்து பிரமித்துக்கொண்டிருந்தான். அந்த வேளையில் மகாவிஷ்ணுவானவர் ஒருகோடி சூரியகாந்தியைப்போலவும், தங்கத்தினால் வடிவிழைக்கப்பட்ட திவ்வியம்போலவும், நீலமா-



ணிரத்தினத்திரட்சிபட்ட சஞ்சீவி பர்வதம்போலவும் ஆகாசமார்க்கமாய்ச் சமீபமாக புறப்பட்டு ஒரு அம்சபட்சியாக சந்திரமண்டலம்போலவும் மகமேரு பர்வதம்போலவும், பிரகாசித்துக்கொண்டு நாதபிந்துகலா ரூபமாய் ககாரவெனுஞ் சத்தத்துடன் தொனித்துக்கொண்டு அந்தப் பிரமதேவனுக்கு முன்னேவந்து நின்றார்.

அதுகண்டு பிரமதேவனும் ஆச்சரியமடைந்து அந்த அம்சரூபியைப் பார்த்து நீர் யாரென்றுகேட்க, அந்த வார்த்தைக்குப் பதில் அம்சரூபியும் ஓங்காரமென்று சொல்லியருள அன்றுமுதல் தகப்பனானவன் பிள்ளைக்குப் பேரிட்டதுபோல் பிரமனுக்கு ஓங்காரமென்றுபேருண்டாச்சுது. பிறகு அந்த அம்சரூபியான பெருமான் பிரமதேவனைப்பார்த்து நாம் ஹரியென்று திருவுளம்பற்றியருளினார். அது கேட்டவுடன் பிரமதேவன் சகலபயங்களும் நீங்கிச் சந்தோஷித்தனாய் அந்த மூர்த்திக்குச் சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பித்து சுவாமீ தேவரீர் எனக்கு என்னபுத்தி கட்டளையிடுகிறீர். இனி நான் செய்யவேண்டிய காரியமென்ன அதைத் திருவுளம் பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டு விஷ்ணுவாகிய அம்சரூபியும் சந்தோஷமாய் அந்தப் பிரமதேவனைச் சமீபத்திலழைத்து மகா அன்புடனே பிரணவமந்திரமென்கிற ஏகாட்சரத்தை மாத்திரம் உபதேசம்பண்ணி நீ இந்த மந்திரத்தைமாத்திரம் செபஞ்செய்துகொண்டிருவென்று கட்டளையிட்டு அந்தரமார்க்கமாய் மறைந்துபோய்விட்டார்.

அப்பால் பிரமதேவனும் அந்தப் பிரணவமந்திராட்சரத்தை அரியென்னும் அட்சரத்தோடுசேர்த்து மூனாட்சரமாக்கி இடைவிடாமல் செபஞ்செய்யத்தொடங்கினான். இப்போதும், வேதாத்தியயனஞ் செய்கின்றவர்கள் பிரமத்தில் அந்த மூனாட்சரத்தையும உச்சரித்து அப்பால் சாங்கமாக வேதாத்தியயனஞ் செய்கின்றார்கள். அப்படி பிரதமத்தில் உச்சரித்து பிறகு வேதாத்தியயனஞ்செய்தால் அதில் என்ன அபசாரம் நேரிட்டபோதிலுந் தோஷமில்லை. மேலும், இப்போதும் ஒருவன் கிழக்குமுகமாய் நின்று, அரீ அரீ என்றுசொன்னால் அவன்செய்த சகல தோஷங்களும் நிர்த்தோஷமாகும் அவனை எந்தப் பாதகங்களுமணுகாது.

கேட்டீரோ நாரதரே, அப்பால் பிரமதேவனும் தாமரைப் புஷ்பத்தின்மேலிருந்து தாரகமாகிய மூனாட்சரத்தையும் செபித்துக்கொண்டு ஆயிரம்வருஷகாலந் தபசுபண்ணி அந்தப்பேர் மகிமையினால் காயத்திரி மந்திரங்களையுண்டாக்கினான். அதன் மகிமையினால் முதல் யாகத்தில் அவன் முகத்திலிருந்து பூலோகமும் அக்கினியேத்திரகர்மமும் எதுர்வேதமும் யாகத்துக்குவேண்டிய ஒன்பது மந்திரங்களும் தேவதைகளில் அக்கினிதேவனும காயத்திரி செபங்களும் மனிதர்களில் பிராமணர்களும் நாலுகால் மிருகங்களில் வெள்ளாடுகளுமுண்டாயின. அப்பால் இர-

ண்டாவது யாகத்தில் அவன் கைகளிலிருந்து தேவலோகமும் சாமவேதமும் அசுரர்களும் ஸ்திபத்துக்குச் சாதகமான பஞ்சாட்சரங்கள்கூடிய மந்திரங்களும் தேவதைகளில் இந்திரனும் மனிதர்களில் க்ஷத்திரியர்களும் நாலுகால் மிருகங்களிற் குயம்பாடிகளுமுண்டாயின. அப்பால் மூன்றாவது யாகத்தில் அவன் தொடைகளிலிருந்து ருக்குவேதமும், சோமயாகமும், தேவதைகளில் அசுவனி தேவதையும், எக்கியங்கள் செய்யவேண்டிய பதினெண்மிரிதிகளும் சப்தபக்கிரிகளும் மனிதர்களில் வைசியர்களும் நாலுகால்மிருகங்களும் பசுக்களுமுண்டாயின. அப்பால், நாலாவது யாகத்தில் அவன் பாதங்களிலிருந்து அதர்வணவேதமும் எக்கியத்திற்கு வேண்டிய இருபத்தொரு மந்திரங்களும் முப்பத்திரண்டக்ஷரங்களும் மனிதர்களிற் சூத்திரர்களும் நாலுகால்மிருகங்களில் குதிரைகளுமுண்டாயின.

இப்படி சகலபுவன சராசரங்களையுந் தபோபலத்தினுல் சிருஷ்டி பண்ணின அந்தப் பிரமாவினுடைய காது குயம்பிகளிலிருந்து ராசகுருவை சம்பந்தமான மதுவென்னும் ராட்சதனும் தாமதகுண சம்பந்தமான கயிடவனென்னும் ராட்சதனும் பிறந்து சகலலோகங்களிலும் புகுந்து பீத்தூளியாக்கி விட்டு மறுபடியும் பிரமாவிடத்திற்குவந்து நாலுவேதங்களையுந் திருடிக்கொண்டுபோய் சமுத்திரத்தில் மூழ்கிப்போனார்கள். கேட்டோர் நாரதரே, அப்பால் அந்தப் பிரமதேவன் வேதங்களைப் பறிகொடுத்தபடியினுல் ஒன்றுந்தெரியாத மூடனைப்போல் நாலுதிக்குந் திகைத்துப்பார்த்து ஒன்றுந்தோற்றாமல் பிரமைகொண்டவனாய் திருப்பயும் தான் வாசமாயிருக்கப்பட்ட தாமரைப் புட்பத்தின் கொடிவழியேயிறங்கி அந்தக் கொடியின்வேரைக் கண்டுபிடிக்கமாட்டாமல் மயங்கி அந்தக்கொடியிலுள்ள கூர்மையான முட்களினால் கிழிபட்டுத் திரும்பி மறுபடியும் தனதுடைய யதாஸ்தானமாகிய தாமரைப் புட்பத்தின்மேல் வைத்து, உட்கார்ந்துகொண்டு இனியென்ன செய்கிறதென்று வாய்விட்டழுது பலம்பிதான இந்தச் சமுத்திரத்திலாகிலும் விழுந்து செத்துப்போகிறேனே செத்துப்போகிறேனென்று கூச்சலிட்டான்.

அப்போது, திருப்பாற்கடலில் வடபத்திர சயனத்தில் அறிதுயில் செய்துகொண்டிருக்கிற விஷ்ணுவுக்குத் தெரிந்து ஓ ஓ இதேது பெரசம்பாதமென்று நிர்கிட்டெழுந்திருந்து ஒரு மச்சரூபமாய் ஓடிவந்து ஓய் பிரமனே நாம் வருகிறோம் நீ பயப்படாதே பயப்படாதேயென் றபயம் தந்துகொடுத்து சமீபத்தில்வந்து அவன சரீரத்தைத்தடவி கண்ணீரைத் துடைத்து அவனுக்குப் பலவிதமான தேறுதல்சொல்லி, அப்பா நானுனக்குத் தகப்பன் நீ எனக்குப் பிள்ளையானபடியால் நீ பறிகொடுத்துவிட்ட வேதங்களை நாடிப்போய் தேடிக்கண்டு பிடித்துக்கொண்டு வருகிறேன் இவடத்திற்றானே நீ பயப்படாமலிருவென்று அவனை அங்கே நிறுத்திவிட்டு மச்சரூபமாய் வந்த விஷ்ணுவானவர் குதிரைமுகமும் மனித சரீரமுமான



ஒரு திவ்வியரூபமெடுத்து மதுகைடபர்களென்னும் ராட்சதர்களிருக்குமிடத்திற்குப்போய் அவர்களைக்கண்டு அவர்களோடு சற்றுநேரம் சண்டைசெய்து போராடி அவர்களைக் கொன்றுவிட்டார்.

பிறகு அந்த நாலுவேதங்களையும் எடுத்துக்கொண்டு யதாரூபமாய் மகா சந்தோஷ சல்லாப விநோதமாகவே அவதிவாய்ந்திருக்கிற கருடாழ்வான்மேல் ஏறிக்கருளி சதுர்ப்புஜங்களிலும் சங்கு- சக்கரம்- கோதண்டம்- கட்கம்- வாள்- என்னப்பட்ட பஞ்சாயுதங்களையுந் தாங்கிக்கொண்டு கவுஸ்துபவாபரணமும் வனமாலிகையும் பீதாம்பரமும் பிரகாசிக்கக் கோடிசூரியர் உதயமானதுபோல் லட்சுமி சமேதராய் வேதங்களைப் பறிகொடுத்து விட்டோமேயென்று பிரலாபித்துக்கொண்டிருக்கின்ற பிரமாவுக்கெதிரேவந்து அந்த வேதங்களைக்கொடுத்து அப்பா மகனே, நான் உபதேசம்பண்ணுமல் வேதங்களை உன்கையிற் கொடுத்தபடியினால் நீ பறிகொடுத்துவிட்டாய் மறுபடியும் நான்போய் அந்த ராக்ஷதர்களைக் கொன்று வேதங்களைக் கொண்டுவந்தபடியினால் உனக்கு கிடைத்தது இல்லாவிட்டால் உனக்குக் கிடைக்கமாட்டாது. ஆகையினால், இனியாகிலும் நாம் முன்னமே உபதேசித்திருக்கிற பிரணவமந்திரத்தைப் பயபக்தி விசுவாசத்தோடு தியானித்துக்கொண்டு பத்திரமாயிரு.

இந்த வேதங்கள் குருவுபதேச மில்லாதவர்களுக்குப் பலிக்கமாட்டாது குருபக்தியாயிருந்து குருகடாட்சம் பெற்றிருப்பார்களாகில் அவர்களுக்குப் பலிக்கும் குருபக்திசெய்கிறவன் நீசனாயிருந்தாலும் அவன பிராமணவம்சத்திற் பிறந்து வேதாத்தியயனஞ்செய்து பரமபாகவதனுவான். அத்தியயனஞ்செய்த வேதபாடங்களை மறந்தவன் நாசத்தையடைவான். பிராமணகுலத்திற் பிறந்தும் வேதாத்தியயனஞ் செய்யாமலிருந்தால் அவன் பிரம்மகத்தி தோஷத்தையும் சுராபானஞ்செய்த பாதகத்தையும் அடைவான். வேதங்களைச் சிலநாள் அப்பியாசித்து பிறகு விட்டுவிட்டால் அவன் கெர்ப்பத்திலிருக்கிற சிசுவைக்கொன்ற தோஷத்திற்போவான்.

வேதங்களைப்படித்தும் அனேகயாகாதி கிருதுதியங்கள் செய்தும் என்னிடத்திலும் குருவினிடத்திலும் பக்திவிசுவாசமில்லாமல் இருப்பானுகில் அவன் சாண்டாளிருகாமாய்ப் பிறந்து பிரஷ்டனுகிப்போவான். அவன் ஒருக்காலும் கரையேறுகிறதில்லை. அவன் வெகு பிறவிகளிற் பிறக்கவேண்டும் அப்படிபிறந்தாலும் மகா இழிவான பிறவிகளிற் பிறந்து பாவகிருத்தியங்களேசெய்து சகலமான பேர்களாலும் நிக்கிரகஞ்செய்யப்பட்ட பாபிஷ்டனுய் பிறகு கல்லாய்ப்புழுவாய்ப் பிறந்து செக்கைக்கொண் குயவன் திகிரியைப்போல பல பிறவிகளிலுஞ் சுழன்று கிலேசித்தாகிலும் ஓய்வில்லாமல் திரியவேண்டும். என்னிடத்திற் பக்தியில்லாமல் சகல வேதாந்த சாஸ்திரபுராண விதிகாசங்களை இடைவிடாமற் படித்து அவற்றினரித்தங்களைக் கசடறவாசாய்ந்தறிந்தவர்களையும் அவைகளின் பயனை

ஸ்துமதியாமல், என்னிடத்தில்மாத்திரம் பக்தி விசுவாசமாயிருக்கிற ஒரு புருஷனையும் நோக்கிப் பார்க்குமளவில் என்னுடைய பக்தனே அதிகமேன்மையுடையவனாவான்.

என்னிடத்திற் பக்தியில்லாமல் சகலசாஸ்திரபுணனாயிருந்தாலும் அவன் சண்டாளனாய்க் கிராதகனாய்ப் பிறப்பான். என்னிடத்திற் பக்தியுள்ளவன் இழிவான பஞ்சமகுலத்திற் பிறந்தவனாயிருந்தபோதிலும் அவனே பிராமணன், அவனே பரமபுருஷன், அவனே பாக்கியவான், அவனே புண்ணியவான், அவனே யோக்கியமான பரமபக்தன், அவனே பரமஞானி, அப்படியில்லாமல் பிராமணகுலத்திற் பிறந்து நான்கு வேதங்களையுமுணர்ந்து தானதருமம் யாகதீர்த்தங்கள் முதலான சற்கருமங்களைக் குறைவில்லாமல் நடத்துகின்றவனானாலும் என்னிடத்தில் பக்தியில்லாதவனானால் அவனே நீசனாவான்.

ஓ பிரமாவே, நீ என்னிடத்திற் சதுர்வேதங்கள், உபநிடதங்கள், அர்த்தசாஸ்திரங்கள், சிற்பசாஸ்திரங்கள், சோதிடசாஸ்திரங்கள், இது முதலான சகலசாஸ்திரங்களுந் தெரிந்துக்கொண்டாய். ஆகையால், இனி யக்ஷ கின்னர, கிம்புருட, கந்தர்வ, சாத்திய வித்தியாதரர்களான சகல தேவதைகளையும் மனிதர்களையும் ஜீவராசிகளையும் சொர்க்க நரகங்களையும் அவரவர்களுக்குத் தகுந்த லோகங்களையும் போகங்களையும் உண்டாக்கி அவ்வவர்கள் தாரதம்மியத்திற்குத் தகுந்த வர்ணாச்சிரம தர்மங்களையும் நடப்பித்தருளென்று பிரமதேவனுக்குக் கட்டளையிட்டருளி ஸ்ரீரங்கநாராயண மூர்த்தி கருடவாகனரூடராய் வைகுந்தத்திற்கு எழுந்தருளினாரென்று பரமசிவன் திருவாய்மலர்ந்தருள அதுகேட்டு நாரதபகவானும் பாக்கியம் பாக்கியமென்று பரமசிவனுக்கு நமஸ்காரஞ்செய்து ஆனந்த பரவசப்பட்டிருந்தார்.

இரண்டாவது - அத்தியாயம் - முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹ.

## மூன்றாம் - அத்தியாயம்.

துதிகவி.

விருத்தம்.

புவிபதனைப் பாயலாச் சுருட்டிப்போய்ப் பாதாளத்திற் புகுந்தபோர்க்களை, அவனுயிர் முடித்திமையவி னைப்புவியை முன்போலுண்டாக்குமாறு, எழுவுமொளிர் நிறைக்கோட்டுப் பன்றியுருக் கொண்டருளி நாதர் போற்றப், பவமகற்று மரங்கத்திற் பாம்பணைமேற் றுயில்கூரும் பரம போற்றி.



அப்பால் நாரதபகவான் எழுந்துநின்று ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவனுக்குப் பிரதட்சண நமஸ்காரஞ்செய்து சுவாமி, பிறகு அந்தப் பிரமதேவன் சிருஷ்டிபண்ணின கிராமங்களையும் அவருக்கு ஸ்ரீமகாவிஷ்ணு செய்த வனுகூலங்களையும் விவரமாய்த் திருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டுப் பரமசிவமூர்த்தியுஞ் சந்தோஷமடைந்து நாரதரைப்பார்த்து நீரோ இவ்வளவு அபேட்சையாய்க் கேட்கின்றபடியால் நாம் சொல்லுகிறோம் நீர் சாவகாசமாய்க்கேளும் எப்படியென்றால், அந்தப் பிரமதேவனேபோய் பெருமாள் கட்டளையிட்டபடியே அனேககாலந் தபசு செய்துக்கொண்டிருந்தார். பிறகு சகல புவனங்களையும் சிருஷ்டிசெய்து சோதிட நூலைப் பார்த்தவிடத்தில் தேவேந்திரனுடைய ஆயுசும் அதிகாரமும் போகபோகங்களும் சிறிது நாளில் ஒழிந்துபோகுமென்று தெரிந்து இன்னம் மற்றுமுள்ள யக்ஷகின்னர கிம்புருட சித்தவித்தியாதரர்களுடைய ஆயுசும் ஐசுவரியமும் மனுஷர்களுடைய அற்பாயுசும் போகபாக்கியமும் தம்முடைய காலவளவும் இம்மட்டென்றறிந்துக்கொண்டு நாம் இதுகளையெல்லாம் பகவானால் சிரமாகத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்றும் உறுதிகொண்டு அதிதாகமாய் திருப்பாற்கடலுக்குச் சமீபத்திற்போய் நின்று வெகுகாலந் தவசு செய்தான்.

கேட்டீரோ நாரதமுனியே, அப்படி நெடுங்காலந் தபசுபண்ணின பிரமதேவனுடைய தவசுக்குத் திருவுளமிரங்கி மகாவிஷ்ணுவானவர் கூர்மாவதாரங்கொண்டெழுந்தருளி வந்து, பிரமதேவனுக்குத் தரிசனங் கொடுத்தருளினார். அப்படி கூர்மரூபியாய் வந்த பகவானுக்குப் பிரமதேவன் அநேகவந்தனை வழிபாடுகள்செய்து சுவாமீ, தேவரீர் அடியேனிமித்தமாய் எழுந்தருளிவந்து, தரிசனங் கொடுத்தருளியது உண்மையாகுமானால் உம்முடைய யதார்த்த சொரூபத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்தருளவேண்டும். அடியேன் இதுவரையிலுந் தேவரீருடைய நிசசொரூபத்தைக்கொண்டு தரிசனஞ்செய்ததில்லை இப்போதாகிலும் உமது நிசசொரூபத்தைக் காண்பித்தருளவேண்டும். துவாதச நாமங்களையுங் கொண்டாடி நமஸ்கரித்தான். அதுகண்டு கூர்மரூபியாகிய ஸ்ரீரங்கநாராயண மூர்த்தியும் பிரமதேவனைப்பார்த்து விரும்பினாய் பிரமாவே, உன்னைப்போலொத்த பிரமாக்கள் அநேகம்பேர்வந்தாலும் என்னுடைய நிசரூபத்தைக் கண்டுபிடிக்கமாட்டார்கள். நான் நினைத்தமாத்திரத்திலே அனந்தமாயிரம் பிரமாண்டங்களையும் அனந்தமாயிரம் பிரமாக்களையும் பிறப்பிக்கவும் இறப்பிக்கவும் கூடும்.

ஆனபோதிலும் என்னுடைய பக்தனானவர்களாய் இருக்கிறபேர்கள் எனது நிசச்சொரூபத்தைக் காணவேண்டுமென்று நினைத்த அந்தக்ஷணமே அவர்களென்று நிசச்சொரூபத்தைக் கண்டு தரிசிப்பார்கள். மற்றபேர்கள் எப்படிப்பட்ட வல்லவர்களானாலும் அவர்களால் என்னைக் கண்டு தரிசிக்கமு

பிராணி[illegible]வர்க்கங்களை ரட்சிக்கு நிமித்தம் அநேகம் அவதாரங்கள் எடுப்பேன் அல்லா[illegible]லும், மச்சமானது பார்வையினாலும் கூர்மமானது தியானத்தினாலும் சர்ப்பமானது ஆலிங்கனத்தினாலும் அதனதன் சிசுக்களை அதனது ரூபப்படுத்தி வளர்க்கச்செய்கிறதுபோல நாம் உன்னை யுருப்படுத்தி வர்த்திக்கச்செய்ய நிமித்தம் மேற்சொல்லிய மூன்று ரூபங்களிலும் உனக்குத் தரிசனங்கொடுத்து பிரணவமந்திராட்சரங்களையும் உபதேசஞ்செய்து நீ செய்த யாகங்களினாலே ருக்கு யசுர் சாம அதர்வணமென்னுஞ் சதுர்வேதங்களையும் உண்டாக்கிக்கொடுத்து உனக்குப் பிரமஞானம் ஐயந்திரிபில்லாமல் பிரகாசிக்கும்படி அசுவமுகமும் மனுஷசரீரமாய் வந்து, பிரத்தியக்ஷமாகினேன். இப்படிப்பட்ட மகிமையெல்லாங் காண்பித்தும் உனக்கு என்னுடைய நிசசொரூபம் கரதலாமலகமாய் பிரகாசிக்காதபடியினால் முன்னமே நான் உனக்குபதேசித்துவைத்த பிரணவமந்திரத்தை அஷ்டாட்சரத்துடன்கூட்டிச் செபஞ்செய்துக்கொண்டிரு. அப்படி செய்வாயாகில் உனக்குச் சகல வல்லமைகளுமுண்டாகும். சகல வேதாந்த ரகசியங்களும் சகல மந்திரார்த்த ரகசியங்களும் வெளிப்படும். இந்த மந்திரமே மூலமந்திரமென்று சொல்லப்படும். இந்த மந்திரத்தைச் சதாகாலமும் பிரீதியுடனே செபித்துக்கொண்டிருக்கிற பரமபாகவதர்கள் எப்போதும் என்னை விட்டுப்பிரியாமல் சகல சம்பிரமத்துடனே வைகுந்தத்தில் நித்திய திருப்தியுடையவர்களாய் வாழ்ந்திருப்பார்கள். பூலோகத்தில் இருக்கிறபோதும் அவர்கள் சகல போகபாக்கியங்களிலும் புத்திரமித்திர சம்பத்துக்களிலும் குறைவில்லாதவர்களாகவேயிருப்பார்கள். ஆகையினால், நீயும் அஷ்டாட்சரத்தை இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டிருவென்று கட்டளையிட்டு பகவானுடைய ஸ்ரீவைகுந்தத்திற்குப் போய்விட்டார்.

கேட்டீரோ நாரதரே, அப்பால்பிரமதேவனும் பகவானுடைய வாக்கியத்தைச் சிரசாவகித்து அஷ்டாட்சர செபம் பண்ணிக்கொண்டு மறுபடியும் ஆயிரம்வருஷந் தபசுபண்ணினான். அப்படி தபஞ்செய்த பிரமாவினுடைய தபசுக்குத் திருவுளமிரங்கி ஆதிசேஷசயனராகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி கடாட்சித்தபடியால திருப்பாற்கடல் மத்தியிலிருந்து, ஒரு திவ்யவிமானம் கத்தக்காயமாய் சகஸ்திரகோடி சூரியப்பிரகாசம்போல பிரகாசித்துக்கொண்டு அந்தரமார்க்கமாய் எழுந்தருளிவந்தது. அதை தெரிந்து பிரமதேவனும் தபசுநிலைவிட்டெழுந்து நின்று, இந்த விமானம் வருகிற வைபவத்தைக்கண்டு அதிசயமடைந்து மகா பயபக்தியுடனே தோத்திர நமஸ்காரங்கள் செய்து அந்த விமானத்தை உற்றுப்பார்த்தானாகில் அதில் ஸ்ரீவைகுண்டவாசிகளாயிருக்கிற அனந்தரும் சனகாதியோகீஸ்வரர்களும் இன்னமும் சத்தியலோகவாசிகளாயிருக்கிற சகலதேவகூட்டங்களும் மகாரிஷிகளும் கிம்புருட யட்ச கந்தர்வ சித்தவித்தியாதர



கூட்டங்களும் சகல ரிஷிகூட்டங்களும் பிரகாசித்திருந்தார்கள். ஓய நாரதமுனிவரே, அதில் நீருமிருந்தீர்.

அப்படிப்பட்ட ஸ்ரீரங்கவிமானத்தை வேதசொரூபியாகிய கருடாழ்வார் முதுகில் தாங்கிக்கொண்டு ஆதிசேஷன் முத்துச்சரங்களால் அலங்கரித்த வெண்பட்டுக்குடை கவித்துக்கொண்டுவர விஷ்வக்சேனர் பொற்பிரம்பினால் சந்தடி விலக்கிக் கட்டியங்கூறிவர சந்திரர், சூரியர்கள், இருவரும் வெண்சாமரை வீசிவர, ஓய் நாரதரே, நீரும் தும்புருவும் கந்தர்வர்களும் அநேக கீர்த்தனைகள் பாடிவர, இன்ன மற்றுமுண்டான தேவரிஷிகள் அனைவரும் அஞ்சலியஸ்தர்களாய் நின்று, சகஸ்திர நாமங்களையும் புகழ்ந்துவர, தேவேந்திரனும் தேவர்களும் புஷ்பமாரிபொழிந்துவர, ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராயும் ஆதிமத்தியாந்த ரகிதராயும் ஆபத்பாந்தவராயும் விளங்கப்பட்ட ஸ்ரீரங்கதாமா வந்தாரென்று திருச்சின்னங்களூதிவர, பதினெட்டுவகை மேளவாத்தியங்களும், தேவதுந்துபியும், அண்டகடாகங்களெல்லாஞ் செவிடுபடும்படி தாந்தாமென்று முழங்கிக்கொண்டுவர, இவ்வகைப்பட்ட சம்பிரமங்களுடனே ஜெயஜெயமென்று பூமியிற்கொண்டுவந்திறங்கினார்.

அதைக்கண்டு பிரமதேவனும் அடியறுந்தமரம்போற் பூமியில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அவனுடைய நாலுமுகங்களாலும் நாலு வேதங்களையும் பாராயணஞ் செய்துக்கொண்டு ஆனந்தபரவசனாய் நின்றான். அப்போது, அந்த விமானத்துடனே வந்த கட்டியக்காரர்களாகிய பொற்பிரம்புக்காரர்களில் சிரேஷ்டரான சுனந்தரானவர் பிரமதேவனைப் பார்த்து வாரும் பிரமதேவரே, நீர்செய்த தபோமகிமையினால் ஸ்ரீமந்நாராயணருடைய கிருபாகடாட்சத்தினால் வேதசாரமாகிய மூன்றெழுத்து மொருருவாய் பிரகாசிக்கின்ற பிரணவமந்திரமே, இந்த விமானமாகவும் அந்த மந்திரார்த்தமாய் விளங்குகின்ற பரமபரஸ்துவே, ஸ்ரீரங்கநாயகராகவும் தோற்றப்பட்டன. உம்முடைய தயவினால் பூலோகத்திலுள்ள அரிபத்தர்களனைவரும் இந்த விமானத்தைச் சேவித்துக் கரையேறுவார்கள். அதற்குச் சந்தேகமில்லை. இதோ, அந்த விமானத்து மத்தியில் பிரணவசொரூபியாயிருக்கிற ஹரி சர்ப்பசயனத்தில் மகா வைபவத்துடன் பக்தசனங்களை ரட்சிக்கும்பொருட்டு யோகநித்திரை சாதிக்கின்றார். ஆதலால், உம்மைப்போல பக்தியுடையோர்கள் இந்த விமானத்தையே சேவிக்கவேண்டுமென்றான்.

பூர்வத்தில் உம்மைப்போலொத்த சதுர்முகப் பிரமாக்கள் அநேகங்கோடிபேர் அநேகமாயிர வருஷகாலந் தவசுபண்ணி, இந்த விமானத்தையும் இந்த விமானபதியாகிய ஸ்ரீரங்கநாயகனையும் சேவித்து பூசித்து, அந்த பூஜாபலத்தினால் அநேககாலம் பிரமபட்டம் அநுபவித்தார்கள்- இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியனென்று சொல்லப்பட்ட அஷ்டதிக்குப்பாலர்களும் இப்படியே சேவி

த்து இசைந்திருக்கிறார்கள். ஆதலால், நீரும் இந்த விமானத்தைச் சேவித்துப் பூசிப்பீராகில் உமக்குச் சர்வ அதிகாரமும் உண்டாகுமென்று சொன்னார். அந்த வசனங்களைக் கேட்டு, பிரமதேவனும் அப்படியாமென்று பயபக்தி விஸ்வாசத்துடன் அந்த விமானத்தினுட்புகுந்து தரிசிக்குமளவில் முன்னர் இந்தப் பிரமதேவனால் சிருஷ்டிபண்ணப்பட்ட சகல புவனங்களும் சகல சராசரங்களும் காணப்பட்டன அல்லாமலும்.

கவி.

எண்ணாறுகோடி யுகம்பார்த்திருக்கினும்
கண்ணபிரானைக் கண்டறிவாயிலை
உண்ணடிச்சற்றே யொளிபெறநோக்கிடில்
கண்ணபிரானைக் கண்டுய்யலாகுமே.

என்று முன்னோர் கூறியிருக்கின்ற நியாயம்போல அந்த விமானத்தின்மேலே ஆகாசமும், கீழேபூமியும், மத்தியில் மகாலட்சுமி சமேதராய் ஆதிசேஷசயனத்தில் பகவான் பள்ளிகொண்டிருக்குந்தானமும அந்த வாசற்படியி னிருபுறத்திலும் ஜெயவிஜையரென்கிற துவாரபாலர்களும் பெருமாள் கிரீடபாரிசத்தில் கணபதியும் பாதபாரிசத்தில துர்க்கையும் சிரசுக்கும் பாதத்துக்குமத்தியில் சரஸ்வதியும், காயத்திரியுமாகத் தோற்றப்பட்டன. அல்லாமலும், அந்த விமானத்து உச்சியில் நாலு வேதங்களை நாலு கலசமாகவும் பிரணவமுதலிய மகா மந்திரங்களே, சிகரமாகவும் விளங்கின. அதுவுமல்லாமல், பாதத்தில் எக்கியங்களும் நெற்றியில் எக்கிய மந்திரங்களும் வயற்றில், அசுவனிகளும் அந்தாளத்தில் மருத்துக்களும் அஷ்டவசுக்களும் ஏகாந்தசருத்திரர்களும் துவாதசாதித்தர்களும் நவக்கிரகங்களும் இருபத்தேழு நட்சத்திரங்களும் சப்தரிஷிகளும் அஷ்டதிக்குப்பாலர்களும் சகலதேவர்களும் காணப்பட்டன. இப்படி காணப்பட்ட சகல வைபவங்களையும்பார்த்து, ஆச்சரியப்பட்டு பிரமதேவனானவன் அந்த பகவானுக்குச் சர்வோபசார பூசைகளும் நடப்பித்து, பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து, மகா பயபக்தியுடனே அந்தப் பெருமாளுடைய திருவுருவத்தைத் தியானித்துப் பார்க்குமளவில்.

இந்திரநீலம்போற் பிரகாசிக்கின்ற மேகவர்ணமும், பூரணசந்திர பிம்பம்போற் பிரகாசிக்கின்ற திருமுகத்தாமரையும், மூன்றாம்பிறைபோல் விளங்கப்பட்ட நெற்றியும், பஞ்சாயுதங்கள் தாங்கப்பட்ட கைத்தாமரைகளும், வீரலட்சுமீ வசிக்கின்ற தோள்களும், கிருபையே வடிவமாய் விளங்குகின்ற திருக்கண் தாமரைகளும், அவற்றினுள் மதுபானங்குடித்து, மயங்கிகிடக்கின்ற வண்டுகள்போன்ற கருவிழிகளும், கோதண்டத்திற்குச் சமானமாய் வளைந்திருக்கின்ற புருவங்களும், கொவ்வைக்கனிபோலும், சிவந்தவாய்த் தாமரையும், எள்ளின் புட்பத்தையொத்த நாசிகளும், திரிலோகங்களும் பிரமைகொள்ளத்தக்க புன் சிரிப்பும், வலம்புரிச் சங்குபோன்ற கழுத்தும், மகாலட்சுமி, வாசமாயிருக்கின்ற மார்பும், சகல



சராசரங்களையும் அடக்கிவைத்திருக்கின்ற திருவயிறும், சகலாவர்த்தனங் சுழித்திருக்கின்ற சுழல்போன்ற நாபித்தாமரையும், வாழைத்தண்டையொத்த தொடைகளும், மன்மதபாணம்போன்ற ஆசனமும், செங்கரும்புபோன்ற கணைக்கால்களும், சந்திரரேகை, வச்சிரரேகை, பதுமரேகை, அங்குசரேகை, கவுசிகரேகைகளுடன் சிவந்திருக்கப்பட்ட பாததாமரைகளும், நவரத்தின கசிதமாய் கோடிசூரியவொளிபோற் பிரகாசிக்கின்ற கிரீடமும, மகரகுண்டலங்களும், வனமாலைமுதலிய சுகந்தபரிமள புட்பமாலைகளும், கவுஸ்துவாபரணமுதலிய நானாவிசித்திராபரணங்களும், விநோதடவிதமுப்பீதாம்பரமும், பிரகாசிக்கும்படி மகா வைபவத்துடன் ஒரு கையைச் சிரசின்கீழ வைத்துக்கொண்டு, மற்றொருகையைத் திருமேனிமேல் நீட்டிக்கொண்டு ஆயிரம் பணாமுடிகளையுடைய ஆதிசேஷன்மேலில் யோகநித்திரை செய்துகொண்டிருந்தவர்.

அப்படி விளங்குகின்ற ஸ்ரீரங்கநாதருடைய திருவழகைத் தோத்திரஞ்செய்துகவாமி, தாசனை ரக்ஷித்தருளவேண்டும். ரக்ஷித்தருளவேண்டுமென்று நமஸ்காரஞ்செய்து ஸ்ரீரங்கநாதாய நமஹா, ரங்கநாதாய நமஹாவென்று பலவாறாகத் தவுத்தியஞ்செய்தான. கேட்டீரோ நாரதரேயென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார். அதுகேட்டு நாரதமுனிவரும் ஆச்சரியப்பட்டு மகா சந்தோஷத்தையடைந்திருந்தார்.

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

மூன்றாவது- அத்தியாயமுற்றிற்று.

(*)

ஸ்ரீ இரண்டாமத்தியாயத்தில் கூர்மாவதாரத் துதிகவியல- கலைமதியை மத்தாக்கி என்பதனைகலைமதியைத்தானைக்கி என்று கூட்டிக் கொள்க,

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

நான்காம் - அத்தியாயம்.

(*)

துதிகவி.

விருத்தம்.

கார்முதலோ சேத்தெடுப்பக் கற்றாணி னூரசிங்கச் சொரூபமாகி,
இரணியன்வன் னுயிர்குடித்து ஹரிநமோ நமோவென்றுன் னிரங்கிநிற்கும், ஒருமதலை பிரகலாதனனை யளித் தருளுவாயுயவருய்யத், திருவரங்கத், தாமணைமேற் றிருக்கண்வளர் தெய்வமருளுந் தேவேபோற்றி.

அப்பால் நாரதமகாமுனியானவர் ஸ்ரீகயிலாசபதியாகிய சாம்பசிவமூர்த்திக்கு தெண்டனிட்டு சுவாமீ, அதற்குமேல் பிரமதேவர் நடந்தவர்த்தமானமும் அடியேனுக்குச் சொல்லி அருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்பற்றி அருளுகின்றார். கேட்டீரோ நாரதரே, நீர் இவ்வளவாசையாய்க் கேட்கிறபடியால் அந்த ரகசியத்தையுஞ் சொல்லுகிறோம். அஃதெப்படியென்றால், பிரமதேவர் அந்தரங்க விமானத்திற் பள்ளிக்கொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாதரைப்பார்த்து ஸ்ரீதரா, ஸ்ரீநிவாசா, தாமோதரா, சர்ப்பசயனா, லக்ஷ்மீசமேதா, ரங்கநாயகா, சுவாமீ, ஆயிரஞ் சிரசுகளும் ஆயிரங்கண்களும் ஆயிரங்கைகளும் ஆயிரந் திருநாமங்களுமுடையவராய் ஆயிரங்கோடி பிரம்மாண்டங்களிலும் வாசமாயிருக்கிற உம்முடைய பாதங்களையே நான் சதாகாலமும் பூசைசெய்யவேண்டும். தேவரீரைக்குறித்தே ஆயிரம் யாகங்கள் பண்ணவேண்டும். பக்தஜனங்களை ரட்சிக்கின்ற திருப்பாதங்களுக்கு நமோ நமோவென்று ஆயிரந்தரம் சாஷ்டாங்கமாய் விழுந்து, சேவிக்கத்தொடங்கினான்.

கேட்டீரோ நாரதரே, ஒருதரஞ் சேவித்தால் வந்தனம் இரண்டுதரஞ் சேவித்தால், பிரணாமம் மூன்றுதரஞ் சேவித்தால் தண்டம், நாலுதரஞ் சேவித்தால் நமஸ்காரம், அஞ்சுதரம் சேவித்தால் ஆதிக்யம் பத்துதரஞ் சேவித்தால் சாஷ்டாங்கம் அப்படியிருக்கப் பிரமதேவன் ஸ்ரீரங்க நாமனைப் பார்த்துப் பார்த்துச் சுவாமீ, தேவரீருடைய திருப்பாத கமலங்களுக்கு இதோ, நூறுதரஞ்சேவித்தேன். இதோ, ஆயிரந்தரஞ்சேவித்தேன். இதோ, பதினாயிரந்தரஞ்சேவித்தேன். இதோ, கோடிதரஞ்சேவித்தேன். இதோ, பத்துகோடிதரஞ்சேவித்தேன். நான் இப்படியே உம்முடைய திவ்வியரூபத்தை சதாகாலமும் சேவிக்கவேண்டும். ஓய் லோகநாதா, தேவரீர் எனக்குப் பிதாவாகையால் என்னிடத்திற் கிருபை செய்யவேண்டும். ஓய் ஆதிதேவா தேவரீர் எனக்குப் பிரசன்னமாய் எழுந்தருளிவந்து, காட்சிகொடுத்தருளவேண்டும். ஸ்ரீமந்நாராயணா முகுந்தா, பத்மநாபா, ஹரிவாசுதேவா, வைகுண்டவாசா, செகந்நாதா, கோவிந்தா, ஸ்ரீரங்கநாதா, ஸ்ரீரங்கேசா, ஜெயம் ஜெயம் என்று ஸ்தவுத்தியம் பண்ணி பின்னரும் அந்தப் பகவானைப்பார்த்து சுவாமீ, தேவப்பிராமணர்கள் உமது திருமுகத்திற் பிறந்தவர்கள் க்ஷத்திரியர்கள் உம்முடைய கைத்தாமரையிற் பிறந்தவர்கள் வைசியர்கள், உம்முடைய துடையிற்பிறந்தவர்கள் சூத்திரர்கள் உம்முடைய பாதத்தில் பிறந்தவர்கள் ஆகையால், அவரவர் வர்ணாசிரம தர்மகர்மங்களும் நீரே அதுவுமல்லாமல், இந்திரனும், அக்கினியும், உம்முடைய திருமுகம் சந்திரனும், சூரியனும், உம்முடைய கண்கள் இந்தப் பிரசண்டவாய்வு உம்முடைய பூரணவாய்வு இந்தப்பூமி உம்முடைய திருவடி அந்தரலோகம் உம்முடைய நாபி சொர்க்கலோகம் உம்முடைய சிரசு அட்டதிக்குப்பாலர்களும் உமது ஏவலாளர்



பூதேவியும், ஸ்ரீதேவியும், உமது ஸ்திரீகள் மன்மதன் உமக்குத் திருமகன் இரவும் பகலும் உமது திருமேனி யொளிவாகும்.

இப்படி சர்வ பூதங்களிலேயும் சர்வேந்திரியாமியாய் வியாபித்து சகல ஜீவராசிகளையும் பிறக்கும் நாலுவேதங்களும் உமக்கு அங்கமாயிருக்கும். அஃதெப்படியென்றால், சாங்கியயோகம் பாதசாஸ்திரம், யாகசாஸ்திரம், வயித்தியசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், சோதிடசாஸ்திரமுதலானவைகளெல்லாம் உம்முடைய வசனங்களாம். வேதமூர்த்தியாயிருக்கிற தேவரீரே, புருஷோத்தமர் உம்முடைய ரசதகுணத்தில் ஆதிசேஷனும் தாமதகுணத்தில் ஏகாதசருத்திரர்களும் பிறந்தார்கள். ஓ ஜெகத்காரணா, ஸ்ரீமந்நாராயணா, உம்மைப்பார்க்கிலும் அதிகமான தெய்வமில்லை. உமக்குச் சமானமான தெய்வமுமில்லை. அக்கினியும், வாயுவும், உம்முடைய ஆக்கினைப்பிரகாரமே நடக்கின்றார்கள். சந்திரனும், சூரியனும், உம்முடைய கட்டளையின்படியே நடக்கின்றார்கள். மிருத்தியு தேவதையும உமது கட்டளையின்படியே நடந்துவருகின்றது. ஆகையால் உமக்கு இன்னமும் அநேக நமஸ்காரம்பண்ணுகிறேன். ஸ்ரீரங்கநாமா, மோட்சத்திற் கதிகாரியும் நீரே மாயாபிரபஞ்ச சம்சாரமானதும் நீரே ஸ்தூலசூட்சம் காரணமும் நீரே இந்தப் பிரபஞ்சமெல்லாம் உமது லீலாவினோதமாகப் பிரகாசிக்கின்றது. ஆதிபுருஷனும் அட்சயபுருஷனும் நீரே வளரப்பட்டதும் முறையப்பட்டதும் நீரே அச்சுதனாயிருக்கிற உமக்கு அநேக நமஸ்காரம்.

கர்மபந்தங்களினாற் செனம பந்தப்பட்டுச் சேதனமாய்ச் சஞ்சரிக்கின்ற சகல உயிர்களும் நீரே அசேதனமாய்ச் சஞ்சரியாமலிருக்கிற தாமரசங்கமங்களும நீரே அவைகளுக்குத் தகுந்த போகபோக்கியங்களை யூட்டிவிக்கிறவரும் நீரே ஸ்ரீநிவாசா, உமக்கு வந்தனம் சங்கருஷ்ணா, பிரத்தியும்னா, அனுருத்திரா, பரவாசுதேவா, மதுசூதனா, திரிவிக்கிரமாவாமனா, ஸ்ரீரிஷிகேசா, தாமோதரா, ஸ்ரீரங்கசாயிசேசதா, மாதவா, கோவிந்தராஜா, கோபாலா, ஸ்ரீவேங்கடேசா, வேணுநாதப்பிரியா, உமக்கு நமஸ்காரம் காளிங்கமர்த்தனா, கம்சஹரனா, மாயவா, மச்சாவதாரா, கூர்மரூபா, வராகசொரூபா. நரசிம்மமூர்த்தி, பரசுராமா, பலராமா, அயக்கிரீவா, உமக்கு நமஸ்காரம்புராணபுருஷா, புங்கசயனா, பக்தவச்சலா, பரந்தாமா, நமோ நமோவென்று ஆனந்தத்தில் ஸ்தவுத்தியம பண்ணிக்கொண்டு நிற்கின்ற பிரமதேவனை அந்தபகவான் கிருபாகடாட்சத்தினாலே எடுத்துப் பார்த்து வாரும்பிள்ளாய் பிரமாவே, நாம் நீசெய்த தபசுகளாலும் நீசெய்த ஸ்தவுத்தியங்களினாலும் சந்தோஷமடைந்தோம் நீ முன்னமே நாம் கட்டளையிட்டபடி சகலலோகங்களையுங் கிரமமாகச் சிருஷ்டிபண்ணினதற்கு மெச்சினோம்,

ஆகையால், இந்தப் பூரண்டலத்தில் எவனாகிலும் நீ இப்போது நம்மை ஸ்தவித்ய பண்ணின திருநாமங்களைப் பரிசுத்தனாயிருந்து இடைவிடாமல் பாராயணஞ்செய்வானாகில், நாம் அவனுக்குப் பிரசன்னமாகி

அவன் கேட்டவரங்களெல்லாம் கொடுப்போம். நீ செய்த தபசுக்கும் ஸ்தோத்திரங்களுக்கும் பிரியப்பட்டு, நம்முடைய நிஜசொருபத்தை உனக்குத் தரிசனங்கொடுத்தருளினோம். அல்லாமலும், இனிமேல் உனக்கு வேண்டிய வரத்தையுங் கேட்பாயாகில், அதுவுந் தருகிறோமென்று பரிபூரணகடாட்சத்தினால், அமிர்தவருஷம் வருஷித்ததுபோல் திருவாய்மலர்ந்தருளினார். கேட்டீரோ நாரதமுனிவரேயென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார்.

அதுகேட்டு நாரதரும், பரமசிவனைப்பார்த்து சுவாமீ, காளகண்டமூர்த்தி அந்தப் பிரமதேவன் ஸ்ரீரங்கநாதனை ஸ்தவுத்தியம்பண்ணின திருநாமங்களைக்கேட்டு அடியேன், கிருதார்த்தனாயினேன். இனிமேல், எந்தக்காலத்தில் நானும உபயகாவேரி சூழ்ந்திருக்கப்பட்ட திருவரங்கமென்னுந்திவ்வியஸ்தலத்திற்குப்போய் காவேரிதீர்த்தத்திலும் சந்திரபுட்கரணி தீர்த்தத்திலும், மகா பத்திவிநயத்துடனே ஸ்நானம்பண்ணி ஜெபதபானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அப்பால், அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராயும் ஆதிமத்தியாந்தரகிதராயும் ஆபத்பாந்தவர அநாதரட்சகராயும் அகிலபுவன சம்ரட்சகராயும கரிராஜவரதராயும் விளங்கப்பட்ட ஸ்ரீரங்கநாயகனைச் சேவித்துப் பூசித்து நேசிக்கப் போகிறேனென்று பலவாறாகத் தோத்திரம்பண்ணினார்.

நான்காவது- அத்தியாயம்- முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

## ஐந்தாம்- அத்தியாயம்.

துதிகவி.

விருத்தம்.

அகமமறை கொண்டொருமுன் றலகினையு மொருகுடையி லாகசெய்து, நிகழுமா வலிபுரலோர் வாமனமாய்ச் சென்றுசிரப் புற்றார்போல, நிகழுமொரு மூவடிமண் கொண்டவனை சகமடக்கி யிமையோர்போற்றச், சகமதனிற்பொன்னரங்கந் தன்னிலறிதுயில்வளருந் தாணுபோற்றி.

அப்பால் நாரதபகவான் எழுந்திருந்து சாம்பவமூர்த்திக்கு நமஸ்காரஞ்செய்து ஓய்சுவாமீ, காமதகனா அந்தப் பிரமதேவனுக்குப் பெருமாள் சாதித்தருளிய வரப்பிரசாதங்களையும் பிற்பாடு நடந்த சகல வர்த்தமானங்களையுந் தெரியச் சொல்லவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார்.



கேட்டீரோ நாரதரே, பெருமாள் அப்படி திருவுளம செய்தருளிய வசனமிர்தங்களைக்கேட்டுப் பிரமதேவனும் சந்தோஷத்தையடைந்து சுவாமீ, கருணாகடாட்சா, கஜேந்திரவரதா. தேவரீர் அடியேனிமித்தம் இந்தத் திருவுருவத்துடன் பிரசன்னமாய் எழுந்தருளிவந்து, பிரத்தியக்ஷ தரிசனங் கொடுத்தருளியது. உண்மையாகில், எப்போதும் இந்தத் திருவுருவத்துடன் இந்தத் திவ்விய விமானத்தில் எழுந்தருளியிருந்ததே தெரிசனங் கொடுத்தருளவேண்டும். இந்தத் திவ்விய ஸ்தலத்திலேயே இடைவிடாமலிருந்து திரிகாலமும் பூசைமுதலிய சர்வோபகாரங்களுஞ் செய்யவேண்டும். இப்படிப்பட்ட மகத்துவமுள்ள திவ்வியாலங்கார விமான தரிசனஞ்செய்த பக்தசனங்களுக்கு நாளுக்குநாள் அஷ்டாயிசுபரியமும் ஆயுராரோக்கியமும் தெய்வபக்தியும் குருபக்தியும் விர்த்திக்கச்செய்து சரீராந்தத்தில் மரணவேதனையின்றி அநாயாசமரணமாய் உம்முடைய திருவடி நிழலில்வந்து, சேவைசெய்யும்படி கடாட்சித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டுப் பெருமாள் திருவுளமகிழ்ந்து ஓய்பிரமாவே, நாம் எப்போதும் இந்த விமானத்திலிருந்தே உனக்கும் மற்றுமுண்டான பக்த சனங்களுக்குங் காட்சிகொடுத்தருளுகின்றோம்.

நமக்கு உன்னுடைய கைகளினாலேயே தினமானம் அஞ்சுகாலமும் பூசைமுதலான சகலோபசாரங்களும் பண்ணவேண்டும். இப்படி நூறுவருஷகாலம் தப்பாமல் மகா பயபக்தி விசுவாசத்துடனே பூசைபண்ணுவாயாகில், ஸ்ரீவைகுந்தத்தில் நம்முடைய பக்தஜனங்களாய் விளங்கப்பட்ட நித்தியாயிசுவரியர்களுடன் சுகித்திருப்பாய் அதற்குச் சந்தேகமில்லை. அந்த வைகுந்தத்தின் பெருமை எப்படிப்பட்டதென்றால், பிரமாண்டங்களுக்கு அப்புறம் இசயாணமிருக்கும் அதற்கு அப்புறம் விரஜாநதியிருக்கும். அதற்கு அப்புறம் ஸ்ரீவைகுந்தமிருக்கும். அந்த வைகுந்தத்தில் நாம் பிரகிருத திவ்வியமங்கள சரீரத்துடனே பிராட்டி சமேதராயிருந்து தரிசனங்கொடுப்போம். நாம் அங்கே இருக்கப்பட்ட திவ்விய ரூபத்துடன இங்கேவந்து, உனக்குப் பிரத்தியக்ஷ தரிசனங்கொடுத்தருளினோம். நாம் லீலாவிபூதியாய் சேதனங்களாயிருக்கப்பட்ட மாயாப்பிரபஞ்சங்களையுண்டுபண்ணி அந்தப்பிரபஞ்ச சம்பந்தமான சகல சீவராசிகளுக்குள் நாமே பிரவேசித்து சகல விநோதங்களையும நடத்திவருகின்றோம். சகல பிரபஞ்சங்களையும் நாமே உண்டுபண்ணுவோம். நாமே ரட்சிப்போம் நாமே நாசமாக்குவோம். நம்மால் சகல பிரபஞ்சங்களையும் சகல சீவராசிகளையும் ஆக்கவும் அழிக்கவும் இதுகளால் உண்டாகும். பாபபுண்ணியங்கள் நம்மைச் சேரமாட்டாது. நாம் கிருபையினாலே சகல சீவராசிகளுடைய இருதயம்பரங்களில் எள்ளுக்கு எண்ணெய்போல் வியாபித்துநின்று அவரவர்களுடைய உள்ளத்தில் ஞானவிளக்கைப்பிரகாசிக்கப்பண்ணி அஞ்ஞானவிருளைத் தூரத்திவிடுவோம்.

இதுவுமல்லாமல் நாம் சகல பிராணிகளிடத்திலும் பரிபூரணமாயி
ருந்து அவரவர்கள் வினைக்குத் தகுதியாய் பாரபட்சமில்லாமல் நனுகா
ணபுவன போகங்களைக்கொடுத்துத் தாயானவள் பிள்ளைகளைக் காப்பாற்
றுகிறதுபோல் காப்பாற்றிவருகின்றோம். இப்படிப்பட்ட நம்மை மாயா
விசித்திரத்தினால தேவர்கள் முதலான சர்வசீவராசிகளும் மோகத்தை
யடைந்து கண்டறியமாட்டார்கள். ஆகையால், நம்மை சகல பிராணிக
ளுங்கண்டு தரிசிக்கும்படி மூன்றிடத்தில் நம்முடைய நிஜரூபத்தைக் கா
ண்பித்தருளினோம். இந்த இடங்கள் எங்கேயென்றால் திருப்பாற்கடலி
லும் சூரியமண்டலமும் சொர்க்கமுமாம் அதனால்தான் நமக்குத் திருத்
தாமனென்னு மொருதிரு நாமமுண்டாயிற்று. மேலும், ரூசதர்மகுணங்
களினால் நம்மைக் கண்டறியமாட்டார்கள். இப்படி கண்டுகொள்ளாமல்
மாயாசங் காறுவாழ்க்கையி லமுழ்ந்திக்கிடந்த சீவர்களையெடுத்துக் கரை
யேற்றும்பொருட்டு நாம் சற்பத்துக்குக் சற்பம் ஆயிரம் அவதாரங்களெ
டுப்போம் அப்படி எடுக்கின்றகாலத்திலும் பக்தியினாலாகிலும் சிநேகித்த
தினாகிலும் பிராணபயத்தினாலாகிலும் புத்திரசோகத்தினாலாகிலும் தாசா
னுதாசர்களிடத்திலிருக்கின்ற பிரீதியினாலாகிலும் நம்மை நினைத்தபேர்
களை யிடேற்றிரட்சிப்போம். நம்முடைய பக்தஜனங்களாய் இருக்கிற
வர்கள் நமது கல்யாண குணானுபவங்களைக் கண்டறிந்து, காம, குரோத,
லோப, மோக, மத, மாச்சரிய வர்ச்சிதர்களாயிருந்து இடைவிடாமல்
நம்முடைய திருநாமங்களை ஸ்தவுத்தியம்பண்ணிக கொண்டாடுவார்கள்.

இன்னமும் நாம் பவித்தமான லீலாவதாரங்களெடுத்து சகல சீவரா
சிகளையும் ரட்சியஞ் செய்விப்போம். மேலும், நாம் சர்வ பூதங்களிடத்தி
லும் வியாபகமாயிருந்து பக்தஜனங்களை ரட்சிப்போம். நாம் ஞானரூப
மான சரீரங்களிலும் புகுந்து இச்சா சப்பாதமாய் ஞானரூபமும் அஞ்ஞா
னரூபமெடுப்போம். அர்சாவ தாரங்களாகவும் மனுஷாவதாரங்களாக
வும் மிருகாவதாரங்களாகவும் பிறப்போம் அதுவுமல்லாமல், அர்ச்சாவதா
ரம் என்கிற விக்கிரக சொரூபமாகவும் விளங்குவோம். மரங்களிலும்,
பஞ்சலோகங்களிலும், கல்லுகளிலும், மிருத்துக்களிலும், பிரகாசித்
திருப்போம். பரமாத்துமாவாகிய நாமே சேதனா சேதனங்களாய் பூமி
யில் சஞ்சரிக்கப்பட்ட சராசரவஸ்துக்களாய் விளங்குவோம். ஆகையால்
இப்படி அர்ச்சாவதாரமாய்ப் பிரகாசிக்கப்பட்ட விக்கிரக சொரூபங்களை
எவனாவது கல்லென்றும், செம்பென்றும், மரமென்றும், பொன்னென்றும்,
மண்ணென்றும், சித்திரப்பட்டமென்றும், நிந்தைசெய்து பரியாசம்பண்ணு
வானாகில், அவனையும் அவன் வம்சஷக்காரனையும் நரகத்திலழுந்தப்
போடுவோம். நம்மைப்பூசை பண்ணுகிறவனையும் நம்முடைய திருநாமங்
களை ஸ்துதிபண்ணுகிறவனையும் நம்மை நமஸ்காரம்பண்ணுகிறவனையும்
நம்முடைய கீர்த்தனைகளை நாள்தோறும் பாராயணஞ் செய்கிறவனையும்
நம்மை ஹரிஹரியென்று மனதினால் தியானம்பண்ணிவாக்கினால்ஸ்தவுத்தி



யம்பண்ணுகிறவனையும் அவன் வங்கிஷத்தாரையும் காப்பாற்றி முடி
வில் சகலசம்பிரமத்தோடு ஸ்ரீவைகுந்தத்தில் பரமபாகவத கூட்டத்
திலிருந்து சேவைசெய்யும்படி பிரகாசித்தருளுவோம் அப்பால் அ
வர்கள் நமது திவ்வியரூபத்தையும் பெருவார்கள் மோக்ஷத்தைப்பெறு
வார்கள்.

ஆகையால் நீநம்மையும் நம்முடைய விமானத்தையுமே பூஜா
யோக்கியனாயிருந்து சர்வதாபூசை பண்ண வேண்டும் சுயம்பாயுண்
டான மூர்த்திகளுந்தவிர மற்றதெல்லாம் ஒருவரால் நிருமிக்கப் பட்
டதாம் அவைகளெப்படி யென்றால் மரங்கல்லுகள் மிருத்துகள் இ
துகளால் நிருமிக்கப்பட்டதுகளுக்கு வஸ்துத் திரயமென்றுசொல்
லப்படும் இதுவுமல்லாமல் சிந்துசெங்கல் பொன்வெள்ளி செம்புக
ளாலும் நிருமிக்கப்படும் நாம் அந்தவிக்கிரகங்களில் அர்ச்சாவதாரஞ்
செய்து பூரணவியாபகமா யிருப்போம் அதுகள் சிற்பசாஸ்திரக்கிர
மப்படி நிருமித்துவைக்க வேண்டும் எப்படி நிருமிக்கவேண்டு மெ
ன்றால் அதிகஅங்கமுமாகாது குறைந்த அங்கமுமாகாது சமமாகவி
ருக்கவேண்டும் ஆகாசத்தைப் பார்த்த பார்வையாகவும் பூமியைப்பா
ர்த்த பார்வையாகவும் இருக்கப்படாது உக்கிரபார்வையாகவு மிருக்
கப்படாது சமதிஷ்டியான பார்வையா யிருக்கவேண்டும் மகாசவு
ந்தரியரூப லாவண்ணியமாய் குளிர்ந்தபார்வையோடு மின்சிரிப்பும்
சிகைளையுமாய் சிற்பசாஸ்திரவிதிப்படி செய்வித்து கிரமப்படி பிரா
ணபிரதிஷ்டைபண்ணிவித்த விக்கிரகத்தைவைத்து பரிசுத்த திரவியங்
ளால் பூஜாயோக்கியன் தவறாமலிருந்து பூசைபண்ண வேண்டும் நா
ம் இப்போது சொன்ன விதிமார்க்கமெல்லாம் இந்தலோகத்திலுண்
டான ஸ்தலங்களிலுள்ள கோயில்களும் விக்கிரகங்களுக்கு மெ
ன்று தெரிந்து கொள்வாயாக.

இந்த ரங்கஸ்தலமும் ரங்கவிமானமும் சுயம்பாக வுண்டானதே
யல்லாமல் ஒருவராய் நிருமிக்கப்பட்ட ... துபோலதெய்விகமா
ய் சுயம்பாயுண்டாகி விளங்கப்பட்ட ஸ் ... ரமுண்டு - அவைபெரி
வைகயனில் திருமுட்டம் திருவேங்கட ... ளக்கிராம பர்வதம்
நைமிசாரணியம் - தட்சண சமுத்திரக் ... மலை உத்திரதிசை
யில் புட்கரக்ஷேத்திரம் நாராயணாசிரம ... ப்பட்டதுக
ளாம், இந்தஎழு ஸ்தலங்களுடன் திருவா ... னட்டுஸ்த
லங்களும் சுயம்பாகவுண்டானதுகளென்று

இன்னும் ... ர்த்திகளால் நிருமிக்கபட்ட ... வைமா
கச்சொல்லுகிறோம் எப்படியென்றால் ... னைக்
குப்பிரகு காஞ்சிபுரத்தில் . அசுவமே ... ரகிறுய-
அப்போதுநாம் தீசெய்யப்பட்ட எக்கியகு ... வரதரா
ஜப் பெருமானென்னும் பெயருடன் அ ... ரம் - அப்
போது நம்மை அத்திகிரியென்னு மலை ... வைத்துப் பூசைபண்
ணுவாய் தென்சமுத்திரத்தில் - அனந்தபத்மநாபனென்னும் பெயரு

டன் பள்ளிகொண்ட திருக்கோலமாய் அவதாரஞ்செய்யப் போகி
றேன்அங்கே எம்மை அனந்தனென்னும் ஆதிசேஷன்பூசைபண்ணப்
போகிறான் கர்ணிகாபுரத்தில் நம்மைசாளியன்பூசைபண்ணப்போ
கிறான் திருநந்திபுரவிண்ணகரத்தில் நம்மைவிசுவகர்மா பூசை பண்ண
ப்போகிறான்- அசுவதீர்த்தத்தில் நம்மை அசுவனிதேவதைகள் பூசிக்
கப்போகிறார்கள் - சக்கரதீர்த்தமென்னுந் திருப்புல்லாணியில் நம்மை
இந்திரன் பூசிக்கப்போகிறான் உற்பலாகவத்தில் பூமிதேவி பூசிக்கப்
போகிறாள் கிருஷ்ணமங்கள க்ஷேத்திரத்தில் வருணன் பூசிக்கப்போ
கிறான் துவாரகாபுரியில் அக்கினி தேவன் பூசிக்கப் போகின் அடி
த்திருப்பதியில் வாய்வுதேவன் பூசிக்கப்போகிறான் விஷ்ணு தீர்த்
தத்தில் ஆகாசவாணியும் கும்பகோணத்தில் தேவர்களும் ராட்சதர்
களும் சாரக்ஷேத்திரமாகிய திருச்சேறையில் காவேரியும் அன்னதீர்
த்தத்தில் அன்னதேவதையும் சொர்க்கவாசலில் அதிதிகளும் திருக்கு
டந்தையில் ஏகாதசருத்திரர்களும் திருநாராயணபுரத்தில் வேதபுரு
ஷனுமாக நம்மைப் பூசிக்கப் போகிறார்கள் மேற்சொல்லிய ஸ்தலங்
கள்தோறும் மேற்சொல்லிய தேவதைகளே பிரதிஷ்டை பண்ணி ந
ம்மைப் பூசிக்கப் போகிறபடியால் அந்தத்தலங்களையுந் திவ்யஸ்தல
ங்களென்று சொல்லப்படும் இதுவுமல்லாமல் ரிஷிகளால் நம்மைப்
பூசிக்கப்படும் ஸ்தலங்களுண்டு அதுவுஞ் சொல்லுகிறேன் அவை
யெவையெனில் திருநெல்வேலியில் சுக்கிரபகவானும் மார்க்கண்டே
யரும் பூசிக்கப்போகிறார்கள் மந்தாரக்ஷேத்திரத்தில் மரீசிமுனிவரும்சி
த்திரக்கூடமென்னும் சிதம்பரத்தில் பதஞ்சலிமுனிவரும் தாமிரவ
ர்ணியில் அகத்தியமுனிவரும் சத்தியகிரியென்னுந் திருமயத்தில்தி
த்திரதும்ம னென்னும் ராஜரிஷிகளும் கொங்கில்பாண்டு முனிவ
ரும் சிகரமென்னுந் தலத்திற்சுபோதனும் நந்திபுரத்தில் விசிச்சக்கிர
வர்த்தியும் கும்பகோணத்தில் மகோதரனும் வியாச தீர்த்தத்தில் வி
யாச முனிவரும் ...கா தீர்த்தத்தில் மயித்திரேயமுனிவரும்
சவுனகாசிரமத்தி... ...வருமாக நம்மைப்பூசைப்பண்ணி அ
வர்கள் இஷ்... ...டைய கிருபாவிட்சணியத்திலே ய
டையப்... ...ங்கள் முழுதும் முனீஸ்வரர்களால்
பிரதிஷ்... ...ம்மைப் பூசைசெய்யப் போகிறபடியா
ல் இ... ...க்ஷேத்திரங்களென்றே சொல்லப்படு
ம் இது... ...ல க்ஷேத்திரங்கள் மனுஷர்களால் திரு
மிக்கப்... ...கள்தோறும் வேதோக்திரக் கிரமப்படி
நம்மை... ...னுஷித்துத் சகலரும் பூசிக்கப்போகிறார்
கள் ... ...ரதிஷ்டைகளாலுண்டாக்கி விளங்கப்ப
ட்ட... ...டுத்திருப்பதிகளென்று சொல்லுவார்,

...திருப்பதிகள்தோறும் அந்தந்த விக்கிரங்
களில் ...ந்த விக்ரக சவுந்தரியத்துக்குத் தகு
தசேவை சா...திருளி ...பயபக்தி விசுவாசத்துடன் சேவிக்



1927

ன்று பாமபாகவதர்களுக்கு இஷ்டசித்திகளைப் பிரசாதிக்கறுளுவோ
ம் அதுகளில் சுயம்பாகவுண்டான எட்டுஸ்தலங்களிலும் சேவிக்கி
ன்றவர்களுக்கு அதிகமானவிசேஷ பலபிராப்திகளைக் கொடுக்கரு
ளுவோம், இந்தசுயம்பாகிய எட்டுதலங்களுக்கும் சுற்றிலும் நாலு
யோசனை தூரமட்டும் புண்ணியக்ஷேத்திரங்களென்றே சொல்லப்ப
டும் அந்த க்ஷேத்திரங்களில் இறக்கப்பட்ட ஜீவராசிகளுக்கு மரண
வேதனையில்லை, மோட்சசம்பத்துண்டு அப்பால் தேவதைகளால் பி
ரதிஷ்டைபண்ணப்பட்ட ஸ்தலங்களுக்கோவெனில் சுற்றிலும் எ
ழுயோசனை தூரமட்டும் புண்ணியஸ்தானங்களென்றே சொல்லலா
ம், முனிவர்களால் பிரதிஷ்டைபண்ணப்பட்ட ஸ்தலங்களுக்கோவெ
னில் சுற்றிலும் ஒருயோசனை தூரமட்டும் புண்ணியஸ்தானங்களெ
ன்று கூறப்படும், மனுஷர்களால் பிரதிஷ்டைபண்ணப்பட்ட ஸ்தல
ங்களோவென்றால் அந்தஸ்தலங்களேயே புண்ணிய க்ஷேத்திர மென்
று சொல்லப்படும் இப்படிப்பட்ட ஸ்தலங்களில் ஜெனன மெடுத்த
பேர்களுக்கும், சார்வகாலவாசஞ் செய்தவர்களுக்கும், இறந்தபேர்க
ளுக்கும், மோட்சமேயல்லாமல் நரகமில்லை.

114713

ஓய் பிரமதேவனே மேலும் அவரவர்கள் வாசம்பண்ணப்பட்ட
கிரகங்களில் நம்முடைய அர்ச்சாவதாரமான விக்கிரங்களை வை
த்து இனிதினை திருவாராதனஞ் செய்து வருவார்களாகில் அந்த
வீடுகளையும் புண்ணிய க்ஷேத்திர மென்றே சொல்லப்படும், அந்த
வீட்டில் தனசம்பத்து தானியசம்பத்து புத்திரசம்பத்தும், பந்
துஜனவிர்த்தியும் பசுவிர்த்தியும், நற்செய்புண்ணிய முதலான பவி
ர்விர்த்தியுமுண்டு அந்த வீட்டில் அஷ்டலட்சுமிகளும் வாசமடைவந்து
செய்வார்கள் அவர்கள் தலைமுறையிலுள்ள பிதிர்களுக்கு நரகமே
யில்லை இதுவுமல்லாமல் சாளக்கிராமம்வைத்துப் பூசித்து பண்ணு
வார்களாகில் அந்தக்கிரகத்தைச் சுயம்பாகிய புண்ணியஸ்தலத்துக்
குச் சமானமாகச்சொல்லப்படும், அப்படி பூசிக்கப்பட்ட பாகவத
ர்களைச் சாட்சாத் ஹரிசொரூபமென்று தோத்திரஞ் செய்யாமல்அ
வதாரகப் பாவித்தவர்களுக்கு நரகமேகதியாகும், அல்லாமலும் ந
ம்முடைய ஆலயத்தின் கோபுரங்களை சிகரங்களை விமானங்களை தோ
ற்றப்படாத நாடுகளும் நகரங்களும் ...களாகும் இந்தத்தி
ருவரங்கத்தைச்சுற்றி இரண்டுயோசனை தூரத்திற்குள் இருக்கின்ற
பேர்கள் சண்டாளர்களானாலும் குருதுரோகிகளானாலும் திருடர்
களானாலும் அவர்கள் இந்தப்புண்ணிய க்ஷேத்திர பலத்தினால் நம்மு
டைய லோகத்தைப் பெறுவார்கள் இந்த க்ஷேத்திரங்களிலுண்டான
பசுபட்சி மிருகங்களும் நாய்நரிகளும் கழுதைகளும் பசாசுகணங்களு
ம் க்ஷேத்திரமகிமையினால் நம்முடைய கிருபாகடாட்ச முண்டாகிப்
புண்ணிய ஜென்மங்களையடையும் அதில் பௌஜென்மமாகப் பிறந்
து புத்தியில்லாதவளால் மகாபாபிஷ்டியாய் பர்த்தாவின் கருத்தறிந்து
பணிவிடை செய்யாதவளாய் கடுமையான சொல்லையுடையவளாய்

பத்தாவின் சொல்லைக்கடந்து நடக்கின்றவளாய் சற்றுமுங் தேவ பத்தியில்லாதவளாய் குடும்பவிர்த்தி யில்லாதவளாய் மாமிமாமற்கிதஞ்செய்யாதவளாய் பத்தாவுக்கு உபசரித்து உண்டியுதவாதவளாய் பாத்திரா பாத்திரமறிந்து பிட்சையிடாதவளாய் சுசியில்லாதவளாய் விபசாரிகளுடனே சாவகாசம்பண்ணுகின்றவளால் வாக்கினால் இடைவிடாமல் ஈனமான துர்ப்பாஷைகளையே வசனிக்கின்றவளாய் பொருளாசையினால் விபசாரம் பண்ணுகின்றவளுமா யிருந்தாலும் அவள் பிறந்திறந்த ஸ்தலமகத்துவத்தினால் நம்முடைய பரிபூரணகடாட்சம்பெற்று நல்லபிறவியைப் பெறுவாள்.

இப்படிப்பட்ட மாயா சம்பந்தமான ஜென்மங்களெடுத்து கர்மபந்தங்களி லகப்பட்டுத்திரியும்படி விதைகப்பண்ணி நடத்து விக்கிற தெல்லாம் நாமேயொழிய வேறொருவ ரில்லை பெண்ஜென்மமெடுத்தபோதிலும் (கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை) என்னும் பழமொழிப்படி பத்தாவின் சொற்படி நடப்பவளாய் அவனது பணிவிடைகளைத் தவறாமல் ஊழியக்காரிபோல் நடத்துகின்றவளாய் காலமறிந்து தாயைப்போல் வுபசரித்து உண்டியுதவுகின்றவளாய் புண்ணியபாவமறிந்து அதிதிகளுக்குப் பிச்சை யிடுகின்றவளாய் குடும்பவிர்த்தி செய்விக்கின்றவளாய் சாந்த குணமுடையவளாய் இன்சொல்லையுடையவளாய் விரதநோன்புகளைச் செய்கின்றவளாய் பிதுர்த் தினங்களில் மகாசுசிகரமாயிருந்து சமையல்செய்கின்றவளாய் துர்ப்பாஷைகளை வசனிக்கத்தெரியாதவளாய் சொப்பனத்திலும் பரபுருஷகமனம் பண்ணாதவளாய் சத்தியவசனத்தை யுடையவளாயிருந்தால் அவள் எந்தசாதியா யிருந்தபோதிலும் அவளெந்த விடத்திற் பிறந்தவளானாலும் அவளையே கற்புள்ளஸ்திரிகள் தெய்வமென்று சதாகாலமும் கைகுவித்து நமஸ்காரம்பண்ணுவார்கள் அந்தப் பதிவிரதையினுடைய பெருமை யிவ்வளவென்று ஒருவராலும் அளவிட்டுச் சொல்லி முடியாது அவளிருக்கப்பட்ட விடமே ஸ்ரீவைகுந்தமென்றும் கயிலாசமென்றும் சொர்க்கமென்றும் சொல்லலாம்.

மேலும் பூலோகத்தில் ஞானவான்களா யிருக்கப்பட்ட பக்தசனங்கள் பாஞ்சராத்திரி கிரமத்தோடு நம்மைத்தினம் ஒருகாலமானாலும் இரண்டுகாலமானாலும் மூன்றுகாலமானாலும் அஞ்சுகாலமானாலும் ஆராதனஞ் செய்வார்களானால் அவர்களுடைய பூசாபலத்தை இவ்வளவென்றுமட்டிட்டு இந்திராதி தேவர்களாலுஞ் சொல்லி முடியாது அவர்களிருக்கப்பட்ட ஸ்தானமே பரம பதமென்றும் அவர்களே பகவானென்று சொல்லலாம் பஞ்சராத்திர கிரமமாவதெப்படி யென்றால் பிராதக்காலத்தில் எழுந்திருந்து ஸ்தானமுதலிய சகலகர்மங்களையு முடித்துக்கொண்டு நந்தவனத்திற் புகுந்து திருத்துழாய் முதலிய சுகந்தபுஷ்பங்கள் வகைவகையாய் சம்பாதித்துக் கொண்டு ஓமத்திரவியங்கள் சம்பாதிக்கவேண்டும் பிற்பாடு உபாதானம்வாங்கிப் பஞ்சயெக்கியம் பண்ணவேண்டும் தமது விக்கிரகதியானம் அறியவேண்டும் அஷ்டாட்சரசெபஞ் செய்யவேண்டும் திரிகாலமும் தப்பாமல் சந்தியா வந்தனம் பண்ணவேண்டும் இப்படி செய்யப்பட்ட பரம புருஷர்களைப் பஞ்சகால பாராயண ரென்று சொல்லப்படும் இப்படி நம்மை அஞ்சுகாலமும் ஆராதிக்கின்றவனே மோட்ச வதிகாரியாவான் அதிற் சந்தேகமில்லை, அவன் வேண்டுமானால் ஆருக்கு மோட்சங் கொடுத்தாலும் கொடுக்கலாம் அவனுக்கு சாமானுக்கிரக சாமார்த்தியமுண்டு.



ஆகையால் ஓய் பிரமதேவனே நீ மகாவுத்தம புருஷனாகையால் நமது துவாதச நாமங்களை இடைவிடாமல் கியானித்து அஷ்டாட்சரங்களைச் செபஞ் செய்வாயாகில் நாலுவருஷகாலம் பிரமபட்டத்தையாண்டு அப்பால் நம்முடைய பாதத்தில் வந்துசேருவாய் சப்தகோடி மகாமந்திரங்களைச் செபம் பண்ணினவன் காயத்திரி செபம் பண்ணுகிறதற்கு அதிகாரியாவான் எழுசன்மங் காயத்திரி செபம் பண்ணினவன் வேதாத்திய னஞ்செய்து எக்கியத்துக் கதிகாரியாவான் அப்படி அனேக சென்மமெடுத்து எக்கியங்கள் பண்ணி தபசுபண்ணி னவனுக்கு நம்மிடத்திற் பத்திபுண்டாகும் நம்மிடத்திற் பத்தியில்லாதவனுக்குத் துவாதச நாமங்களும் அஷ்டாட்சரமும் வரமாட்டாது இந்திரிய நிக்கிரகம் பண்ணி அஷ்டாட்சரத்தைச் செபம் பண்ணினவனுக்குப் பாவநிர்த்தியங்க ளானுகமாட்டாது சர்வகாசதோஷகுணத்தினால் ஒருவேளை நேரிட்ட போதிலும் அவனுக்கு நரகம் வாராது வாசுதேவனாகிய நம்மிடத்தில் பத்தியுள்ளவன் எவனாயிருந்தாலும் அவன் செய்த பாவங்களை நாமேதண்டித்துப் பரிகாரம் பண்ணுவோம் எமனால் தண்டிக்கப்படாது நம்மிடத்திற் பத்தியுள்ளவனுக்கு ஒருபாவமு மில்லை ஒருபலவியாதிகளு மில்லை ஒருபயங்காமுமில்லை அவனுக்குச் சரமகாலத்தில் அநாயாச மரணத்தைக்கொடுத்து வைகுந்தத்திற் சேர்த்துக்கொள்ளுவோம் அகந்தையாகிய நிந்தைகள்செய்து கர்வத்தினால் மகாபாதகத்துக் காளாகி நம்மிடத்திற் பத்தியில்லாதவனா யிருப்பானாகில் அவன் எமதண்டனைக்குள்ளாகி இந்த நரஜன்மத்தைவிட்டுப் பிறவாத ஜெனனங்களிற் பிறந்து துக்கத்தை யனுபவிப்பான் இதுவுமல்லாமல் எவனாகிலும் தினமானம் மகாபயபக்தி விசுவாசத்துடனே மாதா - பிதா - குரு - இவர்களைத் தெய்வமாகப்பாவித்து பூசைபண்ணுவானாகில் அந்தப்பூசை நமக்குப் பண்ணின பூசையாகும் இப்படி சன்மார்க்கமான விஷயங்களைச் செய்யாமல் துன்மார்க்க விஷயங்களை நடத்துகின்றவன் மகாபாபிஷ்டனாய் இகபரசாதனங்க ளில்லாதவனாய் யாவராலும் பாவியென்று சொல்லப்பட்டு ரவுரவாதிநரகத்துக் காளாவான் அவனுடைய வம்சத்தாரும் நரகத்தைவிட்டுக் கரையேறமாட்டார்கள் நம்மிடத்தில் பயபக்தியாய் கிரமப்படி நடக்கின்றவர்களுக்கு ஒருபயங்காமுமில்லை எமதண்டனையுமில்லை.

இப்பிரமதேவனே! தேவர் - மனிதர் - பட்சி - மிருகம் - நிலத்திலூர்வன - சலத்திலூர்வன - ஸ்தாவரம் என்று சொல்லப்பட்ட எழுவகைப் பிறவிகளிலும் மானிடப்பிறவி யெடுப்பதரிது அதிலும் பெண்ணும் அலியுமின்றி ஆண்சென்மமாகப் பிறப்பதரிது அதிலும் கூன் - குருடு - செவிடு - முடமீங்கிப் பிறப்பதரிது அதிலும் உயர்ந்தகுலத்திற் பிறப்பதரிது அதிலும் உயர்ந்தகுடியிற் பிறப்பதரிது அதிலும் அவிவேகமின்றி விவேகியாகப் பிறப்பதரிது அதிலும் வைஷ்ணவனாகப் பிறப்பதரிது அதிலும் பாஞ்சராத்திரக் கிரமந்தெரிந்த ஆசாரியனையடுத்து அஷ்டாட்சர மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு நம்மை இடைவிடாமல் திரிகாலமும் பூசைபண்ணுவதரிது அதிலும் வேதசாஸ்திரபுராண இதிகாசங்களை விசாரித்தறிந்து சித்து அசித்து ஈஸ்வரனென்னும் மூன்றுபதார்த்தங்களையும் ஆசாரியன் முன்னிலையில் சந்தேக விபரீதமறக்கேட்டறிந்து விசிஷ்டாத்துவித நிலையைப் பொருந்தி நிற்பதரிது இப்படி தெளிந்தவனையே பரமபாகவதனென்றும் ஸ்ரீவைஷ்ணவனென்றும் புண்ணிய புருஷனென்றும் மகாபுருஷனென்றும் யோகவானென்றும் ஞானவானென்றும் பிரமாநுபவியென்றும் பிரமஞானியென்றும் மகிருதகிருத்தியனென்றுஞ் சொல்லப்படும்.

மேலும் அகண்டபரிபூரண சச்சிதானந்த பரப்பிரமசொரூபமாய் விளங்கப்பட்ட நாமே பிரமா விஷ்ணு ருத்திரனென்று சொல்லப்பட்ட திரிமூர்த்தி வடிவங்கொண்டு ஆக்கல் அளித்தல் அழித்தலாகிய மூன்றுகிர்த்தியங்களையும் நடத்துவோம் பஞ்சமூர்த்தி வடிவமாகவும் விளங்குவோம் இன்னம் அனேக மூர்த்திகரங்களாகவும் பிரகாசிப்போம் ஆகையால் பூலோகத்தில் நரசென்மமாகப் பிறந்தவர்கள் நம்மிடத்தில் பத்தியாய் நல்வழிப்பட்டு நடக்கவேண்டுமென்று திருவுளம்பற்றியருளினார் கேட்டீரோ நாரதரேயென்று பரமசிவன் திருவாய் மலர்ந்தருள அதுகேட்டு நாரதமுனிவரும் ஆச்சரியமடைந்து இருந்தவிடத்திலேயே ஸ்ரீரங்கமிருக்குந் திசைநோக்கி ரங்கநாதாவென்று தியானித்துச் சும்மாவிருந்தார்.

ஐந்தாவது - அத்தியாயமுற்றும்.

உ

ஸ்ரீரங்கநாதாயநம:

## ஆறா-ம் அத்தியாயம்.

துதிகவி.

விருத்தம்.

மந்திரஞ்சேர்சமர்த்தி சேனைசயாற்பாசிரமம் பேர்பெற்ற
மைந்தனுந் தோன்றி மறையோர்க விடாச்செய் தவநெறியையாயர்



வேந்தன், கோத்ரமுறுங்குலமுழுது மாச்செகுத்தார் மறையோனா
ருந்துணையாய்நின்று, சிந்தைமகிழ்ந்த ரங்கத்திலரவணைமேற் கண்
வளர்ந்த சிதரனைபோற்றி.

அப்பால் நாரதபகவானெழுந்திருந்து ஸ்ரீகயிலாசபதியாகிய சாம்பவமூர்த்திக்குத் தெண்டனிட்டு சுவாமீ தீனதயாளா திரிபுரசுந்தரிமனோகரா தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய திருவரங்கத்தின் பிரதாபத்தைக் கேட்கக் கேட்கவினோதமா யிருக்கின்றது ஆகையினால் பிரமதேவருக்குப் பெருமாள் கடாட்சித்த வரப்பிரசாதங்களையும் அதற்குமேல் அந்தப்பிரமதேவர் நடத்தருளிய கிரமத்தையும் சவிஸ்தாரமாகச் சொல்லியருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார் கேளுமையா நாரதமுனிவரே அதற்குமேல் பிரமதேவன் எழுந்திருந்து அந்தப் பெருமாளுக்கு அனேகமாயிர நமஸ்காரவந்தனை வழிபாடுகள் செய்துசுவாமி வைகுண்டவாசா வரதராசா தேவதேவா தீனரட்சகா தேவரீரை அடியேன் நாள்தோறும் பூசைபண்ணுகிறதற்கு மந்திரமும் சங்கற்பமும் அப்படி விதிதவறாமல் செய்யப்பட்ட பூசையினாலுண்டாகும் பிரயோசனமும் இன்னதென்று பிரகாசித்தருள வேண்டுமென்று வினயமாகக்கேட்க அந்தப்பெருமாள் மனமிரங்கிப் பிரமதேவனைப்பார்த்து வாரும்பிரமாவே நீகேட்டபடியே சொல்லுகிறோம்.

எப்படியென்றால் இந்தப்பாஞ்சராத்திரத்துக்குள் சத்துவமென்றும் புஷ்கரமென்றும் இரண்டுசங்கற்பமுண்டு அவ்விரண்டு சங்கற்பமுமறிந்த ஆசாரியரிடத்தில் தீட்சைபண்ணிக்கொண்டு சிற்பசாஸ்திரக் கிரமப்படி பஞ்சலோகங்களினாற் செய்திருக்கப்பட்ட விக்கிரகத்தைவைத்து பாஞ்சராத்திரிக் கிரமந்தெரிந்த அஞ்சுபேர் உருத்திரர்களோடிருந்து திருவாராதனஞ் செய்யவேண்டும் முன்னே துவாதச நாமங்களையுந் தியானிக்கவேண்டும் பிற்பாடு அஷ்டாட்சர மந்திரத்தைச் செபம் பண்ணவேண்டும் மற்றொரு பதார்த்தங்களிலும் ஆசைவையாமல் நிராசையுள்ளவனாயிருந்து உம்மிடத்தில் மாத்திரம் ஆசைவைத்துப் பூசிப்பானாகில் அவன் நமது சொரூபமாவான் அப்படி பூசித்தபேர்கள் உனக்கு முன்பாக இருந்த ஒன்பது பிரமாக்கள் அதுவல்லாமல் தேவேந்திரன் முதலானசகலதேவர்களும் சப்தரிஷிகள் முதலான முனிகூட்டங்களும் சுயம்புமனுவாதி சக்கரவர்த்திகள் முதலான சகலமனிதர்களும் ஒவ்வொருபிரயோசனத்தி லாசைவைத்து நம்மைப்பூசித்து நானாவிதமான தர்மகர்மங்களிற் பற்றப்பட்டு அவரவர்கள் செய்த காமியதபோபலத்திற்குத் தகுந்த அதிகாரசம்பத்துக்களை யனுபவித்துத் தொலைத்து திரும்பத்திரும்ப அனேகஜென்மங்களை எடுத்தெடுத்து அந்தச்சென்மங்கள் தோறும் நம்மை இடைவிடாமற்பூசித்த நிஷ்காமிய தபோபலத்தினால் தேவத்துவத்தையடைந்து பிறகு மோட்சத்தைப்பெறுவார்கள்.

எவனாகிலும் ஒருபொருளிலும் ஆசையின்றி நிராசையாயிருந்து நம்மைப்பூசிப்பானாகில் அவன் எப்பொழுதும் ஸ்ரீவைகுந்தத்தில் நம்முடைய திருவடியைவிட்டு நீங்காமலிருப்பான் நம்மைப் பூசிப்பவர்கள் மனுஷர்களாயிருந்தாலும் தேவர்களாயிருந்தாலும் முனிவர்களாயிருந்தாலும் ஒரு பலபிராப்தியைநாடிப் பூசைபண்ணுவாராகில் அவர்கள் திரும்பத்திரும்ப அனேகஜென்ம மெடுக்கவேண்டும். உலகத்தில் இதமாயிருக்கப்பட்ட அனேக தானதர்மங்களைச் செய்து அசுவமேதயாகமுதலான நானாவித யாகங்களைச்செய்து இந்திரபட்டத்தைப்பெற்றபோதிலும் அவன் ஆசாரிய பத்தியில்லாதவனானால் அவனை ஒருவரும் புகழ்ந்து கொண்டாட மாட்டார்கள் அவனொருக்காலு மீடேறமாட்டான் நம்முடைய பத்தனாயிருக்கிறவன் ஒருவேளை அறிந்துமறியாமல் எதாவது ஒரு பாபகருமங்களைச் செய்வானாகில் நாம் அவன்பேரில் கடாட்சம்வைத்து அந்தச்சென்மத்தி லில்லாவிட்டாலும் மறுசென்மத்திலாகிலும் அவனுக்கு மோட்சங் கொடுத்தருளுவோம் இந்தப் பிரபஞ்சமெல்லாம் விஷ்ணுமய மென்னவேண்டும் அப்படியெண்ணுகின்றவன் கோடியிலொரு மகாபுருஷனும் சந்திர சூரியர்களும் பலவிதமான பிறவிகளிற் பிறக்கவேண்டும்.

நம்முடைய துவாதச நாமங்களையும் அஷ்டாட்சரத்தையுந் தியானம் பண்ணுகிறவன் வேறொருபிறவியிற் பிறக்கமாட்டான் நம்முடைய பக்திசெய்கின்றவனே உத்தமபுருஷன் இழிவானசண்டாள வமிசத்திற் பிறந்தவனாயிருந்தாலும் நம்மிடத்திற் பத்திசெய்வானாகில் அவனே பரமபுருஷன் எத்தனையுயர்வான குலத்திற் பிறந்தவனாயிருந்தாலும் நமது பக்தவசனங்களை நிந்தனைபண்ணுவானாகில் அவனே சர்வசண்டாளன் நம்முடைய பக்தனானவன் கோஹத்தி பிரமஹத்தி சிசுஹத்தி ஸ்திரீகத்திமுதலானமகாபாதகங்களைச் செய்தாலும் ஆசாரவீனனாயிருந்தாலும் அவன் நம்மை எப்போதும் பஜனைபண்ணுகிறபடியால் அவனே புருஷசிரேஷ்டன் ஸ்ரீரங்கமகத்துவத்தை யறியாமல் நிந்தனைப்பண்ணினால் அவனே பரமசண்டாளனாம் மனுஷராகப்பிறந்தபேர்கள் திருவரங்கத்தை ஒருதரம் மனதில் நினைத்தபோதிலும் அவர்களுக்குச் சொர்க்கமுண்டாகும் நரகமெல்லாம் பாழாய்ப்போகும் ஸ்ரீரங்கமென்று வசனிக்கத்தெரியாத ஒரு மூடனுக்குப்போடுகிற அன்னத்தை நாய்க்குப்போடுகிறதே உத்தமம் பூலோகம் சொர்க்கலோகமுதலான எந்தலோகாந்தரங்களிலிருக்கிறவனானாலும் ஸ்ரீரங்கமிருக்கும் திசைநோக்கி அஞ்சலி யஸ்தனாய் நின்றுதெண்டனிட்டு நமது துவாதசநாமங்களையும் ஸ்தவத்தியம் பண்ணுவானாகிலும் அவனே புருஷார்த்தின மாகையால் ஓய்பிரமாவே நீயும் பரிசுத்தனாயிருந்து பயபக்தி விசுவாசத்துடன் அர்க்கியம்- பாத்தியம்- ஆசமனம் - ஸ்நானம்- வஸ்திரம்-அலங்காரம்-எக்கியம்-கந்தம்-தூபதீபம்- நைவேத்தியம்- மந்திரம்- புஷ்பம் - பிரதட்சணம் - நமஸ்காரம்- குடை- வெண்சாமரை- ஆலவட்டம்- விசிறி- கண்ணாடிமுதலானசர்வோ



பசாரங்களுஞ் செய்து நம்மைப் பூசைபண்ணென்று ஆக்கியாபித்த பெருமாளும் ஸ்ரீரங்கவிக்கிரகரூபமாய் திருவாய் மலரா முகிழ்த்தருளினர்.

திருவரங்கமென்று சொல்லத்தெரியாத மூடனுக்குப்போடுகிற அன்னத்தை நாய்க்குப்போடுவதே உத்தமமென்று பகவான் கட்டளையிட்டருளியதற்கு காரணம்.

தொண்டரடிப் பொடியாழ்வார் கவி.

வண்டின முராலுஞ்சோலை மயிலின மருவுஞ்சோலை
கொண்டல்மீ தணவுஞ்சோலைக் குயிலினங் கூவுஞ்சோலை
அண்டர்கோ னமருஞ்சோலை யணிதிரு வரங்கமென்னா
மிண்டர்பாய்ந் துண்ணுஞ்சோற்றை விலக்கிநாய்க் கிடுமினீரே.

என்பதனாற் காண்க.

அப்பால் பிரமதேவனும் ஸ்ரீரங்கநாயகர் கட்டளையிட்டருளியபடியே மகா பயபக்தி விசுவாசத்துடன் அவ்விடத்தில் அந்த விமானத்திற்குச் சகலோபசாரங்களுங் குறையாமல் நடப்பித்துச் சிறிதுகாலம் பூசைபண்ணி அதன் பிறகு அந்த விமானத்தைச் சிரசின்மேல் தாங்கிக்கொண்டு ஹரி, ஹரி, நமோ, நமோ, வென்றும் ஸ்தோத்திர ஸ்தவத்தியங்களுடனே நடந்து, சத்தியலோகத்தில் விரசாநதிதீரத்திற் கொண்டுபோய்வைத்து, தான் அந்த நதியில் ஸ்நானம்பண்ணி, ஐப்பசிமாசம் கிருஷ்ணபட்சம் துதிகை திதி, ரோகணி நட்சத்திரம், இப்படிகூடின புண்ணியதினத்தில் பெருமாள் திருவாக்கருளியபடி சாஸ்திரயுத்தமாய் பாஞ்சராத்திர எக்கியங்களாற்ற பஞ்சருத்திரர்களுடனிருந்து அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சர்வோபசாரங்களுந் தவறாமல் பூசைபண்ணி, அப்பால் திருவோணநட்சத்திர புண்ணியகாலத்தில் அந்த விமானத்திற்கு மங்களஸ்நானம் பண்ணுவித்து பிற்பாடு, பிரமதேவன் மகா சந்தோஷகரமாய் சுவாயம்புவாதி மனுவான மனுமக்களையும் தட்சப்பிரஜாபதி முதலான பிரஜாபதிகளையும் மற்றுமுண்டான தேவதைகளையும், இன்னமும் தனக்கு ஆசாரியத்திற் பிரீதியிருக்கின்றபேர் அவர்களெல்லாரையும் அழைப்பித்து, அவர்களெல்லாம் அந்த நதியில் ஸ்நானம்பண்ணுவித்து பிற்பாடு, அவர்களுக்கு துவாதச நாமங்களையும் அஷ்டாக்ஷர மந்திரத்தையும் உபதேசம் பண்ணி, பிறகு அந்த விமானமுண்டான தெய்வீகத்தையும் காண்பித்து, தனக்குப் பெருமாள் பிரத்தியட்ச தரிசனமாயிருந்து, பிரகாசித்தருளிய பூஜாக்கிரமங்களையும், விதிதவறாமல் அவர்களுக்குப்போதித்து, அவர்களெல்லாரையும் பரிசுத்தவான்களாக்கி, அந்த விமானத்தை இடையறாமலிருந்து திருவாராதனஞ் செய்விக்கும்படி செய்தான். பிற்பாடு, பிரமதேவன் சூரியதேவனை யழைப்பித்து அவனுக்கும் அந்தப் பஞ்சாட்சரமந்திரக்கிர

மத்தைச் சாங்கமா யுபதேசப்பண்ணி அந்த விமானத்தைப் பூசைபண்ணும்படி செய்வித்து, தான் பிரமபட்டத்திலிருந்தான்.

அப்படியே அந்தச் சூரியதேவனும் பிரமதேவனுடைய கட்டளைப்படி அந்தத் திவ்விய தேசோமயமாய் விளங்கப்பட்ட விமானத்தைச் சிறிதுநாள் மகா பயபக்தி விசுவாசத்துடன் பூசைபண்ணிக்கொண்டுவந்தார். அப்பால், அந்த சூரியதேவன் வைவசுதமனுவை அழைப்பித்து, அவனுக்கு அந்த விமானமுண்டாயின தெய்வீகத்தையுஞ் சொல்லிப்பிரமதேவன் தனக்கு உபதேசஞ்செய்த சகல மந்திரக் கிரியைகளையும் உபதேசம்பண்ணிவித்து, அந்த விமானத்தைப் பூசைபண்ணும்படி கட்டளையிட்டு, அவன் தன்னுடைய ஸ்தானத்திற்குப் போய்விட்டான். அந்த வைவசுதமனுவும் சூரியதேவன் சொல் தவறாமல் பத்திவினயமாய் வெகுகாலம் பூசைபண்ணி, பிறகு தன் குமாரனான இட்சுவாகு மகாராசனையழைத்து அப்பா மகனே, இந்த விமானம் தெய்வீகமாயுண்டானது. இதன் பெருமை ஆயிரஞ் சிரசும் இரண்டாயிரம் நாவுமுள்ள ஆதிசேஷனாலும் சொல்லிமுடியாது. இதை ஆதியில் பிரம்தேவர் பூசைபண்ணினார். பிறகு சூரியபகவான் பூசைபண்ணினார். பிறகு அவருடைய உபதேசம் பெற்றுக்கொண்டு நான் பூசைபண்ணினேன். ஆகையால், நீ இப்போது பூசைபண்ணென்று சொல்லி, அவனுக்குச் சகல மந்திரக் கிரியைகளையும் போதனைசெய்வித்து, அந்த விமானத்தை அவனிடத்தில் ஒப்பித்துப்போட்டு தான் பரமபதஞ்சேர்ந்தான். அதின் பிறகு, அந்த இட்சுவாகு மகாராசனும் தன் பிதாவினுடைய சொல் தவறாமல் பிதாவைப்பார்க்கிலும் மகா பத்திமானாயிருந்து அநேககாலம் பூசைபண்ணி பிற்பாடு, அந்த விமானத்தைப் பூமியிற்கொண்டுவந்து, சேர்த்துச் சிறிது நாள் பூசைபண்ணி பிறகு பெருமானுடைய திருவடியிற் சேர்ந்தான்.

பிற்பாடு, அந்த இட்சிவாகு மகாராசன் வமிசத்திற்பிறந்த ராசாக்களெல்லாரும் கிரமந்தப்பாமல் பூசை நடத்திக்கொண்டுவந்தார்கள். அப்பால், பெருமான் ராவணசம்மார நிமித்தம் ஸ்ரீராமாவதாரமாய் எழுந்தருளினகாலத்தில் விபீஷணரிடத்தில் ஒப்புவித்தார். அந்த விபீஷணாழ்வாரும் உபயகாவேரி மத்தியில் வைத்துப் பூசைபண்ணிக்கொண்டுவந்தார். அதுமுதல் இதுவரையிலும், அந்தக் காவேரி மத்தியிலேயேயிருந்து இந்தக் கலியுகத்தில் மனுஷர்களையில் பூசிக்கப்பட்டு விளங்கிக்கொண்டிருக்கின்றது. கேட்டீரோ நாரதரே, என்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார். அதுகேட்டு நாரதரும், சந்தோஷப்பட்டு ஸ்ரீரங்கவிமானத்தை மனதில் தியானித்துக்கொண்டு மவுனமாயிருந்தார்.

(*)

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

# ஏழாம் அத்தியாயம்

()X()

## காப்பு.

### விருத்தம்.

மணிவயல்சூழ் அயோத்தியினிற் தசரதன்றன் மகவாக மகத்திற்றோன்றி, அணிகெழுந் சீதையைமணந்து கானடைந்து நிசாசரர்களறக்கடிந்து, இனியபுகழ் ராவணன் முதலோர்தமைச் செகுத்துத்தேவர் பயந்தீர்த்தளித்துப், பணியணைமேலரங்கத்திற் கண்வளரும் ஸ்ரீராமபத்திராபோற்றி.

அப்பால் நாரதமுனிவர் எழுந்திருந்து கயிலாசபதியாகிய பரமசிவனுக்கு நமஸ்காரஞ்செய்து சுவாமீ, காளகண்டமூர்த்தி அந்தச் சத்தியலோகத்திற் கொண்டுபோய்வைத்துப் பிரமதேவரால் பூசிக்கப்பட்டிருந்த ரங்கவிமானம் மறுபடியும் பூலோகத்திற்கு வந்தகாரணமென்ன, அந்த விமானத்தை இட்சுவாகு மகாராசாவுக்குப் பிரமதேவர்கொடுத்த காரணமென்ன, அதின் பிறகு சூரியவமிசத்தில் ராவணசம்மார நிமித்தம் அவதாரஞ்செய்தருளிய ஸ்ரீராமமூர்த்தியானவர் அந்த விமானத்தை விபீஷணருக்குக் கொடுத்த காரணமென்ன. அந்த விபீஷணர் அவ்விமானத்தைச் சோழதேசத்தில காவேரி நதிக்கரையில் கொண்டுவந்து வைத்துப் பூசைபண்ணின காரணமென்ன. இந்த வர்த்தமானங்களெல்லாம் சவிஸ்தாரமாகத் திருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதுகேட்டுப் பரமசிவனும் திருவுளமகிழ்ந்து அங்ஙனம் வினயமாகக்கேட்ட நாரதமுனிவரைப்பார்த்து கேளுமையா நீ நாரதரே, இப்போது நடந்துவருகின்ற பிரமகற்பத்துக்குச் சேதவராக கற்பமென்று பெயர். இந்தச் சேதவராக கற்பத்தில் வைவசுத மனுவாந்தரத்தில் முதலாவது கிரேதாயுகத்தில் அந்த வைவசுதமனுவுக்கு இட்சுவாகு மகாராசனென்கிற புத்திரன் பிறந்தான். அந்த இட்சுவாகு பூலோகத்தில் அயோத்தியாபுரியென்னும் பட்டணத்துக்கு ராசாவாய் பரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தான், அவன் பரமபாகவதருக்குள் சிரேஷ்டனானவன் மேலும், மகாவிஷ்ணுவுக்கு அந்தந்தகாலமுந் தப்பாமல், பஞ்சராத்திரக் கிரமப்பிரகாரம் பூசைசெய்யப்பட்டவன். அவனுக்குப் பாட்டனான சூரியதேவன் நாலு வேதமும், ஆறுசாஸ்திரமும், பதினெண்புராணங்களும், அப்பியாசம் பண்ணிவித்திருந்தான். அதின்பிறகு இட்சுவாகு மகாராசனும் வசிஷ்டமுனிவரைக் குருவாக்கிக்கொண்டு அவரிடத்தில் மகா பயபக்தி விசுவாசத்துடன் சிஷனாயிருந்து சகலநீதி சாஸ்திரங்களையும் ஞானசாஸ்திரங்களையும் கற்றறிந்து சகல சாஸ்திர நிபுணனாயிருந்து, அநேக யாகாதி கிருத்தியங்களைச்செய்து பூலோகத்தில் துஷ்டர்களாயிருக்கப்பட்ட அநேக

ருட்சதர்களைக்கொன்று ஜெயத்தைப்பொருந்தி ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களும் புகழும்படியான சௌரியபராக்கிரமத்தைப் பெற்று சகல தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிரியமுள்ளவனாயிருந்து, அவர்களுக்கெல்லாஞ் சதாகாலமும் உபகாரமே பண்ணிக்கொண்டு மகா நீதிமானாயிருந்து பூலோகமுழுதும் ஒருகுடை நிழலின்கீழ் அரசாட்சிசெய்து வருங்காலத்தில்.

ஒருநாள் அந்த இட்சுவாகு மகாராசனும் ஏகாந்தமாயிருந்து பூர்வத்தில் தனனுடைய பிதாக்களால் நடத்தப்பட்டிருந்த சற்கருமானுஷ்டானங்களை மனதில் நினைத்துக்கொண்டு ஓகோ, நாமே இஞ்சிற்றாகிலும் விஷ்ணுபக்திசெய்யாமல்; அயிஸ்வரியமமதையடைந்து இதுவரையில் விருதாகாலக்ஷேபமாய் நம்முடைய வாணாட்களெல்லாம் வீணாட்களாய்க் கழித்துவிட்டோமே நம்முடைய பிதாவாகிய வைவசுதமனுவும் பாட்டனாகிய சூரியபகவானும், சத்தியலோகத்திற்குப்போய் சதுர்முகப் பிரமாவைக்கண்டு, அவரை ஆசாரியராகக்கொண்டு அவருக்கு வந்தனை வழிபாடுகள்செய்து அவருடைய கடாட்ச வீட்சணியத்தினால் பஞ்சாக்ஷர கிரமத்தையறிந்து அவரிடத்தில் தானே அஷ்டாக்ஷர மந்திரோப தேசத்தையும் பெற்றுக்கொண்டு, அவருடைய அனுமதியின்பேரில் ஸ்ரீரங்கவிமானத்தை நெடுங்காலம் பூசைபண்ணினபடியால், அவர்கள் சகல மகிமையும் மோட்சத்தையும் பெற்றார்கள். அதுவுமல்லாமல், தேவேந்திரன் முதலாகிய சகல தேவர்களும் முனீஸ்வரர்களும் சத்திய லோகத்திற்குப் போய், அந்த விமானத்தைப் பூசைபண்ணி, ஸ்ரீவைகுந்தத்தை அடைந்தார்கள். நாம் இந்த பூலோகத்தை விட்டுச் சத்தியலோகத்திற்குப்போய் பூசைபண்ணக்கூடாது. நம்முடைய பிற்காலத்தில் நமது வமிசத்திற் பிறக்கப்பட்ட பிள்ளைகளும் சத்தியலோகத்திற்குப்போய் ரங்கவிமானத்தைக்கண்டு, பூசைபண்ணிக் கிருதார்த்தர்களாகமாட்டார்கள். சத்திய லோகத்திற்குப் போவது எவர்களுக்கும் அசாத்தியமாகவேயிருக்கும். ஆகையினால், இவர்களெல்லாரும எந்தக்காலத்தில் ஸ்ரீரங்கவிமானத்தைக் கண்டு, பூசைபண்ணிக் கரையேறப்போகிறார்கள்.

ஆதலால் நாமே தபசுபண்ணி நம்முடைய தபோபலத்தினால் அந்த திவ்வியவிமானத்தை பூலோகத்திற்கொண்டுவந்து சேர்த்துப் பாஞ்சராத்திரிக் கிரமந்தவறாமல் அநுதினகாலமும் பூசைபண்ண அந்த பகவானுடைய பாதாரவிந்தங்களைச் சேரவும் நம்முடைய சந்ததியிற் பிறக்கின்றவர்களும் அப்படியே அந்த விமானத்தைப் பூசைபண்ணி பரமபாகவதர்களாவார்களென்று ஆலோசனைபண்ணி தீர்த்தமானுக்கியத்துடனே எழுந்திருந்து முனிவர்களுக்கெல்லாம் விசிஷ்டராகிய வசிஷ்டமுனிவரிடத்திற்குப்போய், அவரைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, அவனிடத்தில்தான் ஆலோசித்து, வந்தகாரியத்தை மகா விநயத்துடனே விண்ணப்பஞ்செய்தான். அந்த விண்ணப்பத்தைக்கேட்டு வசிஷ்டமுனிவரும் சந்தோஷத்தையடைந்து சிஷ்யனாகிய இட்சுவாகு மகாராசனைப்பார்த்து வாருமையா ராசாவே, அந்தப் பிரமலோகமாகிய சத்தியலோகத்திலிருக்கின்ற



ஸ்ரீரங்கவிமானம் நீர் செய்யப்பட்ட தபோபலத்தினால் பூலோகத்தில் வரப்போகிறதென்றும் அந்த விமானத்தைப் பூசைபண்ணி உம்முடைய வமிசத்திற் பிறக்கின்றவர்களெல்லாம் பரமபதத்தை அடையப்போகிறார்களென்றும் இன்னம் சிறிதுநாள் கழிந்த பிறகு உங்கள் சூரியவமிசத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே ஸ்ரீராமாவதாரம்பண்ணி ராவணசம்மாரஞ் செய்து பிற்பாடு அந்த ராவணேசுரனுடைய தம்பியாகிய விபீஷணருக்கு இலங்காபுரிபட்டணத்தைப் பட்டங்கட்டுவித்து, அந்த விபீஷணர் பூசைபண்ணும்படி, ஸ்ரீரங்கவிமானத்தைக் கொடுக்கப் போகிறாரென்றும், அப்பால் அந்த விபீஷணாழ்வார் விமானத்தை மகா பயபக்தியுடனே கொண்டுபோய் சோழதேசத்தில், காவேரி நடுவில் சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் எழுந்தருளிச்செய்து, பூசைபண்ணப்போகிறாரென்றும் பிற்பாடு, பிரளய பரியந்தமும் பிரமதேவர், பூலோகத்தில், சந்திரபுஷ்கரணி தீர்த்தத்திற்குவந்து, தினமானம் அந்த விமானத்திற்குத் திருவாராதனஞ்செய்து முடித்து மறுபடியும், நம்முடைய சத்திய லோகத்திற்கும் போவாரென்றும் நாம் ஞானதிருஷ்டியினாலே முன்னமே அறிந்திருக்கின்றோம்.

ஆகையினால், நீர்செய்த ஆலோசனை நல்லதாச்சுது மேலும் இந்தப் பூலோகத்திலுள்ள சகல சீவராசிகளும் பாபத்தினின்று நீங்கி மோட்சத்தைப்பெறும்படி நீர் தபசுசெய்வதற்குப் பிரயத்தனஞ் செய்தபடியால் அந்த தபசு ஒரு விக்கினமுமில்லாமல் நீர் விக்கினமாய் நிறைவேறக்கடவது. மேலும், அந்த தபோநிலைக்கு தேவதைகள் மிக்கவும் விகாதம்பண்ணுவார்கள்- அந்த விகாதங்களெல்லாம் உம்மை அணுகாமலிருக்கக்கடவதென்று ஆசிர்வாதம்பண்ணி அஷ்டாட்சர மந்திரத்தையும் உபதேசித்தருளினார். பிறகு, இட்சுவாகு மகாராசனும் தனது ஆசாரியராகிய வசிஷ்ட மகாமுனிவருக்கு நமஸ்காரம்பண்ணி, சுவாமி, நான எவ்விடத்திலிருந்து தபசு பண்ணலாமென்று கேட்க, அதற்கு வசிஷ்டரும் அந்த ராசனைப்பார்த்து ஓய்ராசனே நீர் உம்முடைய ஆசிரம சமீபத்தில் தானேயிருந்து தபசுபண்ணலாமென்று கட்டளையிட்டருளினார். அதுகேட்டு, இட்சுவாகு மகாராசனும் தனது ஆசாரியராகிய வசிஷ்டபகவான் சொற்படியே அவரது ஆசிரமசமீபத்திற்றானே தபசுக்கு வேண்டிய சகல உபகரணங்களையுஞ் சேகரித்துக்கொண்டு பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் பண்ணிவிட்டு ஏகமனமாயிருந்துக்கொண்டு தபசுபண்ணத் தொடங்கினான் அஃதெப்படியென்றால்.

வெயிற்காலமெல்லாம் பஞ்சாக்கினி மத்தியில் நின்றும் வருஷகாலமெல்லாம் சலஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு வெட்டவெளியினின்றும் குளிர்காலமாகிய பனிக்காலமெல்லாம் கழுத்தளவு தண்ணீரில் நின்றும் பசிதாகமுதலிய சவுக்கியங்களை நீக்கியும், தன் மனோவியாபாரங்களை நிக்கிரகஞ்செய்யும்படியாகவும் வைராக்கிய சித்தனாயிருந்து அகோர தபசுபண்ணினான். அதையறிந்து, தேவேந்திரன்முதலான சகலமான தேவர்களும்

ஒன்றாகக்கூடி ஓ, ஓ, என்னகாரணம். பூலோகத்தில், சூரிய வம்சத்திற் பிறந்த இட்சுவாகு மகாராசன் எந்தப்பதவியை அடையவேண்டுமென்று நினைத் திப்படிப்பட்ட அகோரமான தபசுபண்ணுகிறானென்றுதெரியவில்லை. இதையறிந்து, நாம் கெடுத்துப்போடவேண்டுமென்று ஒருமுகமாய் ஆலோசனைபண்ணி, பிறகு மன்மதனிடத்திற்குப்போய் மன்மதனைக்கண்டு, தேவேந்திரன், முதலான சகல தேவர்களும் வெகுவாய்ப்பிரார்த்தித்தார்கள். அதற்கு, மன்மதன் சந்தோஷப்பட்டு ஐயா, தேவேந்திரன்முதலான தேவர்களே, இப்போது நான் உங்கள் கருத்தின் பிரகாரமே பூலோகத்திற்குப்போய் இட்சுவாகு மகாராசனைக்கண்டு, அவன் மனதில் மோகவிகாரமுண்டாகும்படிசெய்து அவன் செய்யப்பட்ட தவத்தை விக்கினம்பண்ணி ஒரு நிமிஷத்தில்வந்து உங்களுக்குத் தெரிவிக்கிறேனென்று உறுதியாகச் சபதம்பண்ணிவிட்டு, தென்றலாகிய ரதத்தின்மேலே மகா வல்லாசத்துடனேறிக்கொண்டு மீனக்கொடியானது பிரகாசிக்கவும், சந்திரனும், வசந்தனும், சகாயமாய் வரவும் யக்ஷஸ்திரீகளெல்லாம் சேனைகளாய்ச் சேர்ந்துவரவும் குயிற்கானமும் சமுத்திரபேரிகையும் ஒலிக்கவும் தாம்தாமென்று மகா வைபவத்துடனே இட்சுவாகு மகாராசன் தபசுபண்ணுகிற வசிஷ்டாசிரமத்திற் சமீபத்திற்குவந்து சேர்ந்தான். அப்போது, அந்த நந்தவனத்திற் பிரகாசிக்கப்பட்ட முல்லை, அசோகு, நீலம், சூதப்பூ, முளரி, இருவாட்சி, சண்பகம், புன்னை, பாரிசாதம்முதலான புஷ்பவகைகளெல்லாம் மகா சுகந்தபரிமளங்கள் வீசும்படி மலர்ந்ததுகள் அந்தவனத்தில் மன்மதனுடனே வந்த யக்ஷஸ்திரீகளெல்லாரும் மகா விநோதமாகப் பாடிக்கொண்டும் பரதசாஸ்திர முறைமைப்படி யாடிக்கொண்டும் விகசிதமான புஷ்பங்களைப்பறித்து ஒருவர்பேரில் ஒருவரெறிந்தும் விகடமான பரிபாசவார்த்தைகளை வசனித்துக்கொண்டு மிருந்தார்கள். அந்தச் சமயத்தில் மன்மதனானவன் மகாபராக்கிரமத்துடனும் விளங்கப்பட்ட இட்சுவாகு மகாராசனுக் கெதிரேபோய்நின்று தன்னுடைய கையிற் பிடித்திருக்கின்ற கரும்பாகிய வில்லைவளைத்துச் சுரும்பாகிய நாணியேற்றிட்டு, மோகனாஸ்திரத்தைத்தொடுத்து குயில்கள், கிளிகள், கானம்பிடிக்கவும் வண்டுகள் ரீங்காரம்பண்ணவும் இவ்வகையாய் சம்பிரமத்துடனே இட்சுவாகு மகாராசன் பேரில் பிரயோகம்பண்ணினான். அப்போது, இட்சுவாகு மகாராசன தபோநிலையைவிட்டு, நீங்காதவனுங் கண்களைவிழித்து இதென்னகாரணமென்று பார்க்குமளவில், மகா சமுத்திரத்தில் அநேகமாயிரமான மகா மச்சங்கள்கூடி ஏககாலத்தில் சண்டைசெய்து கலக்கினவெப்படியோ அப்படிபோல் அந்தத் தபோவனத்தில் மன்மதனும் வசந்தனும், சந்திரனும், தென்றலும், குயில்களும், கிளிகளும், யக்ஷஸ்திரீகளுமாய்க்கூடி அல்லோலங்கள் செய்வதைப்பார்த்து அணுமாத்திரமும் தவநிலைபிசகாமல் நிவாத தீபம்போற் பிரகாசித்திருந்த அவர்களையெல்



லாம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சொரூப மாகவேகண்டு, அவர்களுக்கெல்லாம் நமஸ்காரம்பண்ணி அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சர்வோபசார பூஜைகளும் ஆனந்தமாகச்செய்தான்.

எப்படியென்றால், அதிதிகளாகிய பெரியோர்களை எப்படிபாவித்துப் பூஜைபண்ணுவார்களோ அப்படியே இவர்களைப்பாவித்து பூஜைபண்ணினான். அதுகண்டு, மன்மதனுடைய சேனைகளெல்லாரும் பயந்து, நடுநடுங்கினவர்களாய் தைரியத்தையும் ஆச்சரியத்தையுமடைந்து மிகவும் வெட்கத்துடனே நின்று, இந்தத் தபோநிஷ்டருக்கெதிரேநின்று நாம் ஏதாகிலும், சேஷ்டைபண்ணினால் நம்மை அநேகவிதமாய் சபித்துவிடுவாரென்று ஆலோசித்துக்கொண்டு, சுவரிலெழுதிய சித்திரப்பதுமைகள் போல் அசையாமல் நின்றுவிட்டார்கள். அந்தச் சமயத்திலே வசந்தனும் மெள்ளமெள்ள நழுவிப்போய்விட்டான். சந்திரனு மறைந்துவிட்டான். ரம்பையும், திலோத்தமையும், தலைசாய்ந்தார்கள். இன்னும், மற்ற ஸ்திரீகளெல்லாரும் நாம் இவிடத்திலிருக்கப் போகாதென்றெண்ணி, மறைந்துபோய்விட்டார்கள். ஊர்வசியும், மற்றுமுண்டான யக்ஷஸ்திரீகளும், முகஞ்சோம்பி தலைசாய்ந்துக்கொண்டு தங்களுக்குள் தாங்களே விசனப்பட்டு ஐ ஐ இப்படிப்பட்டமகோதபசியையும் சாந்தகுணமும் வைராக்கியமும் சிறந்தபத்தியும் புண்ணியசித்தியுமுடைய ராசனென்றறியாமல், இவனைச் செயிக்கும்படியாய் நினைத்துவந்து மோசம்போனோம். நாம் இனிமேல் இவிடத்திலிருந்தால் நம்மை எல்லாரையும் இந்த ராசவாக்கினியினால் தகித்துப்போடுவார். இவர் எந்தக்காரியத்தைக்குறித்து தவம்பண்ணுகிறாரோ அந்தக் காரியமெல்லாம் இவருக்கு உடனே சித்தியாகும் என்று சொல்லிக்கொண்டு அவர்களெல்லாரும் தேவலோகத்திற்குப்போய் சேர்ந்தார்கள்.

அந்த மன்மதனும் மகா பயத்தையடைந்து தன் கையிற் பிடித்திருக்கின்ற கரும்புவில்லையும், புஷ்பபாணங்களையும் கீழே எறிந்துவிட்டு, இரண்டு கைகளையுஞ் சிரசின்மேல் வைத்துக்கொண்டு, ஐய இட்சுவாகு மகாராசரே, நான் உம்முடைய குணங்களைத் தெரியாமல் நீர் செய்யும்படியான தவசை விக்கினஞ்செய்யத்தாக நினைத்துவந்தேன். அந்த குற்றத்தையாகிலும் பொறுத்தருளவேண்டும். நீர் இப்படி பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம்பண்ணி இடமிருந்துமிருந்து மகத்தான தபசுபண்ணுகிறபடியால் இந்தத் தபசை ஒரு விக்கினமுமில்லாமல் நிர்விக்கினமாய் முடிக்குஞ் சித்தியாகவேண்டும். இந்தப் பூலோகத்தில் மகாரிஷிகளாயிருக்கப் பட்டவர்களும் அநேகருமிப்படி யென்னைச் செயித்ததில்லை. சாம்பமூர்த்தியும் மகா கோபங்கொண்டு என்னைச் செயிக்கவேண்டுமென்று நெற்றிக்கண்ணினால் எனனைச் சாம்பலாய் எரித்துப்போட்டு, தாம் அபஜெயத்தையடைந்தார். அந்த கோபத்தை நான் தணிக்கச்செய்து, ஜெயத்தைப் பொருந்தினேன். நானும், வசந்தனுமாய்ப் புறப்பட்டுப்போய் மோகி

தேவர்களையும் சகல லோகங்களிலுள்ள மனிதர்களையும் தபோதனர்களையும் ஒரு நிமிஷமாத்திரத்தில் ஜெயித்துவருவோம். எப்படிப்பட்ட கல்விமானாக உணர்ந்தவர்களாயிருந்தபோதிலும், எங்களைச் ஜெயிக்கமாட்டார்கள். நாங்கள் இரண்டுபேரும் தேவேந்திரனுக்கு இரண்டு கண்களாகவும் இரண்டு ஆயுதமாகவுமிருப்போம். நீரோவென்றால், ஸ்ரீபகவானை ஆத்திகருச் சயனமான புண்ணியபுருஷரும் நீர் காமக்குரோதமுதலான ஆபத்துகளையுங் கடந்தவரும் அஷ்டாங்கயோக நிஷ்டைபரிபாலனஞ் செய்யத்தக்கவரும் ஆகையால், எங்களையெல்லாம் தங்கள் வசத்தில் வசீகரசித்தமாயிருந்து, ஒரு க்ஷணமாத்திரத்தில் ஜெயித்துவிட்டீர். இனிமேல், நாங்கள் இவ்விடத்தில் இருக்கமாட்டோம். நாங்கள் போய்வருகிறோம். உமக்கு அநேக நமஸ்காரஞ்செய்தோம். நீர் இவ்வண்ணம் உறுதியாயிருந்து செய்யப்பட்ட தவத்தில் சித்தியாகக்கடவதென்று ஆசீர்வாதம்பண்ணிவிட்டு தெய்வலோகத்துக்குப்போனான்.

கேட்டீரோ நாரதரே, அப்பால் மன்மதனானவன் தேவலோகத்திற்குப்போய் தேவேந்திரனைக்கண்டு, மகா பயங்கரத்துடனே நின்று, ஓய் தேவதேவா பூலோகத்தில் தபசுபண்ண மகாமுனீஸ்வரர்களையெல்லாம வென்றேன். அந்த பரமபாகவத ஷோத்தமனாகிய இட்சுவாகு மகாராசனுடைய தபசை வெல்ல என்னால்முடியாது. ஹரீ, ஹரீ, என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய ஸ்தானத்திற்குப்போய்விட்டான். அந்த வார்த்தையைத் தேவேந்திரன்கேட்டு, மகா கோபங்கொண்டு அயிராவதத்தின்மேலேறிக்கொண்டு, சகல தேவர்களும் புடைசூழ்ந்தபடி பூலோகத்திலுள்ள வசிஷ்டமுனி ஆசிரமத்திற்குப்போய், அந்த ஆசிரமத்தின் சமீபத்தில் தபசுபண்ணுகிற இட்சுவாகு மகாராசனுக் கெதிரேநின்றான். அதுகண்டு. இட்சுவாகு மகாராசனும் தன் நிலையைவிட்டு எழுந்திருந்துவந்து, மகா பயபக்தி விசுவாசத்துடனே தேவராசனையும் தேவர்களையுங்கண்டு தெண்டனிட்டு, சுவாமிகளே, நான் செய்த தபோபலத்தினால் உங்களை யெல்லாங் கண்டு, தரிசனஞ்செய்து, கிருதார்த்தனானேனென்று பலவாறாக ஸ்தோத்திரம்பண்ணி, அந்தத் தேவராசனுக்கு அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சர்வோபசாரத்துடன் பூசைபண்ணினான்.

தேவேந்திரனும் அப்படி செய்யப்பட்ட பூசையை அங்கீகரித்துக்கொள்ளாமல் மகா உக்கிரபராக்கிரமத்துடனே தன் கையிலிருக்கப்பட்ட வச்சிராயுதத்தை எடுத்துவீசினான். அந்த வச்சிராயுதத்தின் ஓசையானது அநேகமாயிரம் கீறிடிகள் நெருப்பிடிகள் இடித்தாற்போலாகி அதனால் அண்டகடாகங்களெல்லாம் ஒரு சமநேரத்தில் அதிர்ச்சியாய் நடுங்கின்றது. அதைக்கண்ட ஜனங்கள் எல்லாரும் இதென்ன விபரீதகாலமோவென்று பயந்து திடுக்கிட்டார்கள். அப்படியிருக்க, இந்த இட்சுவாகு மகாராசனுடைய சரீரமும் நடுங்கவில்லை. அவனுடைய பரிசுத்தமானமும் எள்ளளவும் கலங்காமலிருந்தது. அப்பொழுது, இட்சுவாகுமகாராசனும் ஹரி நமோ நாராய



ண ஆதிமத்தியாந்தரகிதா ஆபத்பாந்தவா அனாதரட்சகா பக்தவச்சலா பரமபுருஷா பரந்தாமா பத்மநாபாவென்று ஸ்தோத்திரபாராயணங்களைச்செய்தான் அதுதெரிந்து ஸ்ரீவைகுந்தத்தில் பரமபாகவதர்களுடன் மகாலட்சுமிசமேதரா யெழுந்தருளியிருக்கும் பகவானும் தம்முடைய வலக்கரத்தில் தங்கியிருக்கப்பட்ட சக்கராயுதத்தை அனுப்பிவைத்தார் அந்த சக்கராயுதமானது கோடிசூரியப்பிரகாசம்போல் தகத்தகாயமாய் பிரகாசித்துக்கொண்டு வாய்வுவேகத்திலும் அதிவேகமாய்புறப்பட்டுச் சரேலென்றுவந்து தேவேந்திரன்விடின வச்சிராயுதத்துக்கு எதிரேவந்து மறித்துநின்றது அப்போது தேவேந்திரனுடைய வச்சிராயுதமானதுசூரியப்பிரகாசத்திற்கு எதிர்ப்பட்ட மின்மினிப்பூச்சிபோல ஒளிமழுங்கி நின்றது தேவேந்திரனும் சகலதேவர்களும்பயந்து நடுநடுங்கி அந்தச்சக்கராயுதத்திற்கு மகாவிநயத்துடனே பிரதக்ஷணநமஸ்காரங்கள்பண்ணி ஹரி நமோநமவென்று ஸ்தவுத்தியம்பண்ணிக்கொண்டு மகாவிசனத்துடனே தங்களுடையலோகத்துக்குப் போய்விட்டார்கள்.

அப்பால் இட்சுவாகுமகாராசனும் ஸ்ரீரங்கதாமா ரங்கதாமாவென்றுதியானித்துப் பழையபடியே தன்னுடைய தவநிலையிற்போய்ச்சேர்ந்து முன்னிலும் அதிகமான சித்தவைராக்கியத்துடனிருந்து தபசுபண்ணினார் பிற்பாடு தேவேந்திரனும் அதனால் வெட்கமடைந்து மிகுந்தமனோவியாகூலத்துடன் சத்தியலோகத்துக்குப்போய்பிரமதேவனைக்கண்டுநமஸ்காரஞ்செய்து ஓய் சதுர்முகப்பிரமாவேபூலோகத்தில் இட்சவாகுமகாராசன் நம்முடையபதவிகளை யடையும்படிநினைந்து மகத்தாகிய தபசுபண்ணுகிறான் அந்ததபசுநிறைவேறாமல் விக்கினமாகும்படி மன்மதனையும் அவனுடையசேனைகளையும் அனுப்பினேன், நானும்சகலதேவர்களுடனே புறப்பட்டுப்போய் அவனுடையதபாக்கினிக்கு இன்சகித்து நிற்கமாட்டாமல் மகாலச்சையுடனேவந்துவிட்டேன், இனி என்னசெய்யலாம் நீரோ ஆலோசனைபண்ணிச் சொல்லவேண்டுமென்று சொன்னான் அந்தச்சொல்லானது நாராசங்காய்ச்சிவிட்டதுபோல்செவியில் நுழைந்தமாத்திரத்தில் பிரமதேவனும்திடுக்கிட்டு ஹரிஹரியென்று அவனுடைய எட்டுக்காதுகளிலும் கைகளைவைத்து எட்டுக்கண்களையும் மூடிக்கொண்டுதியானித்தபொழுது இட்சுவாகுமகாராசன் ஸ்ரீரங்கவிமானத்தைநோக்கித் தபசுபண்ணுகிறானென்றுதெரிந்து பிரமதேவன் மூர்ச்சையாகப்பூமியில்விழுந்துகிடந்து வெகுநேரத்துக்குப்பின் மூர்ச்சைதெளிந்துதனக்குத்தானே மனோதயிரியமாக எழுந்திருந்து தேவேந்திரன்கைலாகுகொடுத்துவர மெள்ளமெள்ளநடந்து ஸ்ரீரங்கவிமானத்தின்சமீபத்திற்போய்

ஸ்ரீரங்கநாயகரைக்கண்டு சேவைபண்ணி மனோவியாகூலமாய் அழுதுக்
கொண்டுநின்றார் அதுகண்டு ஸ்ரீரங்கநாயகரும் பிரமதேவனைப்பார்த்து
வாரும் அப்பாபிர்மாவே நீயேன் இப்படிவிசாரப்படுகிறாய் நீ ஒன்றுக்
கும்அஞ்சவேண்டாம்நாம் எப்போதும் உதயகாலபூசையைஉம்முடைய
கைகளினாலேபெற்றுக்கொள்ளுகிறோம் இப்போதுநாம் இட்சுவாகுமகா
ராசன்செய்கிறதவத்துக்குப் பிரியமாய் அயோத்தியாபுரிபட்டணத்துக்
குப்போய் அவிடத்தில் நாலுயுகமளவுமிருந்துஅதற்குமேல்காவேரிதீர்த
தமானசந்திரபுஷ்கரணியில் ஏழுமனுக்களுடையகாலமட்டுமிருப்போம்.

நீசெய்யப்பட்ட மத்தியான்பூசைவேளைக்கு இவிடத்தில்நாள்தப்பா
மல்வந்து உன்னுடையபூசையையும் அங்கிகரிப்போம் உன்னுடையபூசை
முடிந்தபிறகு மறுபடியும் பூலோகத்திற்குப்போவோம் இப்படியே அங்
குமிங்கும் போக்குவரத்துமாயிருப்போம், இந்தப்பிரகாரம் உன்னுடை
ய ஆயிசுபரியந்தம் நம்மைவிசுவாசமாகப்பூசைபண்ணி மோட்சத்தைப்
பெறுவாயாக, மேலும் ஒருநாள் பூசைபண்ணாமற்போனால் மறுபடியும்
சம்ரட்சணைபண்ணவேண்டும் ஆறுமாதமட்டும் பூசைபண்ணாமற்போனா
ல் மறுபடியும் பிரதிஷ்டைபண்ணவேண்டும், அப்படிக்கில்லாமல் நாம்
உன்னிடத்தில்வந்து திரிகாலபூசையும் ஏற்றுக்கொள்ளுகிறபடியினால் உ
னக்கொரு விக்கினமுமில்லை, மற்றைத்தேவஸ்தானங்களுக்கெல்லாம் ஒ
ருநாள் அடைத்துவைத்திருந்தபோதிலும் பிராயச்சித்தமுண்டு பூர்வத்
தில் உனக்குச்சொல்லியிருக்கப்பட்ட சுயம்புவாகிய அஷ்டஸ்தலங்களுக்
கும் பிராயச்சித்தமில்லை ஆகையால் நீ ஒன்றுக்கும்விசனப்படாமல் நம்
மை இந்தவிமானத்தோடுகொண்டுபோய் பூலோகத்தில் இட்சுவாகும
காராசன்கையில் ஒப்புவிக்கக்கடவாய், அதனால் உனக்கொருதாழ்ச்சியும்
வராதென்று சொல்லியருளினார்.

அந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் பிரமதேவன் மகிழ்ச்சி
யடைந்துசெயம்செயமென்றுகொண்டாடி தேவேந்திரனுக்குவிடைகொ
டுத்தனுப்பிவிட்டு பிற்பாடு கருடாழ்வாரை அழைப்பித்து அவருடைய
சிரசின்பேரில் அந்த ஸ்ரீரங்கவிமானத்தை எடுப்பித்துக்கொண்டு தானும்
அன்னவாகனத்தின்மேலேறிக்கொண்டு பூலோகத்தில் அயோத்தியாபுரி
பட்டணத்தில் இட்சுவாகுமகாராசன்தபசுபண்ணுகிறவசிட்டமுனிவரா
சிரமத்திற்குவந்து தபோநிலையிலிருக்கிற மகாராசனுக்குமுன் இந்தவி
மானத்தைக் கொண்டுபோய்வைத்து ஓய் இட்சுவாகுமகாராசாவே நீர்
செய்கிறதபசுக்குத் திருவுளமகிழ்ந்து பெருமாள்விமானதரிசனங்கொடு
த்து உம்மைரட்சிக்கும்படி இதோஎழுந்தருளியிருக்கிறார்-இனி நீர்தபசு
நிலையைவிட்டு எழுந்திருந்து சேவித்துக்கொள்ளுமென்றுசொன்னான்.



அந்தவசனங்களானது இட்சுவாகுமகாராசனுடையசெவிகளில் அ
முதவருஷம்வருஷித்ததுபோ லுறைந்தமாத்திரத்தில் திடுக்கிட்டு ஹரி
ஹரியென்றுகண்கள்திறந்து எதிரேயிருக்கிறவிமானத்தையும் சதுர்முக
ப்பிரமாவையுங்கண்டுமகாசந்தோஷகரமாய் திடீலென்றெழுந்துநின்று தி
வ்யதேஜோமயவிலாசமாய்ப்பிரகாசிக்கப்பட்டரங்கவிமானத்துக்கும் அ
ன்னவாகனத்தின்மேலேறிவந்த சதுர்முகப்பிர்மாவுக்கும்அநேகம்பிரத
ட்சண நமஸ்காரங்கள்செய்து அர்க்கியபாத்திய ஆசனமுதலிய சர்வோ
பசாரங்களுஞ்செய்து மகாபயபக்தி விநயத்துடனே கைகட்டிவாய்பொ
த்திக்கொண்டுநின்றான் அப்படிநின்ற மகாராசனைப்பார்த்து ஓய் இட்சு
வாகுமகாராசாவே நீர்செய்ததபோபலத்தினால் உமக்கு இந்ததிவ்வியவி
மானங்கிடைத்தது இதை நீர் ஐந்துகாலமும்தவறாமல் பாஞ்சராத்திரக்
கிரமங்கள்தெரிந்த ஐந்துபேர் உருத்திரர்களுடனிருந்து பூசைபண்ணு
மென்று முன்பெருமாள்தனக்குபதேசம்பண்ணியிருந்த சகலமந்திரங்க
ளையும் சங்கற்பக்கிரியைகளையும் உபதேசம்பண்ணி ஆசிர்வாதஞ்செய்து
அந்தராசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கருடாழ்வாருந்தானுமாய்
ப்புறப்பட்டு பிரமதேவன் சத்தியலோகத்திற்குப்போனான்.

அப்பால் இட்சுவாகுமகாராசனும் பிரமதேவனும் கட்டளையிட்ட
படி அந்தவிமானத்தைவைத்து ஐந்துகாலமும் வேதபாராயணங்களறி
ந்த பிராமணர்கூட்டத்துடனிருந்து மகாபத்திவயிராக்கியத்துடன்பூசை
பண்ணிக்கொண்டு இருந்தான், கேட்டீரோ நாரதமுனிவரேயென்று பர
மசிவன் திருவுளம்பற்றியருளினார் அதுகேட்டு நாரதரும் மகாசந்தோ
ஷமடைந்து ரங்காரங்காவென்று மனதில் தியானித்துக்கொண்டு சற்று
நேரம் சும்மாவிருந்தார்.

ஏழாவது-அத்தியாயமுற்றிற்று.

நல்லான்சக்கிரவர்த்திதிருவடிகளேசரணம்.

—:0:—

உ

ஸ்ரீரங்கநாதாயநமஹா.

# எட்டாம் - அத்தியாயம்.

துதிகவி.

விருத்தம்.

மருவுதிரைக்கடற்புவியில் வசுதேவன்றேவகியாள்மைந்தனாகத்
திருவவதாரம்புரிந்துபலராமப் பெயர்புனைந்துதீயோரான
பிரலம்பன்முதலோரைக் கொன்றுலகைவாழ்வித்துப்பிரமனாதி
சுரர்முனிவர்தொழுதேத்த வரங்கத்திற்கண்வளர்ச்சுதனேபோற்றி.

அப்பால் நாரதமுனிவரெழுந்திருந்து ஸ்ரீ கயிலாசபதியாகிய பரம்
சிவனுக்கு நமஸ்காரம்பண்ணி சுவாமி-திரிபுராந்தகா - தீனரக்ஷகா-தேவ
ரீர்சொல்லுகின்ற சரித்திரத்தைக்கேட்கக்கேட்க இன்னம் கேட்கவேண்டு

மென்று ஆசைமேலிடுகின்றதேயல்லாமல் இந்தமட்டும்கேட்டதுபோதுமென்றுதோற்றவில்லை ஆதலால அதற்குமேல் இட்சுவாகுமகாராசன் அந்த விமானத்தை வைத்துப் பூசைபண்ணிமோட்சமடைந்த சரித்திரத்தையும் சவிஸ்தாரஞ்செய்ய பரமசிவன்திருவுளம்வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார்.

கேளுமையா நாரதமுனிவரே இட்சுவாகுமகாராசனானவன் பரமானந்தபரவசனாகி அயோத்தியாபுரிபட்டணத்துக்கு உத்தரபாரிசத்தில் ஒருநாழிகைவழிக்கப்பால் சரையுநதிக்கும் விரசாநதிக்குமத்தியில் கோயிலுண்டாக்கி அந்தக்கோயிலுக்கு கோபுரங்கள் பிரகாரங்கள் மண்டபங்கள் மதில்கள் திருக்குளங்கள் நந்தவனங்கள் முதலானதுகளுஞ்சிற்பசாஸ்திரக்கிரமப்பிரகாரம் தேவதச்சனால் நியமிக்கப்பட்டு அதைச்சுற்றிலுமேழுபிரகாரங்களுண்டாக்கி அந்தப்பிரகாரங்கள்தோறும் வசிட்டர்-வாமதேவர்-காசிபர்முதலான மகாமுனீஸ்வரர்களுக்கு யோக்கியமான ஆசிரமங்கள் உண்டுபண்ணி பங்குனிமாதம் சுக்கிலபட்சம் ஆகியசுபதினத்தில் அந்த திவ்வியவிமானத்தை மகாசம்பிரமத்துடனே எடுப்பித்துக்கொண்டுபோய் சந்நிதியிலெழுந்தருளச்செய்து பாஞ்சராத்திரிக் கிரமத்தின்படி வசிஷ்டர்முதலான சகலரிஷிகளுடனிருந்து பூசைபண்ணி அதற்குமேல் பிரமோச்சவம்பண்ணும்படி நியமித்துக்கொண்டு மகாவைபோக உல்லாசமாய் அந்தப்பட்டணத்திலுள்ள சீவராசிகள் முழுதும் பெருமாள்சேவைபண்ணி பரமபதத்தை அடைவதற்கு ஏதுவாய் துஜாரோகணஞ்செய்து அன்றுமுதல் கடைசிநாள்மட்டும் மகாவைபவ அலங்காரத்துடன தினந்தினம்வீதிகள்தோறும்பெருமாளை எழுந்தருளப்பண்ணி சகலருக்கும்சேவைசாதிக்கும்படிசெய்வித்து அந்ததலத்தில் பங்குனிமாதம் உத்திரநட்சத்திரத்தில்திவ்யமங்களஸ்நானம்பண்ணுவித்தான்.

அப்பால் நாள்தோறும் கிரமந்தப்பாமல் திரிகாலமும் பூசைநடப்பித்துக்கொண்டு வெகுகாலம் மனுநீதிவழுவாமல் ராச்சியபரிபாலனஞ்செய்து பிறகு ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய பரிபூரணகடாட்சம்பெற்று ஸ்ரீவைகுந்தத்தில் நித்தியசூரியர்களாகிய பரமபாகவதருடன்சேர்ந்திருந்தார் அதற்குமேல் அந்தவமிசத்திற்பிறந்த ராசாக்களெல்லாரும்வைஷ்ணவ சிகாமணிகளாயிருந்து பாஞ்சராத்திரக்கிரமந்தப்பாமல் நித்தியம்திரிகாலமும் பூசைபண்ணிக்கொண்டுவந்தார்கள் அப்படி நாலுயுகமாச்சுது பிறகு அந்தச்சூரியவமிசத்தில் தசரதச்சக்கிரவர்த்தியானவர் பிறந்து மனுநீதிதப்பாமல் அறுபதினாயிரம்வருஷமட்டும் ராச்சியபரிபாலனஞ்செய்துவருங்காலத்தில் அந்தத்தசரதச்சக்கரவர்த்திக்கு வெகுநாள்பிள்ளையில்லாமலிருந்தது அதனால் அந்தராசன்மனோவியாகூலமடைந்து அசுவமேதயாகம்பண்ணும்படி பிரயத்தனப்பட்டார், அந்தயாகத்திற்கு ஐம்பத்தாறுதேசத்திலுள்ள ராசாராசாக்களும் வந்திருந்தார்கள் சோழமண்டலாதிபதியாகிய தர்மப்பிர்மாவென்கிற ராசனும்வந்திருந்தான் அவன் அந்தவிமானத்தைக்கண்டு சேவைபண்ணி அதுவந்தவரலாறுமுழுதும் அவ்விடத்திலிருந்த முனீஸ்வரர்களால் கேள்விப்பட்டான்.



அப்படி கேள்விப்பட்டமாத்திரத்தில் பூர்வம் வைவசுதமனுவின் புத்திரராகிய இட்சுவாகுமகாராசாவானவர் பரிசுத்தராயிருந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைநோக்கித் தபசுபண்ணி இந்தவிமானத்தைத் தம்முடையதபோபலத்தினால் பூமியிலெழுந்தருளப்பண்ணிக்கொண்டுதாமும் தம்முடையவமிசத்திற்பிறந்த ராசாக்களெல்லாரும் இந்தவிமானத்தை மகாபயபக்தி விசுவாசத்துடனே மூன்றுகாலமும் பூசைபண்ணி பூலோகத்தில் பெரும்பிரதிஷ்டையும்பெற்று தீர்க்காயசுடையவர்களாயிருந்து முடிவில் அநாயாசமரணத்தைப்பொருந்தி ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய கடாக்ஷ வீட்சண்யத்தினால் பரமபதத்தையடைந்தார்களே நாமும் அந்தப்பிரகாரமே தபசுபண்ணி இந்தவிமானத்தைப் பூசைசெய்து கிருதார்த்தனாகவேண்டுமென்று மனதில் உறுதியாக எண்ணிக்கொண்டு தன்னுடைய சோழதேசமேபோய்ச்சேர்ந்து தபசுக்கிருக்கவேண்டியகிரமப்படி சந்திரபுஷ்கரணி தீர்த்தக்கரையில் ஓரிடம்நியமித்துக்கொண்டு அவ்விடத்தில்தானே அனேகநாள் பரிசுத்தமனத்தையுடையவனாயிருந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைநோக்கி அகோரமான தவம்பண்ணிக்கொண்டிருந்தான்.

அந்தவர்த்தமானந்தெரிந்து அவ்விடத்திலுள்ள ஆசிரமங்களிலிருக்கப்பட்ட முனீஸ்வரர்களெல்லாரும் தர்மப்பிரமாவென்கிறசோழராசனிடத்திற்குவந்து அந்தராசனிருக்குந் தவநிலையைப்பார்த்து ஐயா சோழதேசாதிபதியே தர்மந்தப்பாமலிருந்து ராச்சியபரிபாலனம்பண்ணப்பட்டராசாக்கள் தபசுபண்ணவேண்டியதில்லையே நாங்கள் பஞ்சாக்கினிமத்தியிலிருந்துசெய்யப்பட்ட தபோபலத்தில் ஆறிலொருபங்கு பூலோகத்துராசாக்களைச்சேரும் ஆகையால் நாங்கள்செய்யப்பட்டதபசுக்குமாத்திரம் ஒருவிக்கினமும்வரவொட்டாமல் நீர்காப்பாற்றும் அப்படி காப்பாற்றுவீராகில் உம்முடைய இஷ்டசித்திகளெல்லாம் கைகூடிவரும் இந்தவார்த்தையிற் சந்தேகமில்லையென்று வெகுவாய்ச்சொன்னார்கள் அந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் தர்மப்பிரமாவாகியசோழராசனெழுந்திருந்து முனீஸ்வரர்களுக்கு நமஸ்காரம்பண்ணி அர்க்கியபாத்தியஆசனமுதலான சர்வோபசாரங்களுஞ் செய்துமுடித்து அவர்களைக்கும்பிட்டுநின்று ஓய் முனீஸ்வரர்களே நான் உங்களெல்லாருக்கும் இகமுண்டாகும்படிநினைத்து இப்படி தபசுபண்ணத்தொடங்கினேன், அஃதென்னவென்றால் அயோத்தியாபுரிபட்டணத்தில் இட்சுவாகுமகாராசன்தபசுபண்ணி பூர்வத்தில் சத்தியலோகத்திலிருந்தவிமானத்தைதன்னுடையபட்டணத்திற் கொண்டுவந்துசேர்த்து அதைப்பூசைபண்ணி அதனால் அவரும் அவர்வமிசத்திற்பிறந்த ராசாக்களும் பரமபாகவதர்களாகிமோக்ஷத்தைப்பெற்றார்களே அதுபோல நானும் தபசுபண்ணி அந்தவிமானத்தைநம்முடையதேசத்திற் கெழுந்தருளச்செய்யும்படி கருதினேனென்று மகாதாபந்திரியமாகச்சொன்னான்.

அதுகேட்டு அந்தமுனீஸ்வரர்களெல்லாரும் சோழராசனைப்பார்த்து ஐயராசாவே நீர் எவ்வளவும் சந்தேகப்படவேண்டாம்நீர் இந்தத்தவ

வேடத்தைநீக்கிவிட்டு உம்முடையபட்டணத்துக்குப்போய்க்கொள்ளாச்
செய்பரிபாலனம்பண்ணும் அந்த திவ்யவிமானம் இன்னுஞ்சிறிதுகாலத்
துள் இச்சந்திரபுஷ்கரணி தீர்த்தக்கரையில்வந்து சேரப்போகின்றது
அந்தவர்த்தமானம் எங்களுக்குநன்றாய்த்தெரியும் எப்படியென்றால் இந்த
ச்சந்திரபுஷ்கரணி தீர்த்தத்திற்கு இரண்டுநாழிகைவழிக்கப்புறம் உம்மு
டையபாட்டன்மார் அரசாட்சிபண்ணிக்கொண்டிருந்த ஒருபெரியபட்ட
ணமுண்டு அது இப்போது மண்மேடாய்ப்போச்சுது.

ஏனென்றால் சிவபூசைபண்ணும்படி நந்தவனத்திலிருந்து பறித்துக்
கொண்டுபோகிற புஷ்பக்கூடையிலிருந்து ஒருசெவ்வந்திப்புஷ்பத்தைப்
பலவந்தமாய்கைப்பிடுங்கி அந்தப்பட்டணத்திற்கு அக்காலையில் ராசாவா
யிருந்தவன் தரித்துக்கொண்டான் அந்தச்சேதி பரமேஸ்வரருக்குத்தெ
ரிந்து அந்தப்பட்டணமுழுதும் மண்மாரிபெய்யும்படிசெய்தருளினார் அ
தனால் மண்மேடாகிவிட்டது அதற்குநேராக உத்தரபாரிசத்தில்காவேரி
தீர்த்தத்திற்கு அக்கரையில்புலஸ்தியமுனிவருடைய சிஷ்யராயிருக்கப்பட்
ட காலப்பியமகாமுனிவர் சத்தியசத்தியமென்கிற புண்ணியாச்சிரமத்தி
ல் ஏகாந்தமாய் தபசுபண்ணிக்கொண்டிருந்தார் நாங்களெல்லாரும் ஒரு
காரணநிமித்தம் அந்தமுனிவரைக்காணும்படி அவிடத்திற்குப்போயி
ருந்தோம் அப்போது அந்த ஆசிரமத்துக்கு வாய்வுமூலையில் நீலிவனமெ
ன்னும் ஒருவனமுண்டு அந்தவனத்திலேயே வாசமாயிருந்துவருகின்ற
முனிவர்களையெல்லாந் துரத்தியடித்துக்கொல்லுகின்ற மகாபாதகனுமி
யவியாக்கிரமசுரனென்னும் பெயரையுடையராட்சதனைச் சங்காரஞ்செ
ய்து சகலமுனீஸ்வரர்களுடைய மனோபயத்தையும் நிவர்த்திசெய்யும்
பொருட்டு ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் அந்தநீலிவனத்திற்கு எழுந்
தருளிவந்து பிரமாதிசகலதேவர்களும் செயஜெயமென்றுகொண்டாடு
ம்படியாக அந்தக்குரூரபாதகனையோராகந்தனை ஒருநிமிஷத்தில்சங்கரித்
துவிட்டு அந்தவனத்திலிருந்து தபசுபண்ணுகின்ற முனீஸ்வரர்களுக்கெ
ல்லாம் திருச்சேவைசாதித்தருளி அப்பால்பெருமாளானவர் காலப்பிய
முனிவருடைய ஆசிரமத்துக்கு எழுந்தருளிவந்து சேவைசாதித்தார்.

அதுகண்டு காலப்பியமுனிவரும் நாங்களும் எழுந்திருந்து மகாப
க்திவிநயத்துடனே பெருமாளுக்கு நமஸ்காரம்பண்ணி அர்க்கியபாத்தி
ய ஆசமனமுதலான சகலவுபசாரங்களுஞ் செய்துமுடித்து அ
ந்தப்பகவானுக்குமுன் நாங்களெல்லாரும் அஞ்சலிஹஸ்தர்களாய் நின்றுக்
கொண்டு சுவாமீ பக்தவத்சல-பரமபுருஷா-ஹரிஹரி நமோநம நாரா
யணாவென்று ஸ்தவுத்தியம்பண்ணி தேவரீர் அடியேங்களெல்லாரும் பூ
சைபண்ணிக் கரையேறத்தக்கதாய் இந்த ஆசிரமத்தில் ஒருவிக்கிரகரூப
மாய்சேவைசாதித்து நாள்தோறும் நாங்கள்செய்யப்பட்ட ஸ்தோத்திர
பாராயணங்களையும் பூசைகளையும் அங்கீகாரம்பண்ணி எங்களைக்காப்பா
ற்றி ரட்சித்தருளவேண்டுமென்று வெகுவாய்ப் பிரார்த்தனைசெய்தோம்
பெருமாளும் நாங்கள்செய்தபிரார்த்தனைக்குத் திருவுளமிரங்கி எங்களு
க்குத்தேறுதல்சொல்லி ஓமுனிஸ்வரர்களே நீங்களொன்றுக்கும் அஞ்



சவேண்டாம் நாம் இன்னுஞ்சிறிதுகாலைக்குள் அயோத்தியாபுரிபட்டண
த்தில் தசரதசக்கிரவர்த்திசெய்யப்பட்ட யாகத்தில் அவருக்கு ஸ்ரீமந்த
புத்திரனாய் அவதாரஞ்செய்து மகாதுஷ்டனாகிய இராவணசம்மாரம்பண்
ணி இலங்காபுரிபட்டணத்தை அவன்தம்பியாகிய விபீஷணாழ்வானுக்கே
பட்டங்கட்டிவித்து பிற்பாடு இட்சுவாகுமகாராசனிமித்தம் முன்னமே
கடாட்சித்தருளிய விமானத்தைப் பூசைபண்ணும்படி அவ்விபீஷணாழ்
வானிடத்திற் கொடுத்தருளுவோம்.

அந்த விபீஷணாழ்வான்கொண்டுவந்து காவேரிமத்தியில்சந்திரபுட்
கரணிதீர்த்தத்தில் அனந்தபீடத்தில்வைத்து சதாகாலமும் திருவாராத
னைக்கிரமப்படி பூசைபண்ணப்போகிறான் அப்போது நீங்களெல்லாரும்
அந்தவிமானத்தில் விக்கிரகசொரூபமாய்ச்சேவைசாதித்தெழுந்தருளியி
ருக்கப்பட்ட நம்மைச் சதாகாலமுஞ்சேவைபண்ணி உங்களுக்கு மனோர
ம்மியமான சகலசித்திமுத்திகளை யடையப்போகிறீர்களென்று எங்களு
க்குறுதிமொழியாய்த் திருவாக்களித்துவிட்டு இந்திராதி சகலதேவர்க
ளும் ஸ்தவுத்தியம்பண்ணும்படியாய் மகாவைபவத்துடனே பெருமாள்
ஸ்ரீவைகுந்தத்திற்குப் போய்விட்டார் நாங்களெல்லாரும் அவருக்குப்பி
றகேநின்று வேதபாராயணங்கள் செய்துக்கொண்டு சூரியமண்டலபரிய
ந்தம்போய்த் திரும்பினோம் அப்போதுசூரியபகவான் எங்களைக்கண்டு
[illegible]னைபண்ணி ஓ முனீஸ்வரர்களே நீங்கள்பெருமாள்கட்டளையிட்
ரிய திருவாக்குச் சந்தேகப்படவேண்டுவதில்லை தாங்கள் ஆதியில்
பிரம்மலோகத்திற்குப்போய் விமானத்தில் விக்கிரகசொரூபமாய் சர்வ
டம்பரத்துடனே ஆதிசேஷசயனத்தில் திருக்கண்வளர்ந்தருளுகின்றபக
வானைப்பார்த்து வெகுவாய்ப்பிரார்த்தித்தோம் அந்தப்பிரார்த்தனைக்கு
ப்பகவான் திருவுளமகிழ்ந்து ஒருவசனங் கட்டளையிட்டருளினார். அஃ
தென்னவென்றால் நாம்சிலநாளைக்குள் உன்னுடையவம்சத்திற்பிறந்த இ
ராசாக்களெல்லாம் பூசைபண்ணி இஷ்டசித்திகளையும் மோட்சத்தையும்
பெறும்படி அயோத்தியாபுரிபட்டணத்தில் இந்தவிமானத்துடனெழுந்த
ருளுவோம், அப்பால் சிறிதுநாளைக்குப்பின்பு காவேரிமத்தியில்சந்திரபு
ஷ்கரணிதீர்த்தத்தில் அனந்தபீடத்திலிருந்து விபீஷணாழ்வானால்பூசிக்கப்
பெற்று பிறகு சோழராசனாலும் பூலோகத்திலுள்ள மற்றுமுண்டான ந
ம்முடைய பக்தஜனங்களாலும் பூசிக்கப்படுவோம் பிற்பாடுகலியுகத்தி
லும் நம்முடையமகத்துவந்தெரிந்து நம்மைப்பூசைபண்ணுகின்ற பக்த
ஜனங்களையும் இரட்சித்து மோட்சத்தைக்கொடுத்தருளுவோமென்றும்
திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார் ஆதலால் நீங்களெல்லாருங்காவேரிதீர்
த்தக்கரையைவிட்டுநீங்காமல் தபசுபண்ணிக்கொண்டிருங்களென்றுசொ
ன்னார் ஆதலால் நாங்களெல்லாரும் அந்தவிமானத்தைப் தரிசிக்கும்படி

அபேட்சைகொண்டு இவ்விடத்தில் காத்துக்கொண்டு இரவும்பகலும் அதேசிந்தனையாக விருக்கிறோம் ஐய் சோழராசனே இப்போது அந்தத் திருவாக்குப்பிசகாமல் அயோத்தியாபுரியில் தசரதராமனுகப்பெருமாள் திருவவதாரம்பண்ணியிருக்கிறார் இனிமேல் இராவணசம்மாரம்பண்ணி விபீஷணாழ்வானுக்குப் பட்டங்கட்டிவைத்து பிற்பாடு அயோத்தியாபுரிக்குச் சீதாலட்சுமண பரதசத்ருக்கர் ஆஞ்சனேயசமேதராய் புஷ்பகவிமானத்தின்பேரில் எழுந்தருளிவந்து பட்டாபிஷேகஞ்செய்துக்கொண்டு அஸ்வமேதயாகம் பண்ணுமின்றகாலத்தில் அந்தவிமானத்தைப் பூசைபண்ணும்படி விபீஷணாழ்வாரிடத்தில் கொடுத்தனுப்பப்போகிறார் நாங்கள்பொய்வார்த்தை வசனிக்கமாட்டோம்.

அந்தவிபீஷணாழ்வார் விமானத்தை இவ்விடத்திற் கொண்டுவந்தவுடன் உமக்கு சேதிதெரிவிக்கின்றோம் நீர் இந்தவார்த்தையைச்சத்தியமாக நினைத்து மகிழ்ச்சியாய் உம்முடைய நிசுளாபுரியென்னும் பட்டணமேபோய்ச்சேர்ந்து சுகமாய் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருமென்று அந்த முனிஸ்வரர்களெல்லாம் ஒருமுகமாய்ச்சொன்னார்கள், அந்தவார்த்தையைக்கேட்டு தர்மப்பிரமாவாகிய சோழராசனும் மனமகிழ்ச்சியடைந்து அந்தமுனிஸ்வரர்களுக்கு மகாபக்திவிநயத்துடன் நமஸ்காரஞ்செய்து அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய நிசுளாபுரிப்பட்டணமே போய்ச்சேர்ந்து ராசநீதிவழுவாமல் அரசாட்சிசெய்துக்கொண்டிருந்தான் அப்பால் சிறிதுநாளைக்குப்பிறகு ஸ்ரீராமமூர்த்தி இராவணசம்மாரஞ்செய்து அயோத்தியாபுரிக்குவந்து பட்டாபிஷேகஞ் சூட்டிக்கொண்டு அசுவமேதயாகம்பண்ணும்படி பிரயத்தனஞ்செய்து சகலமானராசாக்களுக்கும் திருமுகங்கட்டளையிட்டருளினார் அப்போது ஐம்பத்தாறுதேசத்துராசாக்களும் வந்துசேர்ந்தார்கள்.

நிசுளாபுரியை யாளப்பட்ட தர்மப்பிரமாவாகிய சோழராசனும் வந்திருந்தான் இவர்களையெல்லாம் கூடவைத்துக்கொண்டு ஸ்ரீராமமூர்த்தியும் அசுவமேத யாகஞ்செய்து முடித்து சகல ராசாக்களுக்கு வெகுமதிபண்ணி அவரவர்கள் பட்டணத்திற்குப் போகும்படி விடைகொடுத் தனுப்புகிறதற்கு முன்னமே தர்மப்பிரமாவாகிய சோழராசன் ஸ்ரீராமமூர்த்திக்கு நமஸ்காரம்பண்ணி சுவாமி எனக்கு நம்பட்டணத்தில் சிறிதுகாரியமிருக்கின்றது அதனால் நான் இச்சணமே போகவேண்டுமென்று விடைபெற்றுக்கொண்டு விபீஷணாழ்வாரோடேயும் சிநேகமாகப்பேசி அவரிடத்திலும் செலவுபெற்றுக்கொண்டு தன்னுடைய பட்டணத்துக்குவந்து இனிமேல் அயோத்தியாபுரியிலெ



ழுந்தருளியிருக்கும் திவ்வியவிமானம் காவேரிமத்தியில்வந்துசேருவதற்குச் சந்தேகமில்லையென்று தனக்குத்தானே நிச்சயித்துக்கொண்டு சிற்ப சாஸ்திர விதிப்படி பஞ்சமுத்திரக் கிரமந்தவறாமல் காவேரிக்கரையில் கோயில் கோபுரங்கள், மண்டபங்கள், சத்திரங்கள், ரிஷியாசிரமங்கள், முதலானதுகளும் உண்டாகபண்ணிவைத்து பூசைக்கு வேண்டிய பூசாதிரவியங்களும் சேகரித்து வைத்துக்கொண்டு அநேகபிராமணகூட்டத்துடன் மனமகிழ்ச்சியாயிருந்து விமானம் எப்போதுவரும் எப்போதுவருமென்ற அபேக்ஷையுடன் வழிபார்த்துக்கொண்டிருந்தான்,

அப்படியிருக்க வசந்தகாலமானவுடன் சூரியன், மீனத்தில் பிரவேசமான பங்குனிமாசம் ரோகிணிநட்சத்திரம், சப்தமி தசமிவாரங்கூடின சுபதினத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் தங்கள் குலதெய்வமாயிருக்கப்பட்ட விமானத்தைப்பூசைபண்ணி, அந்த பூசைக்கு வேண்டிய உபகரணங்களுடன் விபீஷணரிடத்திற்கொடுத்து அந்த விமான மகத்துவத்தையும் சவிஸ்தாரமாகச்சொல்லி அப்பா விபீஷணா, நீ இந்த விமானத்தை எடுத்துக்கொண்டுபோய் பத்திரமாகவைத்துப் பூசைபண்ணி, உன்னுடைய இலங்காபுரிபட்டணத்திலிருந்து சுகமாய் ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டு சிரஞ்சீவியாகவாழக்கடவாயென்று ஆசீர்வதித்தருளினார். அதுகேட்டு விபீஷணரும் பாக்கியம் பாக்கியமென்று ஸ்ரீராமமூர்த்திக்கு நமஸ்காரஞ்செய்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு விமானத்தையெடுத்துச் சிரசின்மேல்வைத்துக்கொண்டு ஹரிநமோ நமோவென்கிற சப்தத்துடன் தன்னுடைய நாலுமந்திரிகளுடனேயும் சோழதேசத்திற்குவந்துசேர்ந்து மத்தியானவேளையில் காவேரிமத்தியில் சந்திரபுஷ்கரணிதீர்த்தத்தில் அனந்தபீடத்தில் விமானத்தைக்கொண்டுவந்துவைத்தார். அதன்பிறகு விபீஷணரும் சந்திரபுஷ்கரணியில் ஸ்நானம்பண்ணி, உச்சிகாலசெபதபவனுஷ்டான கர்மங்களை முடித்துக்கொண்டு விமானத்தினிடத்திற்குவந்து உச்சிகாலபூசைசெய்யும்படி தொடங்கினார். அதுதெரிந்து அவ்விடத்தில் காத்துக்கொண்டிருந்த முனீஸ்வரர்களும் சோழராசனும் வந்து மகாபத்திவிநயத்துடனே விபீஷணருக்கு நமஸ்காரம்பண்ணி பிற்பாடு ஸ்ரீரங்கவிமானத்தைக்கண்டு அநேகமாயிரமாய் ஸ்தவுத்திரங்கள் பண்ணி அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சகல உபசாரங்களுஞ்செய்து முடித்து ஆனந்தபரவசராகி விபீஷணரைப்பார்த்து ஐய் லங்காதிபதியாகிய விபீஷணாழ்வாரே, உம்முடைய கிருபாகடாட்சத்தினால் நாங்களெல்லாரும் இந்த திவ்விய விமானத்தைச் சேவைசெய்து பூசைபண்ணி கிருதார்த்தர்களானோம் நாங்கள் பிதிர்க்களும் நரகத்தைவிட்டு மோட்சத்தையடைந்தார்கள். இந்தத் தர்மப்பிரமாவாகிய சோழராசனும் இந்தத் தேசத்திலுள்ள ராசாக்களும் உம்முடைய தர்மத்தினால் கிருதகிருத்தியராயினார்களென்று அந்த முனீஸ்வரர்களெல்லாம் விபீஷணரைப் பலவாறாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள். சேட்டரே நாரதரேயென்று பரமசிவன், திருவுளம்பற்றியருளினார். அதுகேட்டு நாரதரும், சந்தோ

ஷகராமாய் ஆச்சரியப்பட்டு மனமாரத் தகா தகாவென்று தியானம்பண்ணிக்கொண்டிருந்தார்.

எட்டாவது அத்தியாயமுற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹ.

ஒன்பதாம் அத்தியாயம்.

(*)

அநிகவி.

விருத்தம்.

ஆவணியுரோகிணிநாளமரபட்சத் தஷ்டமியி னிரவிலேறுகட்
டேவகிபாற் றோன்றி நந்தன் மனைவளர்ந்த மாதவனை நீயுகந்தப்
பாவியுயிர் நவிட்டிப் பார்த்தனவிடு மொருதனித்தேர்ப்பாகனுமிக்
காவிரிசூழ் ரங்கத்திற் கண்வளரு மணிவண்ணன் கன்றபோற்றி.

பிற்பாடு நாரதமுனிஸ்வரர் எழுந்திருந்து ஸ்ரீகைலாசவாசியாகிய சாம்பசிவமூர்த்திக்குத் தண்டனிட்டு ஓய் சுவாமீ, அப்பால் விபீஷணாழ்வார் அந்த விமானத்தைக் காவேரிக் கரையில்வைத்து எதுவரையில் பூசை பண்ணினார். அவர் இலங்காபுரிப்பட்டணத்திற்கு எப்போது போய்ச் சேர்ந்தார். அந்த வர்த்தமானங்களையும் விபரமாகச்சொல்லியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன், இருவளம்பற் மயருளினார் கேளுமையா நாரதமுனிவரே, அதற்குமேல் விபீஷணர் சித்திரிஷிகணங்களுடனேவந்து சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம், பிதிர்த்தர்ப்பணங்கொண்டு காவேரியிற்போய் கனகக்கலசத்தில் திருமஞ்சனங் கொண்டுவந்துவைத்து நந்தவனத்திற்குப்போய், செங்கழுநீர், கருநெய்தல், வெண்டாமரை, செந்தாமரை, புன்னை, திருத்துழாய், சண்பகம், அசோகு, பாதிரி, மருளம், முல்லை, மல்லிகை, இருவாட்சி, என்று சொல்லப்பட்ட நானாவிதமான பரிமள புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு சாஸ்திரயுக்தமாக இயம நியமமுதலான அஷ்டாங்கயோகக்கிரமப்படி ஸ்ரீரங்கநாயகரைப் பூசைபண்ணி, தூப தீப நைவேத்தியமுதலான சோடசவுபசாரங்களுஞ்செய்யத் தொடங்கின சமயத்தில்.

தர்மப் பிர்மாவாகிய சோழராசனுடைய கைங்கரியமாய் வரப்பட்ட நைவேத்தியங்களையும் ஸ்ரீரங்கநாயகருக்கு பூசைபண்ணுவித்து சர்வோபசாரங்களுஞ்செய்து வேதசாஸ்திரபுராணங்களினால் ஸ்தோத்திரமாய



ணம்பண்ணிப் பிரதட்சண நமஸ்காரங்களுஞ் செய்துமுடித்து அவ்விடத்தில் வந்திருக்கப்பட்ட தர்மப்பிர்மாவாகிய சோழராஜன் முதலான சகல ராசாக்களையும் சகலமுனிசுவரர்களையும் ஸ்ரீரங்கநாதருடைய சேவை பண்ணும்படி செய்வித்து விபீஷணர் மங்கள ஆலாத்தியெடுத்தார். அந்த வேளையில் தர்மப்பிர்மாவாகிய சோழராஜன் விபீஷணரைப்பார்த்து ஐயா விபீஷணாழ்வாரே, தேவரீருக்கு நமஸ்காரம் நமஸ்காரமென்றுசொல்லி இரண்டு கைகளையுஞ் சிரசின்மேல் அஞ்சலியாகவைத்து கும்பிட்டு நின்று சுவாமி தேவரீரே, பரமபாகவதோத்தமர் நீரே புண்ணிய புருஷர் உம்முடைய கடாட்சத்தினால் நாங்களெல்லாங் கிருதார்த்தர்களாயினோம் தேவரீர் இவ்விடத்திலதானே சிறிதுகாலமிருந்து எங்களை இரட்சிக்கவேண்டுமென்று வெகுவாய்ப் பிரார்த்தித்தான்.

அதுகேட்டு விபீஷணர் தர்மப்பிர்மாவைப்பார்த்து ஓய் சோழராசனே, நாம் உம்முடைய எண்ணத்தின்படியே நடப்பிக்கிறோம், ஆயினும் நாளைமுதல் ஸ்ரீரங்கநாயகருக்குப பிரமோச்சவம் நடப்பிக்கவேண்டும், அந்த மகோச்சவமென்று இட்சுவாகுமகாராசாவினுடைய காலமுதல் இதுவரையிலும் தப்பாமல் விபவமாய் நடந்தேறிவருகின்றது. ஆதலால், அந்த உச்சவத்தைச்செய்யாமல் நிறுத்தப்போகாது. ஆனபடியினால், அதைக் கிரமமாய் நடத்திவிட்டு நாம் சீக்கிரத்தில் இலங்காபுரிப்பட்டணத்திற்குப போய்வரவேண்டுமென்று சொன்னார். அந்த வார்த்தையைக் கேட்டு சோழராசனும் மகா சந்தோஷகரமாய் விபீஷணரைப்பார்த்து சுவாமீ, தேவரீர் கருத்தின்படியே ஸ்ரீரங்கநாயகருடைய பிரமோச்சவத்தை நடப்பித்து எங்களையெல்லாங் கிருதார்த்தர்களாகச் செய்யுமையாவென்று சொன்னான். அதற்கு விபீஷணரும் அப்படியே நல்லதென்று சம்மதித்துக்கொண்டார். அதற்குமேல், தர்மப்பிர்மாவாகிய சோழராஜன் பிரமதேவனிடத்தில் சிஷர்களாயிருந்து பாஞ்சராத்திர சாஸ்திரங்களைக் கிரமமாகக்கற்றறிந்தவர்கள் அநேகபேரை யழைப்பித்து அவர்கள் அனுமதிப்படிகாப்புகட்டி வஸ்துசாந்தி பண்ணுவித்து பிற்பாடுதுஜாரோகணஞ்செய்வித்து தினம் தினம் மண்டபத்தில் சேவைசாதிக்கும்படி ஸ்ரீரங்கநாயகரை எழுந்தருளப்பண்ணி, அவ்விடத்தில் அர்க்கியபாத்திய ஆசனமுதலான சர்வோபசாரங்களும் நடப்பித்து, பொங்கல், சருக்கரைப்பொங்கல், அக்காரவடிசில், ததியோதனம், புளியவனம், எள்ளவனம், மிளகவனம், கடுகவனம், திருவிசாதம், என்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டுவகை பொங்கலாம்.

தோசை, வடை, அப்பளம், எள்ளுருண்டை, அதிரசம், மனோகரம், சுகியம், தேன்குழல், கோதுமைரொட்டி, ஆனையடிப்பம் முதலானபக்ஷணவர்க்கங்களும், பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம், செவ்வாழைப்பழம், கொய்யாப்பழம், முதலான பழவகைகளும் தேங்காய், செவ்விளநீர், கருப்புமுதலானதுகளும் நைவேத்தியம்பண்ணிவைத்து தூபதெய

புத்தூருக்குநெய், கற்கண்டு, சீனிசருக்கரை முதலானதுகளுஞ் சொரிந்து தமகமவென்று பரிமளிக்கும்படி திருப்பாவாடையுங் கருளமுதஞ்செய்து இன்னம் இப்படிப் பலவிதமான கைங்கர்யங்களும் அமிசைபண்ணுவித்து அப்பால் சாத்துபடி அலங்காரம்பண்ணி வச்சிராங்கி, ரத்தினங்கி, தரிப்பித்து, நவரத்தினக் கிரீடஞ்சூட்டி, முத்தாபரணம், ரத்தினாபரணம், மாணிக்கப்பதக்கம், முத்துமாலை, ரத்தினமாலை, பவளமாலைகளும், அலங்காரஞ்செய்து பஞ்சாயுதங்களுடனே அநேக ஆயுதவரிசைகளும் தரித்து இந்திரவர்ணப்பட்டு அதிக காந்தியான சந்திரகாந்தியுமான பீதாம்பரமுதலான திவ்யவஸ்திர அலங்காரமுஞ் செய்துவித்தார்.

அப்பால் மொத்தை தழுகலை திருப்பள்ளாக்குமுதலான சகல உபசாரங்களும் தப்பாமல் நடக்கும்படி பண்டுபண்ணி குடமுனிகள், திருவிளக்குகள், தூபகலசங்கள், தீபாலத்திகள், தங்கப்படிகள், தங்கக்குடங்கள், தங்கத்திண்ணைகள், முதலான தட்டுமுட்டுகளும் வைவித்து அன்னவாகனம், சிம்மவாகனம், கருடவாகனம், நாகவாகனம், குதிரைவாகனம், ஆனைவாகனம், அனுமந்தவாகனம், இந்திரவிமானம், திருத்தேர், முதலானதுகளும் உண்டுபண்ணி, இவட்டிகள், பகல்வத்திகள், சித்திரபிரதிமைகள் குத்திரப்பிரதிமைகள் விசித்திரங்களாகச் செய்வித்து விளங்தோதும் ஸ்ரீரங்கநாயகரை உச்சவக்கிரமப்பிரகாரம் அந்தந்த வாகனங்களில் எழுந்தருளப்பண்ணி, தேவதுந்துபி, நாகசுரம், வீணை, புல்லாங்குழல், குடமுழாபேரிகை, திருச்சின்னம், முதலான சகலவாத்தியங்களும் திசைகளெல்லாம் அதிரும்படி சம்தாமென்று முழங்கச்சத்தக்கதாக ஆரம்பையூர்வசி திலோத்தமை மேனகையென்று சொல்லப்பட்ட தேவஸ்திரிகளுக்குச் சமானமான ஸ்திரீஜனங்கள் நாட்டியம்பண்ணிக்கொண்டுவர தேவரிஷிகளும் பிரமரிஷிகளும் இன்னம் அநேகமான தாசகூட்டங்களுஞ் புடைசூழ்ந்து, வேதபாராயணங்கள் செய்துகொண்டுவர, மகா வைபவத்துடனே அநேகம் பிராமணர்களுக்கும் அதிதிகளுக்கும் அன்னதானம், பூதானம், கோதானம், வஸ்திரதானம், சொர்ணதானமுதலான சகலதானதருமங்களுநடப்பித்து பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நாலுவகைச்சாதிகளுக்கும் பெருமாளுக்கு விநியோகமான பிரசாதங்களை அபரிமிதமாகக்கொடுத்து.

அப்பால் சந்திரபுஷ்கரணி தீர்த்தக்கரையில் புன்னைவிருக்ஷத்தடியில் தர்மப்பிரமாவாகிய சோழராஜன் மனமகிழ்ச்சியாய்க் கட்டுவித்த மண்டபத்தில் ஒன்பதுநாளும் இவ்வகைப்பட்ட சம்பிரமத்துடனே பெருமாளை எழுந்தருளச்செய்து பக்தசனங்களுக்கெல்லாம் சேவைசாதிக்கும்படிசெய்வித்து அப்பால் பத்தாம்நாளாகிய பவர்ணமிதிதியில் ஸ்ரீரங்கநாயகருக்கு மங்களஸ்நானம் பண்ணுவித்தார். அந்தச் சமயத்தில் ஸ்ரீரங்கநாயகருக்கும் விபீஷணர் அவ்விடத்தில் உச்சவமுடிந்த பின்னும் பதினைந்து



நாளட்டும் மகா சந்தோஷமாயிருந்து பிற்பாடு சோழராஜனிடத்திலும் முனிஸ்வரர்களிடத்திலும் வேதப்பிராமணர்களிடத்திலும் இலங்கைக்குப் போகவேண்டுமென்று சொல்லிப்பெற்றுக்கொண்டு ஸ்ரீரங்கவிமானத்துக்கும் பிரதட்சண நமஸ்காரம்பண்ணி, தனதுடைய கைகளால் விமானத்தையெடுத்தார் எடுக்கக்கூடாமற்போச்சுது. அதுகண்டு விபீஷணர் நடுநடுங்கி மகா துக்காக்கிராந்தராய் வெகு கிலேசத்துடனே ஸ்ரீரங்கநாயகருடைய உபயபாதார விந்தங்களையும் தனதுடைய கண்களிலொத்திக்கொண்டு விசனப்பட்டமுதமாத்திரத்தில் அந்தக் கண்ணீரானது பகவானுடைய திருவடிக் கமலங்களில் விழுந்தது. அதுதெரிந்து ஸ்ரீரங்கநாயகர் விபீஷணரைப்பார்த்து வாரும்பிள்ளாய் விபீஷணா எழுந்திரு எழுந்திரு நீ ஒன்றுக்கும்பயப்படாதே உன் விசனத்தை விட்டுவிடு காவேரி தீர்த்தமும் சந்திரபுஷ்கரணியுங் கூடியிருக்கிறபடியால் இது மகாபுண்ணியஸ்தலம் அல்லாமலும் சோழராஜனும் மகாபுண்ணியபுருஷன் மேலும் இந்த முனிஸ்வரர்களும் வேதப்பிராமணர்களும் மற்றுமுண்டான இதர கூட்டங்களும் மகா உத்தமபுருஷர்கள். ஆகையால், இவர்களையும் இத்தஸ்தானத்தையும் விட்டுவர நாங்கள் சம்மதியில்லை. ஆனபடியினால், நீ நம்முடைய சொல்லுக்கு மாறுத்தரஞ்சொல்லாமல் மகா சந்தோஷமாய்ப் பிரயாணப்பட்டு உன்னுடைய பட்டணமாகிய இலங்காபுரிக்குப் போய்ச்சேர்ந்து பரமபாகவதனாய் மனுமுறைமை வழுவாமல் இராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிரு இதுவுமல்லாமல் இந்தக் காவேரிக்கு ஒருவரங்கொடுத்திருக்கிறோம்.

அஃதென்னவென்றால் பூர்வம் ஒருகாலத்தில் இந்த நதிகளெல்லாம் ஒன்றாகக்கூடி விந்தபர்வதத்தில் வாசம்பண்ணிக்கொண்டு பந்துகன்டிநதி, அம்பாவையடியும், தம்பிரதங்கம், புட்பங்களையறிந்தும், ஒருவருக்கொருவர் புண்ணியவைதகளைச் சொல்லிக்கொண்டு அது அதுகள் இஷ்டமைபத்துடனே விநோதவல்லமையாய் விளையாடிக்கொண்டிருக்கிற வேளையில் விசுவாசுவென்கிற ஒரு சந்தருவன் அந்தராக்ஷமாய் உத்தரதிசையிலிருந்து தட்சண திசையைநோக்கி அனந்தபத்மநாபசுவாமியைச் சேவிக்கும்படிப் பிரயத்தனப்பட்டுப் போகும்போது வழியில் இந்த நதிகள் விளையாடிக்கொண்டிருக்கிறதைப்பார்த்து இரண்டு கைகளையும் உயரெடுத்து நமஸ்காரம்பண்ணிவிட்டுப்போனான். அதுகண்டு, இந்த நதிகளெல்லாம் ஓரிடத்திற்கூடி நாம் இத்தனைபேரிருக்கிறோமே அந்தக் கந்தருவன் நமக்குள் யாரைநோக்கி நமஸ்காரம் பண்ணினானென்று ஒருவருக்கொருவர்கேட்க அப்போது என்னைக் கும்பிட்டானென்றும் உன்னைக் கும்பிட்டானென்றும் ஒன்றுக்கொன்று போராடிக்கொண்டிருந்ததுகள்.

அந்தக் கந்தருவனேதென்றால் தட்சணதிசைக்குப்போய்ச் சமுத்திரஸ்நானம்பண்ணி அனந்த சயனத்திற்றுவாமி மகா வைபவத்துடனே திருக்கண்வளர்ந்தருளுகின்ற ஸ்ரீ அனந்தபத்மநாபருடைய சந்நிதானமை

சுழும்புப்படி பூர்வாசாருக்கிணங்க ஓநீராசிரிக் கணங்களும் பாடித் திருக்கண விழித்தருளின பின்பு அந்தச் சுவாமியைச் சேவித்துக்கொண்டு புறப்பட்டாமிமரம்முதல் உத்தரூபனைக்காலம் வருகிறமட்டும் அந்தஸ்தலத்திலேயே வாசமாயிருந்து பிற்பாடு சுவாமியைச்சேவித்து விடைபெற்றுக்கொண்டு உத்திரதிசையை நோக்கி அந்தமார்க்கமாய்ப் புறப்பட்டு வருகிறபோது விந்தியபர்வதத்தில் இந்த நதிகளெல்லாம் முன்போலக் கூடியிருக்கப்போறது இருப்பதைக்கண்டு அவன் முன்போலவே நமஸ்காரம்பண்ணுகின்றான். அப்படி நமஸ்காரம்பண்ணினமாத்திரத்தில் அந்த நதிகளெல்லாம் ஒன்றுக்கூடி உங்களில் நீ யாரைப்பார்த்து நமஸ்காரம்பண்ணினாயென்று கேட்க உங்களுக்குள் எந்த நதியானது மகத்துவமும் மேன்மையும் பொருந்தியிருக்கிறதோ அதைப்பார்த்து நமஸ்காரம்பண்ணினேனென்று சொல்லிப்போய்விட்டான்.

அந்த வசனத்தைக்கேட்டு கங்கையானது நானே சிரேஷ்டமென்று சொல்லியது அந்தச் சொல்லுக்குச் சரிதானென்று சம்மதித்து எல்லா நதிகளும் சும்மாயிருந்தார்கள். அதில் காவேரிமாத்திரம் சம்மதிக்காமல் கோபங்கொண்டு கங்கையைப்பார்த்து நீ சிரேஷ்டமென்பதும் நான் சிரேஷ்டமென்பதும் சத்தியலோகத்திற்குப்போய் பிரமதேவனைக் கேட்டுத் தெரிந்துகொள்வோமென்று கங்காநதியையழைத்துக்கொண்டு சத்தியலோகத்திற்குப்போய் பிரமதேவனைக்கண்டு நமஸ்காரம்பண்ணி ஓய் சத்தியலோகவாசகா, சதுர்முகப்பிரமாவே, நதிகளுக்குள் நான் சிரேஷ்டமோ இந்தக் கங்காநதி சிரேஷ்டமோவென்றுகேட்டது. அதைக்கேட்டு பிரமதேவன் புன்சிரிப்பாகச்சிரித்து, கங்கையானது ஸ்ரீ விஷ்ணுபாதத்திலேபிறந்தபடியால், சிரேஷ்டமென்று சொல்லப்படும். இப்படி சொல்லுகையில் உனக்குத் தாழ்ச்சியென்னவென்று பிரமதேவன், ஆஞாபனையாகச்சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டவளவில் காவேரிநதியும், துக்கமடைந்து இமோர்ப்பர்வதத்திற்கு வடபாரிசத்தில் வந்துசேர்ந்து பிரமதேவனைநோக்கி மகா உக்கிரமான தபசு பண்ணிக்கொண்டிருந்தது.

அப்போது அந்தக் காவேரிநதியினுடைய தபசுக்கு மனமிரங்கி பிரமதேவனும் பிரத்தியட்ச தரிசனங்கொடுத்து, உனக்கென்ன வரம்வேண்டுமென்றுகேட்டார். காவேரிநதியும், பிரமதேவனுக்குப் பிரதட்சண நமஸ்காரம்பண்ணி சுவாமீ, நான் கங்காநதியிலும் சிரேஷ்டமாய் விளங்கும்படி கட்டளையிடவேண்டுமென்றுகேட்டது. அதற்குப் பிரமதேவன், காவேரியைப்பார்த்து நீ கம்மைநோக்கி மகத்தான தபசுபண்ணினபடியால் இனிமேல் கங்காநதிக்குச் சமானமாய் உன்னைச் சகலமான ஜனங்களும் புகழ்ந்துகொண்டாடக் கடவர்களென்று வரங்கொடுத்துவிட்டு அனேககாலத்தின்மேல் தன்னுடைய சத்தியலோகத்திற்குப்போய்ச்சேர்ந்தான். காவேரிநதியானது அந்த வரத்திற்குச் சம்மதிக்காமல் சேரர்தேசத்திற்



குடகுதேசத்து, சாசகேந்திமமெங்கிற திருச்சேலைமலையிலிருந்து தம்மை ஜீக்கிரமாய்ப் பாவனைபண்ணி பூஜித்துத் தபசுபண்ணிக்கொண்டிருந்தது. அந்த தபசுக்கு நாம் சந்தோஷத்தையடைந்து பிரத்தியட்ச தரிசனங்கொடுத்து உனக்கு வேண்டிய வரத்தைக்கேளென்று சொன்னோம். அதைக்கேட்டு, காவேரிநதியும் நமக்கு நமஸ்காரம்பண்ணி சுவாமீ, லோகநாயகா, நான் இவ்வளவுகாலம் தபசுபண்ணியும் உம்முடைய பாதத்திற் பிறந்த கங்காநதிக்குச் சமானமானேனேயல்லாமல் சிரேஷ்டமாகாமற்போனேன். ஆதலால், இனிமேலும் என்னைச் சர்வத்திரரும் கங்காநதியைப்பார்க்கிலும் காவேரிநதியே சிரேஷ்டமென்று சதாகாலமும் புகழ்ந்துகொண்டாடும்படி செய்விக்கவேண்டும்.

அதுவுமல்லாமல் கங்காநதியானது என்னைக்காட்டிலும் குறைந்ததாம்படி செய்யவேண்டுமென்றுகேட்டது. அதற்கு, நாம் அங்கீகரித்து கங்காநதியானது நம்முடைய பாதத்தில் பிறந்தபடியினால் அதுவே சிரேஷ்டமென்பது நிச்சயமாயினும் நீ வெகுகாலமாய் நம்மை பூஜித்துத் தபசுபண்ணினபடியால் கங்காநதியிலும் உன்னைச் சிரேஷ்டமாகச் செய்விக்கிறோம். அதெப்படியென்றால், ஒருநாள் நம்முடைய பாதத்திற்பிறந்த கங்காநதியைச் சிரேஷ்டமென்று பூலோகத்திலுண்டான சகலமானபேர்களும் கொண்டாடுகிறார்களே அப்படியிருக்க நாம் எப்போதும் உன்னிடத்தில் தானே வாசமாயிருக்கிறபடியால் நீயே சிரேஷ்டமென்று சர்வத்திரசாதாரணமாகச் சொல்லுவதற்குச் சமயமில்லை, உன்னுடைய மகத்துவத்தை யொருவருலும் வர்ணிக்கமுடியாது. நீ சுகமாயிருவென்று வரப்பிரசாதங்கொடுத்திருக்கிறபடியால் நாமினி இவ்விடத்தில்தானே வாசமாயிருக்கப்போகிறோம். ஆதலால், நாம் காவேரிநதிக்குக் கொடுத்திருக்கிறவரத்திற்கு பின்னம் வரவொட்டாமல் நீ செய்யவேண்டியதென்று திருவாய்மலர்ந்தருளி ஓய் விபீஷணா, நாம் இலங்காபுரிபட்டணத்திற் கெழுந்தருளமாட்டோம்.

நாம் இவ்விடத்திலேதானே சதாகாலமும் வாசமாயிருந்து உன்னுடைய இலங்காபுரிபட்டணத்தைப்பார்த்தபடியே இருப்போமென்றுசொல்ல அதுகேட்டு, விபீஷணனும் பயபக்தி விசுவாசத்துடனே சுவாமீ ஸ்ரீரங்கநாயகா, தேவரீருடைய திருவுளப்படியிருந்தால் தாசன் என்னசெய்யப்போகிறேன் மிகா சந்தோஷமாச்சுது. நான் தேவரீருடைய பாதாரவிந்தங்களையே இடைவிடாமற் பூஜித்துக்கொண்டிருக்கிறேன். நான் இலங்காபுரிக்குப்போகிறதில்லை எனக்கு ராச்சியபாரமும் வேண்டியதில்லை. உம்முடைய பாதாரவிந்தங்களே சரணாகதியென்று சரணமடைந்தேன். என்னைத் தள்ளிவிடாமல் காப்பாற்றி இரட்சிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான். அப்படி சொன்னவார்த்தையை ஸ்ரீரங்கநாயகர்கேட்டுப் புன்சிரிப்பாகச்சிரித்து, அப்பா விபீஷணா, நீ ஸ்ரீராம

மூர்த்தியால் பட்டாபிஷேகஞ்செய்வித்த ராஜ்ஜியத்தைப் பரிபாலனஞ்செய்யாமல்விட்டுவிட்டு நீ இவ்விடத்திலிருந்தேனே எப்படியிருக்கலாம் நீ அப்படிசெய்யாமல் சுகமாய் உன்னுடைய பட்டணமே போய்ச்சேர்ந்து ராஜ்யபரிபாலனம்பண்ணிக்கொண்டிரு. நாம் இந்த விமானத்தில் விக்ரகரூபமாயிருந்து சகலமான பக்தஜனங்களும் இஷ்டசித்திகளையும் மோட்சத்தையும் பிரசாதித்துக்கொண்டிருக்கிறோம்.

நாம் இவ்விடத்திலிருக்கிறபடியால் உனக்கும் உன்னுடைய இலங்காபுரிப்பட்டணத்துக்கும் ஒரு தாழ்ச்சியுமில்லை சூரிய சந்திரர்களுள்ளமட்டும் ஒரு பயமுமில்லாமல் நிர்ப்பயமாய் சிரஞ்சீவியாகவிருந்து ராஜ்யபரிபாலனம்பண்ணி அதற்குமேல் பிரமகற்பாந்தத்தில் பிரமதேவனோடுகூடிப் பரமபதத்திற்குவந்து நம்மைச்சேவித்து அவ்விடத்திலிருக்கப்பட்ட பரமபாகவதர்களாகிய நித்திய ஜகவரியர்களுடன் நித்தியமாயிருந்து பிறப்பு பிறவியில் திரும்பவும் உன்னுடைய இலங்காபுரிப்பட்டணத்திற்குவந்து சுகமாய் அரசாட்சிசெய்யக்கடவாயென்று உறுதியாகச் சொல்லியருளினார். அதுகேட்டு, விபீஷணர் மறுபடியும் பகவானைப்பார்த்து சுவாமீ ஸ்ரீரங்கநாதா, ஸ்ரீராமபத்திரசுவாமீ கொடுத்தருளிய விமானமே எனக்கு சித்தியாகாமற்போனபோது இலங்காபுரிராஜ்யமும் சகல சம்பத்துகளுமிருந்து எனக்கு என்னபலனைக் கொடுக்கப்போகிறது எனக்கு அதுகளொன்றும் வேண்டியதில்லை உம்முடைய பாதமே கட்டளையிட்டருளவேண்டுமென்று நமஸ்காரம்பண்ணினான்.

அதுகேட்டுப் பெருமாளும் விபீஷணரைப்பார்த்து அப்பா விபீஷணா பூலோகத்திலுள்ள யோகீஸ்வரர்களும் முனீஸ்வரர்களும் இனிமேலும் மற்றுமுண்டான பக்தஜனங்களும் நம்மை நோக்கி அநேக தபசுகள் தானதருமங்கள் யாகங்கள்பண்ணி அந்தப் புண்ணிய காரியங்களினால் நம்முடைய கடாட்சம்பெற்று மோட்சத்தைப்பெறுவார்கள். ஆதலால், நீயும் நம்முடைய வாக்குக்கெதிர்சொல்லாமல்போய் உன்னுடைய பட்டணத்தைப் பரிபாலனம்பண்ணிக்கொண்டு முற்கூறிய சற்கருமங்களைச் சதாகாலமும் நடத்திக்கொண்டிருந்தால் உனக்கு மோட்ச சம்பத்தைப் பிரசாதித்தருளுவோம் நீயும் உன்னுடைய பந்துசனங்களும் இவ்விடத்திற்கு அடிக்கடிவரவேண்டாம். பூலோகத்திலுள்ள புண்ணியபாவங்களில் விருப்பு வெறுப்பில்லாமல் நிஷ்காமிய தவம்பண்ணி நம்முடைய பாதாரவிந்தங்களே சரணாகதியென்று எவன் சரணமடைகிறானோ அவனே மோட்சவதிகாரி அவனே நமக்குப் பிரியமானவனென்று அந்தரங்கமாய்த் திருவுளம்பற்றியருளினார்.

அதைக்கேட்டமாத்திரத்தில் விபீஷணரும் புளகாங்கிதத்தையடைந்தவராய் ஸ்ரீரங்கநாயகருக்குப் பிரதக்ஷிண நமஸ்காரம்பண்ணி அநேகதிருநாமங்களாலும் அருச்சனைபண்ணி அந்தப் பகவானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு இலங்காபுரிப்பட்டணமே போய்ச்சேர்ந்து இராஜநீதி



வழுவாமல் ராஜ்யபரிபாலனஞ்செய்துக்கொண்டிருந்தார். கேட்டீரோ நாரதமுனிவரே, அப்பால் தர்மப்பிரபாலவாகிய சோழராஜன் மனமகிழ்ச்சியடைந்து அநேகம் மண்டபங்கள், கோபுரங்கள், சத்திரங்கள், சிவீயாரமங்கள், சோலைகள், மதில்கள், வகுப்பித்து அநேகம் திருக்குளங்கள் வெட்டுவித்து, அநேகம் புட்பவனங்கள் உண்டாக்கிவைத்து, வேதப்பிராமணர்களால் நித்தியமா ஐந்துகால பூசையும் பாஞ்சராத்திரக்கிரமந்தவறாமல் நடக்கும்படி செய்வித்து பிரமோற்சவமும் நித்தியோற்சவமுந் தப்பாமல் நடந்தேறிவரும்படி செய்வித்தானென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார். இந்த மகத்துவங்களையெல்லாம் நாரதர்கேட்டு ஆச்சரியமாய் ஒன்றுஞ்சொல்லாமல் சற்றுநேரம் சுமமாயிருந்தார்.

---

ஒன்பதாவது- அத்தியாய- முற்றிற்று.

---

ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாய நமஹ.

## பத்தாம்- அத்தியாயம்.

துதிகவி.

விருத்தம்.

கவினாரம் பரியுருவா யணியினிடை யவதரித்துக் கருதுமன்பர்
பவமகற்றும் படியணி ஞானங்கொண்டு முனிவர் பல்லாண்டுகூறத்
தவமுயலும் வீடணனுக் கிரங்கியொரு விமானமேற் சர்ப்பமீது
துவையதுசி ராக்கத்திற் பள்ளிகொள்ளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி.

பிற்பயாடு நாரதபகவானெழுந்திருந்து ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவனுக்கு வலசாரி இடசாரியாகவந்து பிரதட்சண நமஸ்காரங்கள்பண்ணி ஸ்தோத்திரஞ்செய்து சங்கரா சர்வசீலதயாபரா, தேவரீருடைய கிருபாகடாட்சத்தினால் பூலோகத்திற்கு ஸ்ரீரங்கவிமானம் வந்தவைலாறும் அதைப்பூசைபண்ணினவர்களும் ஒருதரம் அந்த ஸ்தலமகத்துவத்தையும் அதிலுண்டான தீர்த்த மகத்துவங்களையும் கிரமமாகத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய திருவுளம்பற்றியருளுகின்றார்.

கேளுமையா நாரதமுனிவரே, ஸ்ரீரங்கவிமானத்தைசுற்றிய இரண்டுயோசனைதூரமட்டும் ஸ்ரீரங்கக்ஷேத்திரமென்றே சொல்லப்படும் அதிற்குடியாய் வாசமாயிருக்கிறபேர்களுக்கு ஒருக்காலும் நரகமில்லை. ஸ்ரீரங்

த்துக்குப்போகவேண்டுமென்று வரக்கிறும் சொன்னாலும் மனதிருக்கின்றதானும் மோட்சத்தைப்பெறுவார்கள். அப்படி இருக்குமானால் ஸ்ரீரங்கத்திலேயே சதாகாலமும் வாசம்பண்ணுகிறவனுடைய பெருமையை ஒருவராலும் மனவிட்டுச்சொல்லிமுடியாது.

முதலாவது- சந்திரபுஷ்கரணி தீர்த்தமகத்துவம்.

கேளுமையா நாரதரே, அவ்விடத்தில் உபயகாவேரியல்லாமல் நவ தீர்த்தங்களுண்டு. அதுகளில் முதலாவது சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தில் எவனொருவன் ஏகமனதாயிருந்து ஒருதரம் ஸ்நானம்பண்ணி நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு விமானத்தைச் சேவிப்பானாகில் அவனும் அவன் வமிசத்திலுள்ள பிதாக்களுந் தேவதைகளும் பாவவிமோசனர்களாய் புண்ணியலோகத்தைப்பெறுவார்கள்.

அஃதெப்படியென்றால், சந்திரனானவன் தர்மகுருவுடைய சாபத்தினால் தன்னுடைய பதினறுகலைகளும் நீங்கிப்போய் மிகுந்த துக்காக்கிராந்தனாய் அந்த ஸ்ரீரங்கத்துக்குவந்து சந்திரபுஷ்கரணி தீர்த்தக்கரையில் ஒரு புன்னை விருட்சத்தைநட்டுவைத்துப்பயிராக்கி அதினிழலிலிருந்து கொடூரமான தபசுபண்ணிப் பிறகு ஸ்ரீரங்கநாதருடைய திருபாகடாட்சத்தினால் பழையபடியே தன்னுடைய பூர்ணகலைகளையடைந்து தன்னுடைய ஸ்தானத்திற்குப்போய்ச்சேர்ந்தான். அந்தப் புன்னை விருட்சத்தைத் தெரிசித்தவர்களுக்கும் பரிசித்தவர்களுக்கும் மகா ஐசுவரியாட்சமுண்டாகும். அந்த விருட்சத்தைக்கண்டவுடனே சேவிக்கவேண்டும். அதின் நிழலிலிருந்து தானதருமங்கள்பண்ணவேண்டும். அந்தப் புன்னை மரத்தடியிலுட்கார்ந்து செபம்பண்ணினால் ஒன்று கோடியாகப்பலிக்கும் எப்போதும் அந்தத் தீர்த்தக்கரையில் வேதவியாசர் வாசமாயிருப்பார்.

அந்தத் தீர்த்தத்திற்கு ரிஷி வேதவியாசர் அதற்குத் தேவதை, வாசுதேவன், புட்கரன், புட்கராஜன், காலநேமி, குமுதன், என்று சொல்லப்பட்ட இவர்கள் நாலுபேரும் காவலாகவிருப்பார்கள். இவர்கள் நாலுபேரும் ஸ்ரீரங்கநாயகருக்குத் தூதர்களாகையால் சந்திரபுட்கரணி தீர்த்தத்தில ஸ்நானம்பண்ணவேண்டியவர்கள் அந்தத் தீர்த்தத்துக்குக் காரணதேவதையாகிய வாசுதேவனை நினைத்துப் புட்பங்களைக் கையிலெடுத்துக்கொண்டு அந்தத் தீர்த்தத்துக்குப் பிரதட்சணம் நமஸ்காரங்கள் பண்ணி அந்தத் தியானங்களைச் சொல்லவேண்டும். அந்தத் தியானங்களெப்படியென்றால் சகல லோகங்களுக்கும் சகல ஜீவர்களுக்கும் ஆதாரமாயிருக்கப்பட்ட கர்த்தாவே, நான் ஸ்நானம்பண்ணும்படி அனுக்கிரகஞ்செய்யவேண்டும். என்னைப் பாதகங்களினின்று நீக்கி மோட்சத்திற் சேர்க்கவேண்டுமென்று சொல்லி ஏகமனதாயிருந்து அதில் ஸ்நானம்பண்ணும்போது அஷ்டாட்சரமந்திரத்தைச் செபிக்கவேண்டும். அதற்குமேல் கரையேறினவுடன் வாசுதேவமூர்த்திக் கர்க்கியங்கொடுக்கவேண்டும். பிற்பாடு வேதவியாசருக்கும் சந்திரனுக்கும் மற்றமுண்டான



தீர்த்தாட்சகர்களுக்கும் அர்க்கியங்கொடுத்து அதற்குமேல் பிராமதேவனுக்கும் சூரியனுக்கும் இட்சுவாகுமகாராஜனுக்கும் உமக்குந்தர்ப்பணஞ்செய்து பண்ணி, தனக்குச் சக்தியுண்டானமட்டும் பிராமணர்களுக்கும் அதிதிகளுக்கும் தானதர்மங்கள்பண்ணினால் அவனுக்குப் பரமபதங்கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அந்த தீர்த்தக்கரையிலிருந்து ஹரிநாமஸ்மரணைபண்ணினால், அவன் தேவபோகத்தை அநுபவிப்பான். அவன் செய்யும் புண்ணியங்கள் ஒன்று கோடியாகும் ஆதலால் அந்தத் தீர்த்தத்தில் முழுகினவர்கள் விசேஷமாகத் தானதருமங்களையே செய்யவேண்டும்.

இரண்டாவது- வில்வதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதமுனிவரே, அப்பால் அந்த தீர்த்தத்துக்குக் கீழ்த்திசையில் ஏழுபிராகாரத்துக்கு வெளிப்புறத்தில் வில்வதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அது சுக்கிரபகவான தபசுபண்ணின ஸ்தானம் எப்படியென்றால் மகா பெலிச்சக்கரவர்த்தியானவன் யாகம்பண்ணின சமயத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் வாமனவதாரமாகப்போய் மூன்றடிமண் கேட்டார். அவருக்கு மூன்றடிமண் கொடுக்கும்படி சம்மதித்து, மகா பெலியானவன் வாமனமாகிய பெருமாள்கையில் தாரைவார்க்கும்போது சுக்கிரனும் அந்தக் கமண்டல துவாரத்திற் புகுந்திருந்து கமண்டலசலம் பெருமாள்கையில் விழவொட்டாமற்செய்தான. அதற்குமேல் தர்ப்பையினால் துவாரத்தைக்குத்தி தாரைவார்த்தான். அதனால் சுக்கிரனுக்குக் கண்தெரியாமல் குருடனாகிப்போனான். வாமனமூர்த்திக்கு தானம்பண்ணுகிறகாலத்தில் குறுக்கேநின்று தடுத்தபடியினால் கண்ணுக்கு இந்த கெதியாச்சுதென்று துக்கப்பட்டு இந்தத் தோஷநிவாரணமாகும்பொருட்டு வில்வதீர்த்தக்கரையில் ஒரு வில்வமரத்தைவைத்துப் பயிராக்கி அதின் கீழேயிருந்து வெகுகாலம் சுக்கிரபகவான் தபசுபண்ணினார். அந்தத் தீர்த்தத்துக்கு ரிஷி சுக்கிரபகவான் முகுந்தனும் கணாதரும் அதற்குக் காவலாளிகள் ஸ்ரீநிவாசரூபிய அச்சுதர் அதற்கு தேவதை அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்குச் சகலதோஷபரிகாரமாம் அவ்விடத்தில் காசிததானம் பண்ணினால் விசேஷபலனுண்டாகும். அதைப்பார்க்கிலும் இரணியதானம் பண்ணினால் அதிகபலனுண்டு. அல்லாமல், அதில் ஸ்நானம்பண்ணினவன் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியையும் பரமபாகவதர்களையும் நிந்தனைசெய்தவனானாலும் அவனசெய்த அபசாரங்களெல்லாம் நிவாரணமாகிக் கிருதார்த்தனாவான். அந்தத் தீர்த்தக்கரையிற்செய்த தானதருமங்கள் ஒன்றுகோடியாய்வளரும் அந்தத் தீர்த்த மகத்துவத்தினால் பிரமஹத்தி தோஷமும் நீங்கும்.

மூன்றாவது- சம்புதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் இந்திர தீர்த்தத்துக்கு அக்கினிமூலையில் சம்புதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அந்தத் தீர்த்தக்கரை

யில் சகானியன் எப்போதும் வாசமாயிருப்பான். அதுவுமின்றி பிரம்மதேவனுடைய ஆக்கினையில் உலகத்திலிருக்கப்பட்ட சகல தீர்த்தங்களும் [illegible] அந்த மகத்தான தீர்த்தத்திலே [illegible] செய்வித்து தோஷத்தை [illegible] அந்த தீர்த்தக்கரையில் ஒரு காலில் மாத்திரத்தைப் பயிற்சி, அந்த மரத்தினிடம் கொண்டாயிருந்து தபசுபண்ணினான். அந்த தீர்த்தத்திற்கு ரிஷி ஆகிரசபுத்ரர் அதற்குக் காவலாளிகள் [illegible], சண்முகன், [illegible] அதற்கு தேவதை சகானியன் அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி பிராமணர்களுக்கு அன்னதானம் செய்தால் அவனுக்குச் சகல பாவங்களும் நீங்கும். அந்த தீர்த்தத்திற்கு அன்னதானமே விசேஷமாகும். அவனுக்கு ஸ்ரீரங்கநாயகர் சந்தோஷத்தையடைந்து அம்முடைய பாபங்களைதர்களுக்குச் செய்த அபசாரங்களையெல்லாம் பொறுத்து இரட்சித்தருளுவார்.

## நான்காவது- அசுவ தீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் சந்திரபுஷ்கரணிக்கு நேர் தெற்காகவும், [illegible] அசுவதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அந்தத் தீர்த்தக்கரையில் [illegible] ஒரு அசுவமானது [illegible] அந்த மரத்தினிடமிருந்து கொண்டு தபசுபண்ணி அந்த தோஷத்தைப் பரிகரித்துக்கொண்டான். அந்தத் தீர்த்தத்திற்கு ரிஷி, கௌசர், அதற்குக் காவலாளி அனந்தர் அதற்கு தேவதை, இந்திரன், அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி கன்னிகாதானம் [illegible] பண்ணினால் சகல தோஷங்களும் பரிகாரமாகும். மேலும், [illegible] ஸ்திரீகளையிச்சித்த தோஷமும் நீங்கும்படி பெருமாள் கடாட்சிப்பார்.

## ஐந்தாவது-புன்னை தீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் சந்திரபுஷ்கரணிக்கு நேர் மேற்குத் திசையில் காவேரிநதியில் புன்னைத்தீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அந்தத் தீர்த்தக்கரையில் அக்கினிதேவனானவன் [illegible] ரிஷிகளைக் [illegible] ஒரு புன்னை விருட்சத்தையடைந்து [illegible], அந்த மரத்தினிடம் கொண்டு தபசுபண்ணிக்கொண்டிருந்து அந்த தோஷத்தை நீக்கிக்கொண்டான். அந்தத் தீர்த்தத்திற்கு ரிஷி, கபுத்திரர், அந்தத்தீர்த்த இரட்சகர், விக்கியாதர், அதற்குத் தேவதை அக்கினிதேவன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்ரீ [illegible] ஸ்நானஞ்செய்து பசுவுசெய் தானம்பண்ணினால் அவன் செய்திருக்கப்பட்ட பாவங்களெல்லாம் பறந்துபோகும். மேலும், பரதாரத்தை இச்சித்தபாவமும் நீங்கும்படி பெருமாள் கடாட்சித்தருளுவார்.



## ஆறாவது- மருத தீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் சந்திரபுஷ்கரணிக்கு வாயுமூலையில் மருததீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அங்கே தேவேந்திரனானவன் விருத்திரனைக் கொன்ற பழிநீங்கும்படி அந்த தீர்த்தக்கரையில் ஒரு மருதமரத்தைப் பயிற்சி அந்த மரத்தினிடமிருந்து இந்திரன் தபசுபண்ணி அந்தபாவத்தைப் போக்கிக்கொண்டான். அந்த தீர்த்தத்திற்கு ரிஷி, பிரஜாபதி அந்தத்தீர்த்தரட்சகர் சடகோபாழ்வார், அதற்குத் தேவதை இந்திரன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்ரீரங்கநாதனைத்தியானித்து ஸ்நானம்பண்ணி தம்மால் இயன்றமட்டும் தானதருமங்களைப்பண்ணினால் அவர்களுக்குச் சகல பாவங்களும்போம். அல்லாமலும் கோவதை, ஸ்திரீவதை, பிராமணவதைபண்ணின தோஷங்களும் நீங்கும்படி பெருமாள் கடாட்சஞ்செய்தருளுவார்.

## ஏழாவது- பலாச தீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் சந்திரபுஷ்கரணிக்கு நிருதிமூலையில் காவேரிக்குத் தென்புறத்தில் பலாச தீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அந்தத் தீர்த்தக்கரையில் ஒரு திவ்வியமான புரசவிருட்சமுண்டாயிருந்தது. அந்த மரத்தடியில் தபசுபண்ணி குமாரக்கடவுள் சத்திய சேனாபதித்தைப்பெற்றார். அந்தத் தீர்த்தத்துக்கு ரிஷி, அகஸ்தியர், அந்தத் தீர்த்தரட்சகர் பலராமர், அதற்குத் தேவதை குமாரக்கடவுள் அந்தத்தீர்த்தத்தில் எவனொருவன் சித்திரையுடையமாதத்தில் ஸ்நானஞ்செய்து பிராமணர்களுக்குக் கோதானஞ்செய்தால் அவனுக்கு மோட்சமுண்டாகும். அதுவுமல்லாமல் காமக்குரோதபாபங்களாயிருக்கப்பட்ட [illegible] சகல தோஷங்களும் பரிகாரமாகும்படி பெருமாள் பிரசாதித்தருளுவார்.

## எட்டாவது- கடம்ப தீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் சந்திரபுஷ்கரணிக்கு நேர் வடதிசையில் கொள்ளிடக்கரையில் கடம்ப தீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அந்தத் தீர்த்தக்கரையில் கடம்பவிருட்சங்கள் விஸ்தாரமாயிருக்கும். அந்த விருட்சத்தினிடமிருந்து ஜனகமகாராஜன் வெகுகாலம் தபம்பண்ணி இஷ்டசித்திகளையும் மோட்சத்தையும் பெற்றான். அந்தத் தீர்த்தத்துக்கு ரிஷிஜனகர் அந்தத்தீர்த்தரட்சகர் கருடாழ்வார் அதற்குத் தேவதை சதுர்முகப்பிரமா அவ்விடத்தில் புருஷோத்தமனென்கிற பெருமாள் பிராட்டியுடன் கூடியிருந்து பள்ளிகொண்டிருக்கிறார். ஆகையால், அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி பிராமணர்களுக்கு அபூபங்களை [illegible] தத்தங்களுடனே அன்னதானம்பண்ணுவித்தால் சகல பாவங்களும் நீங்கும். மேலும், ஒருவரிடத்தில் தானம்வாங்கின தோஷமும் இருப்படி பெருமாள் கிருபைசெய்வார்.

## ஒன்பதாவது- அம்பாதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே, அப்பால் சந்திரபுஷ்கரணிக்கு நேர் ஈசானிய மூலையில் கொள்ளிடத்திற்கு வடபாரிசத்தில் அம்பாதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு. அந்தத் தீர்த்தக்கரையில் ஒரு மாமரத்தை நட்டுப் பயிர் செய்து அந்த மரத்தினடியில் வெகுநாளிருந்து சூரியன் தபசுபண்ணினான். அந்தத் தீர்த்தத்திற்கு ரிஷிவசிஷ்டர் அதற்குத் தேவதை சூரியன் அந்தத் தீர்த்தாட்சகர் விஷ்வக்சேனர் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி பிராமணர்களுக்குப் பூதானம்பண்ணினால் அவர்களுக்கும் சகலபாவமும் நீங்கிவிடும். அல்லாமலும், அவர்கள் தாய் தகப்பன்செய்த பாவங்களும் பரிகாரமாகும்படி பெருமாள் கடாட்சஞ்செய்வார்.

ஆகையால் ஸ்ரீரங்கஸ்தலத்துக்குப்போய் ஸ்ரீரங்கவிமானத்தைச் சேவித்தவன் மேற்சொல்லிய நவதீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணி அந்தத் தீர்த்தவாசிகளாகிய ரிஷிகளுக்கும் தேவதைகளுக்கும் பிரீதியாகமுதற் சொல்லிய தானதருமங்களைச்செய்து பிறகு காவேரி நதிக்கரையில்வந்து தேவதர்ப்பணம் ரிஷிதர்ப்பணம் பிதிர்தர்ப்பணமுதலானதுகளும் கிரமமாகச்செய்து காவேரிஜலத்தை இரண்டுகையினாலு முகந்தெடுத்து நான் அறிந்துசெய்த பாவங்களையும் அறியாமற்செய்த பாவங்களையும் பரிகரித்து அமிர்தகரமான இந்த ஜலம் என்சரீரத்திற் பரிசனமானவுடன் சகல சம்பத்துகளுமுண்டாகவேண்டுமென்று சங்கற்பம்பண்ணி அந்தச் ஜலத்தைச் சிரசின்மேற் புரோட்சித்துக்கொண்டு பிற்பாடு அந்தக் காவேரியில் ஸ்நானம்பண்ணவேண்டும்.

அதுவுமல்லாமல் எட்டுத்திக்குகளில் எட்டுதீர்த்தங்களும் எட்டுவிருட்சங்களுமாயிருக்கின்றது. இந்தச் சந்திரபுஷ்கரணிதீர்த்த மத்தி மத்தியிலிருக்கின்றது. அதனிடத்தில் ஸ்ரீரங்கநாயகர் விமானரூடராய் ஆதிசேஷசயனத்தில் பள்ளிகொண்டிருக்கிறார். எவனாவது அந்தத் தீர்த்தத்தில முழுகினாலும் அதைக் கையினால் அள்ளிச் சிரசின்மேல் சீக்கிரமென்று புரோட்சித்துக்கொண்டாலும் அந்தத் தீர்த்தத்தைப் பானம்பண்ணினாலும் அதைத் தரிசித்தாலும் கைகளாற் பரிசித்தாலும் அதன்பெயரை வாக்கினால் வசனித்தாலும், செவிகளால் கேள்விப்பட்டாலும், அவனுக்குச் சகல பாவங்களும் நீங்கிப்போகும்.

அல்லாமலும் வேறொரு நாடு நகரங்களுக்குப்போயிருந்து அவ்விடத்திலிருக்கப்பட்ட ஏரி குளங்கள் முழுகுங்காலத்தும் ஒருவன் இந்தச் சந்திரபுஷ்கரணியின் பேரைச்சொல்லி முழுகுவானாகில் அவனுக்கு மேற்சொல்லிய தீர்த்தத்தில் முழுகினபலனே சித்தியாகும். மேலும், மூற்கூறிய நவதீர்த்தங்களிலும் ஒருபகல் மூப்பது நாழிகைக்குள் ஸ்நானம்பண்ணி பிரதட்சண நமஸ்காரங்கள்செய்து அப்பால் ஸ்ரீரங்கநாயகரையுஞ் சேவிப்பண்ணுவானாகில், அவனும் அவன்பிறந்த வமிசத்தில் இருபத்தொரு



தலைமுறைகளில் வரும் பிராமணர்களும் அவனுக்குப்பின் முப்பது தலைமுறைகளில் வரும் புத்திர பௌத்திரர்களும் ஸ்ரீரங்கநாயகருடைய திருப்பாதகடாட்சத்தினால் பரமபதத்தை அடைவார்கள். மேலும், அந்த ஸ்தலத்தில் வாசஞ்செய்கிறவர்களுக்கு உபவாசமாயிருந்து நவதீர்த்தங்களிலும் முழுகி, பிரதட்சண நமஸ்காரங்கள்பண்ணி ஸ்ரீரங்க விமானத்தையும் பரம வைகுந்தரையுஞ் சேவித்து அன்றிராத்திரி முழுதும் கண்ணுறங்காமலிருந்து மறுநாள் உதயகாலத்திலும் முற்சொல்லிய தீர்த்தங்களில் முழுகி ஸ்ரீரங்கநாயகருடைய சேவைசெய்துகொண்டு, பிற்பாடு அந்நதானத்தையே பாரணைபண்ணினால் அவனும் அவன் வமிசத்திலுள்ளவர்களும் வைகுந்தத்தில் நித்தியவாசிகளாக வாழ்ந்திருப்பார்கள் இதற்குச் சந்தேகமில்லை. மேலும், அந்த ஒன்பது தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணி பிண்டப்பிதிர் தர்ப்பணஞ்செய்வானாகில் அவனுடைய பெருமை இன்னவென்று ஒருவராலும் அளவிட்டுச் சொல்லமுடியாது; அது கிரதுகம்பண்ணினதற்குச் சரியாகும்.

ஒருவன் அந்தஸ்தலத்திலிருக்கப்பட்ட பசுக்களுக்கு ஒருவாய் புல் பிடுங்கிக் கொடுப்பானாகில் அவனுடைய பிதுர்தேவதைகள் வயிறாரத் தர்ப்பண்ணின சந்தோஷத்தையடைவார்களென்று பரமசிவன் திருவாய் மலர்ந்தருளினார். அதைகேட்டு, காசியபமுனிவரும் எழுந்திருந்து சுவாமி, தேவரீருடைய திருவாக்கினாலே ஸ்ரீரங்கமகத்துவமாகிய புண்ணியசரித்திரத்தை அடியேனுக்காக ஆக்ஞாபித்தீர் பரக்கேட்டுக் கிருதார்த்தனானேன் இனி இன்னமொருவிடத்திற்போய் கேட்கவேண்டிய சந்தேகமில்லையென்று ஸ்ரீபரமசிவனுக்கு பலமுறை நமஸ்காரங்கள்பண்ணி அவருக்கு அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சகலோபசாரங்களுஞ்செய்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தம்முடைய ஆச்ரமத்திற்போய்ச்சேர்ந்தார்.

இப்படிப்பட்ட மகத்துவமாகிய சரித்திரத்தை எவனொருவன் வாசிப்பானாகில் அவனுக்குப் பெருமாள் சகலசம்பத்தும் அஷ்டைசுவரியமுங் கொடுத்தருளுவார்.

அல்லாமலும் அமாவாசை, பௌர்ணமி, முதலான புண்ணியதினங்களில் ஸ்நான சந்தியானங்கள் முடித்துக்கொண்டு பரிசுத்தனாயிருந்து அந்தச் சரித்திரத்தைப் படிக்கிறவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் பெருமாள் அஷ்டைசுவரியமும் ஆயுராரோக்கியமுங்கொடுத்து இரட்சித்தருளுவார்; அவர்களுக்கு யாகாதி கிருத்தியங்கள்பண்ணின பலனுங்கிடைக்கும்.

மேலும் இந்தச் சரித்திரத்தை விஷ்ணுஸ்தலங்களிலாவது சிவஸ்தலங்களிலாவது புண்ணியதீர்த்தங்களிலாவது படிப்பார்களாகில் அவர்களுக்குச் சகலபாக்கியங்களுமுண்டாகும்.

இந்தச் சரித்திரத்தைப் பக்தியில்லாதவனிடத்திலும் தெய்வநிந்தைப் பண்ணுகிறவனிடத்திலும் சோம்பலாய்க் கேட்கிறவனிடத்திலும் ஆசாரஹீனனிடத்திலும் படிக்கப்போகாது. ஒருவேளை பொருள் சம்பாதிக்கிறதின் நிமித்தம் படித்தபோதிலும் அவனுக்குப் பாவமேயல்லது புண்ணியமில்லை.

இந்தச் சரித்திரத்தைக் காமக்குரோதமில்லாத சாந்தனிடத்திலும் சிரத்தைப் பக்தியுள்ளவரிடத்திலும் கேட்கவேண்டியது. அப்படிப்பட்டவர்களுக்கே சொல்லவும் வேண்டியது. இந்தப்பிரகாரம் படிப்பவர்களும் கேட்பவர்களும் சித்தசுத்தியுடையவர்களாயிருப்பார்களாகில் அவர்களுக்குச் சகல சஞ்சிதவினைகளும் விடுபட்டுப்போய் மோட்சசம்பத்துண்டாகும்.

அல்லாமலும் அந்தச் சரித்திரத்தைப் பிராமணர்கள் கேட்டால் யாகஞ்செய்த பலனைப்பெறுவார்கள். க்ஷத்திரியர்கள் கேட்டால் இராஜ்ஜியத்தைப்பெறுவார்கள். வைசியர்கள் கேட்டால் திரவிய சம்பத்தைப் பெறுவார்கள். சூத்திரர்கள் கேட்டால் தேவபக்தியைப் பெறுவார்கள். சண்டைக்குப் போகிறவன் கேட்டால் ஜெயத்தைப் பொருந்துவான். கெர்ப்பவதியானவள் கேட்டால் நல்ல புத்திரனைப்பெறுவாள். கன்னிகையானவள் கேட்டால் நல்ல புருஷனைப்பெறுவாள். இந்தச் சரித்திரத்தை வைத்திருக்கிறவன் சித்தசுத்தியும் பக்தியும் புத்தியும் வித்தையும் சாந்தமும் இல்லாதவனாயிருந்தாலும் இந்த மகிமையினால் அவன்வீடு அளகாபுரியைப்போலவும் சுவர்க்கலோகத்தைப்போலவும் பிரகாசிக்கும். அவன் மறுபிறவியில் புண்ணிய ஜென்மத்தைப்பெற்று ஸ்ரீரங்கநாயகருடைய கிருபாகடாட்சத்தினாலே சகல ஐசுவரியமும்பெற்றுப் பரமபாகவதனாக ஸ்ரீவைகுந்தத்தைப் பெறுவானென்றறிக.

973

ஸ்ரீரங்கமகத்துவம் - முற்றிற்று.

